# இரவி

**கலை இலக்கிய காலாண்டுக் கதிர்**












## தமிழ் இலக்கிய உலகில் ஆழமாய்த் தடம் பதித்த சாகித்ய ரத்னா ஞானசேகரன்


சித்திரை ~ ஆனி 2026 கதிர் ~ 8

வெளியீடு: இரவி சஞ்சிகை இலங்கை

# இரவி

**கலை இலக்கிய**
**காலாண்டு இதழ்**

**பிரதம ஆசிரியர்: த. நரேஸ் நியூட்டன்**

**கதிர் 08**

**சித்திரை - ஆனி 2026**

உங்கள் படைப்புகளை அனுப்ப:

**iravi.magazine@gmail.com**

பக்க வடிவமைப்பு: நரேஸ்

ஓவியங்கள்: நரேஸ் வழிகாட்டலில் மைக்ரோ சொப்ட் - கோ பைலட் (செயற்கை நுண்ணறிவு)

இந்த இதழில் வெளியிடப்படும் சகல ஆக்கங்களுக்கும் அதனை எழுதியவர்களே பொறுப்புடையவர்களாவர் என்பதை இத்தால் அறியத் தருகிறேன்.

சகல ஆக்கங்களும் பாமினி யுனிக்கோட் எழுத்துருவில் தட்டச்சு செய்யப்பட்டு மென் பிரதியாக மின் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். தங்கள் பெயர் முகவரி மற்றும் புகைப்படம் ஆக்கத்துடன் அனுப்பி வையுங்கள்

புதுக்கவிதை

மரபுக் கவிதை

கட்டுரைகள்

சிறுகதைகள்

தொடர் கதைகள்

நேர் காணல்கள்


நூல் அறிமுகம்

நூல் ஆய்வு

சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கமான விடையங்கள்

ஓவியங்கள் போன்றவை வரவேற்கப்படுகின்றன. எழுதி எமது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

## இந்த இதழை தங்கள் படைப்புகளால் அலங்கரித்த ஆளுமைகள்



# இரவி கதிரின் உள்ளே....


**கதிர் வீச்சு**

பெருகிவருமம் முகநூல் தளங்களால் பயன் ஏதும் உண்டா

**நூல் ஆய்வு**

நிழலின் தனிமை

**கட்டுரை**

கனடாவில் ‘தைப்பொங்கல்’ நூல் வெளியீடு

திருக்குறளும் வாழ்வியலும்

திருக்குறள் அதிகாரம் 23 (சென்ற இதழ் தொடர்ச்சி)

நடு இரவில் தெரியும் சூரியன்

**சிறுகதை**

அம்மாவும் நானும்

காதலிக்க நேரம் வந்தாச்சு

மடை கடந்த மௌனம்

அமுதென்பதா விஷமென்பதா

இது ஒரு முடிவுரையல்ல ஒரு முகவுரை

குப்பை

பாசம்

காதல்

அந்த ஒரு நாள்

புத்தாண்டுக் கொண்டாட்டம்

**கவிதைகள்**

சொர்க்க தேசம்

கற்பனையில் நான்

எண்ணம்போல் வாழ்வு

பெரிதினும் பெரிது கேள்

காஞ்சி கிருபா கவிதை

பெண்மையின் ஒளி

பொங்க பான தூக்கிக்கிட்டு

எங்களுக்கும் காலம் வரும்

பெண்கள் நாட்டின் கண்கள்

இளைஞர்களே நாளைய தலைவர்கள்

விசித்திரம் ஒன்றுமில்லை

இயற்கையின் கொந்தளிப்பில்

துளசிகா கவிதை

உடைந்த உள்ளத்தை காதலித்துப்பாருங்கள்

பொய் முகங்கள்

**துளிப்பாக்கள் (ஹைக்கூ)**

**மரபுக்கவிகள்**

அடி மறி மண்டில ஆசிரியப்பா

நேரிசை வெண்பா

ப.்.ரொடை வெண்பாக்கள்

**நன்முனைக் கவிகள்**

**தொடர் நவீனம்**

கரிசல் மண்ணில் ஒரு காவியம் - பாகம் - 7

**கேளும்... கேளும்... கேட்டுப்பாரும்...**

உங்கள் கேள்விகளுக்கு ‘கீரர்’ பதிலளிக்கிறார்

**நிகழ்வுகள்**

ஐந்தாவது ஹைக்கூ மாநாடு—அறிவிப்பு

போரில்லா உலகு - சமாதான நடை பயணம்

எங்கள் படைப்புகளை கொண்டாடுவோம் - கூத்தாடி

எங்கள் கதைகள் உலக அரங்கில்....

சிலம்பம் போட்டி

# பெருகிவரும் முகநூல் தளங்களால் பயன் ஏதும் உண்டா

*உலகெங்கிலும் வாழும் என் என் இனிய தமிழ் நெஞ்சங்களுக்கு இதயம் நிறைந்த செந்தமிழ் வணக்கம்.. சித்திரைத் திரு நாளைக் கொண்டாடும் அனைவருக்கும் சித்திரைத் திருநாள் வாழ்த்தைத் தெரிவிக்கிறேன்.*

*மற்றொரு இதழுடன் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. தொடர்ந்து நீங்கள் அளித்துவரும் உளப்பூர்வமான ஆதரவுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். எமது இதழில் சர்வதேசமெங்கும் வியாபித்து வாழும் சகல சிறந்த எழுத்தாளர்களும் எம்மோடு இணைந்து பயணிக்க அன்புடன் வரவேற்கிறேன். தங்கள் இலக்கியப்படைப்புகளை எமது இதழில் பகிர்ந்து மேலும் அதிகப்படியான வாசகர்களைச் சென்றடையச் செய்யுங்கள். அனைவரும் தொடர்ச்சியாக உங்கள் ஆதரவை எமக்கு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் எமது வெளியீட்டை தொடர்கிறோம்.*

*இந்த இதழில் **“பெருகிவரும் முகநூல் தளங்களால் பயன் ஏதும் உண்டா”** என்ற விடயத்தைப்பற்றி எனது கருத்துகளை பகிர்ந்துகொள்ள விளைகிறேன். எமது வாசகர் ஒருவர் கேட்ட கேள்வி சிறிய மாற்றத்துடன் இங்கு ஆராயப்படுகிறது.*

*இன்று உலகம் மிக வேகமாக சவால்கள் நிறைந்த பாதைகளுக்கூடாக முன்னேறிவருகிறது. இந்த சவால்கள் நிறைந்த பாதையில் போட்டியிட்டு கணிசமான முன்னேற்றத்தை அடைய வேண்டுமானால் தகவல் தொடர்பு விரிவாக்கமும் வாய்ப்புகளைப் பயன்படுத்தும் திறனும் இன்றியமையாதது. தகவல்த் தொடர்ப்பு சார் விடயங்கள் பல்வேறு வடிவங்களில் உலகம் முழுவதும் வளர்ச்சிபெற்று வருகிறது. இந்த வடிவங்களில் ஒன்றுதான் முகநூல் தளங்கள். முகநூல் தளங்கள் எனக்குறிப்பிடுகையில் நேரடியான நட்புக் கோரிக்கை விடுக்கக்கூடிய, நண்பர்களை சேர்த்துக்கொள்ளக்கூடிய உறுப்பினர் பிரதான விபரப்பக்கம், உறுப்பினர் தங்களை அல்லது தங்கள் நாமத்தை பிரபல்யப்படுத்தும் நோக்கோடு பயன்படுத்தக்கூடிய பக்கங்கள் மற்றும் உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு பல்வேறு நிகழ்வுகளை செயற்படுத்தக்கூடிய குழுமப்பக்கங்கள் என்று வெவ்வேறு வடிவங்களில் உருவாக்கப்படுகின்றது. இவை யாவுமே பல்வேறு வகையான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய பயன் மிக்கவை களாகவே இருக்கின்றன. பயன் தரக்கூடிய இந்த மென்பொருளானது அனைத்து மக்களுக்கும் பயன் தரக்கூடிய வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே இது நன்மையானதே.*

*இது பயனுள்ளதா? இல்லையா? என்பது பயன்படுத்துபவர்கள் தங்களை நிலைமையிலிருந்து பார்க்கும்போதுான் தெளிவாகப் புலப்படும். இதில் பலவேறு நோக்கங்களையுடையவர்கள் உறுப்பினர்களாகின்றனர். நல்ல நோக்கத்தோடு உறுப்பினர்களாவோருக்கு இது நன்மையே அளிக்கிறது. தவறான சிந்தனைகள் நோக்கங்களோடு உள் நுளைபவர்களும் பயன்படுத்துபவர்களும் இதனுடைய பயன்பாட்டை தங்கள் தவறான நோக்கங்களுக்கு பயன்படுத்த விளைகையில்தான் இது பல இடையூறுகளை நல்ல நோக்கத்தோடு பயன்படுத்துபவர்களுக்கும் ஏற்படுத்துகிறது என்பதே பொருத்தமானதாக இருக்கும்.*

*வியாபார உலகில் தொடர்பு வலையமைப்பு என்பது இன்றியமையாதது. இந்த தொடர்பு வலையமைப்பை விருத்தி செய்வதற்கும் வியாபாரத்தை விஸ்தரித்து வாடிக்கையாளர் மற்றும் நுகர்வோரின் எண்ணிக்கையை அதிகரித்து தங்கள் உற்பத்தி மற்றும் சேவைகளை நுகர்வோரைச் சென்றடையச் செய்வதற்கும் முகநூல் தளங்கள் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றன. அத்தோடு இன்று முகநூல் உருவாக்க நிறுவனம் இதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு ஒரு பிரத்தியேகமான வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு எதுவான வாய்ப்பை வழங்கியிருப்பதும் மிகவும் நன்மை தரக்கூடிய ஒரு விடயமே. இங்கு பல்வேறு வகையான கட்டுரைகள், பத்திகள், சினிமா சார் விடயங்கள், அரசியல் சார் விபரங்கள், உலக நடப்புப் பற்றிய பல தகவல்கள், வரலாறு சார்பான தெளிவான விளக்கங்கள், வாழ்க்கை முறை, சமையல் விடயங்கள், சிறுகதைகள் மற்றும் ஆன்மீகம் சார்பான பல விபரங்கள் என்று பல விடயங்களை அவ்வப்போது அறிந்துகொள்ள சிறந்த ஊடகமாகவும் அமைந்திருப்பது மிகச்சிறந்த பயனென்றே கொள்ளத்தக்கது..*

*இங்கு பயணிப்பவர்களில் கற்றவர்களுக்கு நிகராக கல்வி கற்காதவர்களும் பல தகவல்களை பகிர்ந்துகொள்வதோடு கற்காதவர்கள் தெரியாத பல விடயங்களை இலகுவாக கற்றுக்கொள்வதற்கு இது சிறந்த வசதிகளை வழங்கக்கூடிய ஒரு தளமாகவே அமைந்திருக்கிறது. கற்றோர்கள்கூட தாம் அறிந்திராத பல புதிய விடயங்களையும் தகவல்களையும் உடனுக்குடன் அறிந்துகொள்வதற்கு முகநூல் ஒரு சிறந்த வாய்பாகும்.*

ஆகவே பெருகிவரும் முகநூல் தளங்களால் பயன்தான் அதிகமாக இருக்கிறது என்பதை சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ளலாம். அதனை பயனன்படுத்துவதில்தான் சில தவறான நோக்கமுடையவர்கள் தங்கள் பதிவுகளுக்கூடாக நல்ல நோக்கத்தோடு பயணிக்கும் பலருக்கு பல இடையூறுகளை உருவாக்கி வருகிறார்கள். இவ்வாறு குறிப்பிட்ட சிலர் செய்கின்ற விரும்பத்தகாத செயல்களால் ஒரு சிறந்த மென்பொருளை நாம் பயனற்றது என ஒதுக்கிவிட முடியாது.

அடுத்து முகநூல் குழுமங்கள் என்ற விடயத்தை எடுத்துக்கொண்டால் அந்த குழுமங்களும் பல்வேறு வகையான நல்ல நோக்கங்களையுடையவையாகவே ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டுவருகின்றன. எழுத்தாளர்களை உருவாக்குவது, கவிஞர்கள், கட்டுரையாளர்கள், திறனாய்வாளர்கள், பட்டி மன்றப்பேச்சாளர்கள், கருத்தரங்க பேச்சாளர்கள் என்று இலக்கிய மேம்பாட்டில் சிறந்த பணியை இந்தக் குழுமங்கள் ஆற்றிவருவது கண்கூடாக பார்க்க முடிகிறது. இவர்களுக்கு பல்வேறு வகையான அங்கீகாரங்களை வழங்குவதன் மூலம் அவர்களை மென்மேலும் ஊக்கப்படுத்தி அவர்களை தங்கள் படைப்புகளை நூலுருவாக்கி வெளியீடு செய்யவும் வழிவகுத்திருக்கிறது முகநூல் குழுமங்கள்.

தனித்திருக்கும், தமது முதுமைக்காலத்தில் உறவுகளின் கவனிப்புகள் குறைந்து ஏக்கத்துடனிருக்கும் பல முதியவர்களை முகநூல் குழுமங்களில் காணலாம். இவர்களின் பங்குபற்றும் ஆர்வம் வார்த்தைகளால் சொல்லிவிடக் கூடியதல்ல. அதுமட்டுமன்றி குழும நிகழ்வுகளில் அவர்கள் பங்குபற்றும்போது அவர்களுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியும், பங்குபற்றுவதற்கென அவர்கள் பெற்றுக்கொள்ளும் அங்கீகாரமும் அவர்களை ஆற்றுப்படுத்தி உற்சாகமடைய வைப்பதோடு இவர்களில் பலர் இலக்கிய உலகிலும் தங்களை அடை யாளம் காட்டி படைப்பாளர்களாக முத்திரை குத்தப்பட்டு வலம் வருகிறார்கள். இது சாதாரணமான ஒரு விடயமல்ல. ஆயிரக் கணக்கானவர்கள் இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டவர்களாக உருவாகியிருப்பது நன்மையான விடயம்தானே.

இவை மட்டுமா இலை மறை காய்களாய் இருந்த பல திறன் வாய்ந்த படைப்பாளர்கள் முகநூல் குழுமங்கள் மூலம் இலக்கிய ஆர்வலர்களுக்கும் இலக்கிய ஆளுமைகளுக்கும் அடையாளம் காண்பிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தில் முக நூல் மூலமாக அறிமுகமாகிய பல படைப்பாளர்கள் சில முன்னணி ஊடகங்களால் அடையாளம் காணப்பட்டு அவர்களுடைய படைப்புகளை பணம்கொடுத்து தங்கள் ஊடகங்களில் பிரசுரிக்கும் அளவிற்கு அந்தப் படைப்பாளர்கள் இன்று பிரபல்யம் அடைந்துள்ளார்கள். இவ்வாறு முகநூல் தளத்தினால் நன்மைகளே அதிகமாக இருக்கின்றது என்பதற்கான ஆதாரங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

குழுமங்களில் சில குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கிறது. ஒரு சிலர் **ஒரு** குழுவை அமைத்து ஒழுங்காக பல நிகழ்வுகளை சரியான ஒழுங்குமுறையில் நடாத்துவதைவிடுத்து, பல குழுமங்களை அமைத்து ஒரே நபர்களை அவற்றின் நிர்வாகத்துக்குள் வைத்துக்கொண்டு, ஐம்பெரும் குழுமம், நாற்பெரும் குழுமம், முப்பெருங்குழுமம் என்று கூறிக்கொண்டு வலம்வருவது பலரிடத்தில் குழப்பத்தை உருவாக்கியிருக்கிறது. வெவ்வேறு நோக்கங்களையுடைய குழுக்களை அமைத்து அவற்றை ஒன்றுபடுத்தி நடாத்தினால் பரவாயில்லை. அதாவது இயல், இசை, நாடகம் போன்றவற்றை தனித்தனிக் குழுக்களுக்கூடாக செயற்படுத்தி அவற்றை ஒன்று சேர்த்து முப்பெரும் குழுமம் என்று அழைக்கலாம். சிறுகதை, கவிதை, கட்டுரை, மரபுக்கவி, ஹைக்கூ கவி, புதுக்கவிதை போன்றவற்றுக்கு ஒவ்வொன்றுக்கும் தனியான குழவை அமைத்து அவற்றை ஒன்று சேர்த்து பெரும் குழுமங்களாக அறிவிக்கலாம். இவை தவிர குழுக்களின் நிர்வாகத்தினருக்குள் இருக்கும் போட்டி, அவசியமற்ற முறையிலான நிதி வசூலிப்பு, அதிக நிதி கொடுப்பவர்களுக்கு குழுவில் அதிக ஆதரவும் அவர்களின் படைப்புகளுக்கு அங்கீகாரமும் வழங்குவது, நிறுவுனரையும், நிர்வாகிகளையும் புகழ்பவர்களை அதிகம் ஆதரிப்பதோடு அவர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதில் முன்னுரிமையளிப்பது, நிறுவுநர் நிர்வாகிகளின் படங்களை சகல பதிவுகளிலும் போட்டு தற்பெருமை காட்டுவது, விமர்சனங்களை யாராவது முன்வைத்தால் அவர்களை அவதானிக்கும் அனைத்து குழுக்களும் அவர்களை ஒதுக்கி கண்டுகொள்ளாமல் விடுவது. போன்ற பல தவறுகள் சில குழுக்களில் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த தவறுகள் இல்லாத சிறப்பான செயற்பாடுகளைகொண்ட குழுக்கள் பலவும் இருக்கின்றன என்பதையும் இங்கு கவனத்திற்கு அறியத்தருகிறேன்.

ஆகவே அடையாளம் காணப்பட்ட தவறுகளை தவிர்த்து திருந்தி செயற்படின் முகநூல் தளங்கள் முழமை யாக நன்மை தருவனவே என எடுத்துக்கொள்ளலாம். மாற்றுக் கருத்துகளும் பலரிடம் இருக்கும் அவற்றை எதிர்காலத்தில் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள். அவையே தவறுகள் தவிர்த்து சிறப்பான நடைமுறைக்கு வழிவகுக்கும்.

மீண்டும் மற்றொரு இதழில் வேறொரு தலைப்புடன் சந்திப்போம்.. இந்த இதழை உங்கள் நட்பு வட்டாரத்தில் உள்ள பலருடனும் பகிர்ந்து ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டி, இதுவரை நீங்கள் வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

அதுவரை நற்றமிழ் வணக்கத்துடன்

**பிரதம ஆசிரியர்**

**- நரேஸ் -**

# தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆழமாய் தடம் பதித்த சாகித்ய இரத்தினா ஞானசேகரன்


இலங்கையில் இருந்து வெளிவரும் 'ஞானம்' சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன் அவர்கள். இவர் இலங்கை அரசின் உயரிய விருதான **சாகித்ய இரத்தினா** விருதை வென்ற ஈழத்து இலக்கிய கர்த்தா. இவரை சந்திக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் பல தடவைகள் முயற்சித்தேன் ஏனோ வாய்ப்புக்கிட்டவில்லை. அதே போல் இவர் ஆசிரியராக இருந்து வெளியிடும் **'ஞானம்'** சஞ்சிகையில் எனது படைப்புகளை வெளியிட வேண்டும் என நினைத்தேன் ஆனால் அதுகூட கைகூடவில்லை. ஏதோ ஒரு வகையில் அது நடக்காமல்போனது மனதிற்கு வருத்தமே. ஆகையால் அவரைப் பற்றியதான ஒரு கட்டுரையை எழுதி வெளியிட வேண்டும் என எண்ணி அதைக் கைகூட வைத்திருக்கிறேன். இவர் தமிழ் இலக்கிய வளர்ச்சித்துறையில் ஆற்றிய பணிக்கு ஒரு ஆவணப்படுத்தலாகவாவது எனது ஆக்கம் இருக்கட்டுமே என்ற மன மகிழ்ச்சியோடு தொடர்கிறேன்.

தமிழ் இலகக்கியப் படைப்புலகத்தில் பவனிவரும் ஆளுமைகளில் இவரை அறியாதவர்கள் இருக்க வாய்ப்பில்லை. அதேபோல் **'ஞானம்'** சஞ்சிகை பற்றி அறியாதவர்கள் உண்டென்றால் அவர்களது இலக்கிய ஆர்வம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். **'ஞானம்'** சஞ்சிகையை இவர் ஆரம்பித்ததில் இருந்து மிக வேகமாக வாசகர்களையும் படைப்பாளர்களையும் அது சென்றடைந்தது. அதற்கு சஞ்சிகையில் எழுதி வரும் படைப்பாளர்களே சான்று.



**'ஞானம்'** என்ற பெயரிலான இந்த சஞ்சிகையை 2000ஆம் ஆண்டு ஆனி மாதம் ஆரம்பித்த டாக்டர் தி. ஞானசேகரன் அவர்கள் தியாகராய ஐயர் என்ற ஆலயக் குருக்கள் மற்றும் பாலம்பிகை ஆகியோருக்கு மகனாக 1941ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15ஆம் திகதி பிறந்தார். இவரது மனைவி ஞானலட்சுமி. இவரது மனைவியும் ஒரு எழுத்தாளராக சில படைப்புகளை வெளியிட்டுள்ளார். தமிழ் இலக்கியப் பணியில் பெரும்பங்காற்றிய முன்னோர்களில் ஒருவராகிய கணே-சய்யர் என்பார் இவரது பூட்டனார் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. இவர் தனது குல வழக்கப்படியான தொழிலை நாடாது இலக்கிய உலகிற்குள் பிரவேசித்தமை ஒரு சிறப்பம்சமாகக் கருதலாம். இவர் தொழில் ரீதியில் ஒரு ஆயுள்வேத வைத்தியராக பணியாற்றியவர். இவரது வைத்தியப் பணிகாரணமாக அதிக காலம் மலையகத்தில் செலவிட்டார். யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் என்ற சிற்றூரே இவரை இலக்கிய உலகிற்கு தந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தில் தனது ஆரம்பக் கல்வியை மேற்கொண்ட பின்னர் கொழும்பில் ஆயுள்வேத மருத்துவக் கல்வியை பெற்று மருத்துவரானார். மலையகத்தில் இவர் பெற்றுக்கொண்ட பல்வேறு விதமான அனுபவங்களே இவரை ஒரு எழுத்தாளராக வளர்த்தெடுத்தது.

இவர் தனது படைப்புகளை 1960களிலேயே சிற்பி சரவணபவன் வெளியிட்டுவந்த **'கலைச்செல்வி'** இதழில் எழுத ஆரம்பத்துவிட்டார் என்ற அபிப்பிராயம் பரவலாக இருக்கின்றபோதிலும் இவர் அதற்கு முன்னரே தனது மாணவ பராயத்திலேயே தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த **'கண்ணன்'** சிறுவர் இலக்கிய இதிழில் எழுதத் தொடங்கிவிட்டார். அவ்வாறு ஆரம்பித்த இலக்கியப் பணியினை 2026ஆம் ஆண்டு தனது இறப்புவரை தொடர்ந்தார். இவரது முதலாவது சிறுகதை **'பிழைப்பு'** என்ற பெயரில் **'கலைச்செல்வி'** சஞ்சிகையில்




வெளியாகியது. அதேபோல் **'உயிர்த்துணை'** என்ற சிறுகதை **'கலை மகள்'** சஞ்சிகையில் வெளியாகியது என அறிய முடிகிறது. இவர் இலங்கையின் முன்னணி பத்திரிகைகளாகிய 'வீரகேசரி', 'தினகரன்', 'சிந்தாமணி', போன்றவற்றிலும் 'கதம்பம்' மற்றும் 'கலசம்' போன்ற சஞ்சிகைகளிலும் தனது ஏனைய படைப்புகளை வெளியிட்டார்.

ஆசிரியர் ஞானசேகரன் பல படைப்புகளையும் முற்கூட்டியே வெளியிட்டிருந்தாலும் **'ஞானம்'** சஞ்சிகையே இவரை இந்தப் பரந்த உலகிற்கு படம்போட்டுக் காட்டியது. அதன் பின்னரே இவரது பெயர் உலகம் பூராகவும் வியாபித்தது. 1999ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு சென்ற இவர் அங்கு தனது அனுபவங்களையும் தான் கண்ட காட்சிகளையும் அழகிய பல வர்ண மலர்களினாலான மாலையாய்க் கோர்த்து வெளியிட்ட படைப்பு சில வாரங்கள் தொடர்ச்சியாக இலங்கை **'தினகரன்'** வார இதழில் வெளிவந்தது. இந்தப் பயணக்கதையை பின்னர் **'அவுஸ்திரேலியப் பயணக்கதை'** என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். இந்த நூலுக்கு பேராசிரியர் சி. தில்லைநாதன் அணிந்துரை வழங்கியிருந்தார். 1999ஆம் ஆண்டு மார்கழி மாதம் இந்த நூல் வெளியாகியது. இதே ஆண்டில் அவர் அங்கு நிகழ்த்திய நேர்காணல்களின் தொகுப்பு நூலையும் அதேபோல **'இணைந்த புரிதலும் பகிர்தலும்'** என்ற நூலையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவஸ்திரேலியாவில் **'அம்பி'** அவர்களின் பவளவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய ஞானசேகரன் அவர்கள் அங்கே அன்றைய தினம் அவுஸ்திரேலியாவின் இலக்கிய நண்பர்கள் வட்டத்தை உருவாக்கிவைத்தார். இதைத்தொடர்ந்து 2011 தை மாதத்தில் இவர் இணைப்பாளராக செயற்பட்டு முதலாவது சர்வதேச எழுத்தாளர் மாநாட்டை நடாத்துவதற்கு உறுதுணை புரிந்தார்.



மலையக உரிமைப் போராட்டித்தின்போது மலையக மக்களின் உரிமைக்காகக் குரல்கொடுத்து மரணித்த **சிவனு இலட்சுமணன்** என்ற தொழிலாளியை முன்நிலைப்படுத்தி **'குரதி மலை'** சரிதையாகத் தந்தார். இவருடைய முதலாவது சிறுகதைத் தொகுதி 1973ஆம் ஆண்டு **'காலதரிசனம்'** என்ற பெயரில் வெளிவந்திருந்தது. இவர் பல சிறுகதைப் போட்டிகளில் கலந்துகொண்டு வெள்ளிப் பதக்கம் உட்பட பல பரிசில்களைப் பெற்றுக்கொண்டு படிப்படியாக முழுமையாக தன்னை இலக்கிய உலகிற்குள் இணைத்துக்கொண்டவர். போட்டிகளுக்கு எழுதிய அனுபங்களின் பயனாக அந்த அனுபவங்களோடு வீரகேசரி பத்திரிகை நிகழ்த்திய நாவல் போட்டிக்கு **'புதிய சுவடுகள்'** என்ற நாவலை சமர்ப்பித்தார். இந்த நாவல் போட்டியில் பரிசு பெறவில்லை, ஆனால் இதே நூல் 1977ஆம் ஆண்டு இலங்கை அரசின் **தேசிய சாகித்திய விருதை** வென்றது பலரையும் வியப்பில் ஆழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

அவர் முதலில் பெற்ற தேசிய சாகித்திய விருது ஊக்கம் தரவே அதைத் தொடர்ந்து அந்த ஆர்வத்தோடு எழுதத் தொடங்கினார். அதன் வெளிப்பாடாக உருவாகியதுதான் **'குருதிமலை'** நாவல் இது ஸ்ரீமாவோ அரசின் போது இடம்பெற்ற மலையக மக்கள் உரிமைப் போராட்டத்தில் கொல்லப்பட்ட **சிவனுலட்சுமணனை** முன்நிறுத்தி எழுதப்பட்டது. பின்னர் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சியின்போது 1979இல் தேசிய சாககித்திய விருதை பெற்றுக்கொடுத்தது.

தொடர்ந்து இவரது எழுத்துருவாக்கத்தில் உருவாக்கப்பட்ட **'அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்'** என்ற கதைகளின் தொகுப்பு 'மல்லிகைப்பந்தல்' வெளியீடாக வெளிவந்ததோடு மட்டுமல்லாமல் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் ஒரு பாடநூலாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய வெளியீடாகிய **'குருதிமலை', 'லயத்துச் சிறைகள்'** மற்றும் 1996இல் வெளிவந்த **'கவ்வாத்து'** ஆகிய நூல்களில் மலையக மக்களின் வாழ்க்கை முறை, மொழி வழக்கு மற்றும் பண்பாடுகள் முதலானவற்றை காணமுடிகிறது. அதற்கு அவர் அதிக காலம் அந்தப் பிரதேசத்து வாழ்க்கை முறைகளுடன் தன்னைப் பிணைத்துக்கொண்டமையே காரணமாகும். **'குருதிமலை'** நூல் பற்றிய மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த விடயம் யாதெனில் அந்நூல் மதுரை அமெரிக்கன் கல்லூாயில் ஒரு பாடநூலாகத் தெரிவா-கியிருந்தது. **'லயத்துச் சிறைகள்'** மத்திய மாகாண கலாசார அமைச்சின் சாகித்திய விருதை பெற்றிருந்ததோடு இலங்கை இலக்கியப் பேரவையினால் சிறந்த நாவலுக்கான சான்றிதழையும் பெற்றுக்கொண்டது. இந்த நூல் 1994ஆம் ஆண்டில் வெளிவந்தது. **'கவ்வாத்து'** நூலும், தமிழ் நாடு சுபமங்களா இதழ், இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து நடாத்திய நாவல் போட்டியில் பரிசு பெற்ற நாவலாகும். அத்தோடு விபவி கலாசார மையம் வழங்கிய **தங்கச் சங்கு** விருதையும் 1997இல் மத்திய மாகாண **சாகித்திய விருதையும்** பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவரது **'புதிய சுவடுகள்'** என்னும் புதினம் 1977 இல் வெளியாகியது. இது வடபுலத்து சாதியம் சார்பான பிரச்சனைகளை பேசும் ஒரு நூலாக வெளிவந்திருந்தது.

இவரது ஏனைய படைப்புகளாக கால தரிசனம் - சிறுகதைகள் 1973இல் வெளிவந்தது, புரிதலும் பகிர்தலும் (நேர்காணல்) 1999இல் வெளிவந்தது, அவுஸ்திரேலியப் பயணக் கதைகள் - பயண இலக்கியம் 1999இல் வெளி வந்தது, கா. சிவத்தம்பி - இலக்கியமும் நேர்காணலும் 2005ஆம் ஆண்டு வெளிவந்தது, இதே ஆண்டில் வெளிவந்தது ஞானசேகரன் சிறுகதைகள், வட இந்தியப் பயண அனுபவங்கள் 2013இல் வெளி வந்தது, எனது இலக்கியத் தடம் - முதலாம் பாகம் 2013ஆம் ஆண்டு வெளிவந்தது போன்றவற்றைக் காணலாம். ஒவ்வொரு படைப்பும் வெவ்வேறு விதத்தில் இவருடைய படைப்பாற்றலை பன்முக வடிவில் வெளிப்படுத்துவனவாக அமைந்தவைகளாகும்.

"நீங்கள் நேரத்தை செலவளிப்பதற்காக இக்கதைகளை வாசிப்பதானால் தயவுசெய்து இப்போதே புத்தகத்தை மூடி வைத்துவிடுங்கள், எனது கதைகள் பொழுதுபோக்கிற்காக எழுதப்பட்டவை அல்ல. இக் கதைகள் யாவும் சாதாரண மனிதர்களின் பிரச்சனைகளை, அபிலாசைகளை, ஆசாபாசங்களை, உள்ளகப் போராட்டங்களை எடுத்துப் பேசுகின்றன. எனது கதைகள் யாவும் ஏதாவதுதொரு வகையில் சமூகத்திற்கு நன்மை பயக்கவேண்டுமென நான் விரும்புகிறேன்." என்பது வைத்தியர் ஞானசேகரன் அவர்கள் காலதரிசனம் சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையில் குறிப்பிட்ட முக்கிய கருத்து, இதன் மூலம் அவரது சமூக நலப் பார்வை எவ்வளவு மேலோங்கியிருக்கின்றது என்பதை நாம் கண்டுகொள்ளலாம்.

ஞானம் சஞ்சிகையின் 117வது இதழை **அருள்வாக்கி அப்துல் காதிர் புலவரின்** நூற்றாண்டையொட்டி அப்துல் காதிர் புலவர் பற்றியதான சிறப்பிதழாக வெளியிட்டதோடு, அப்புலவரை வெளி உலகிற்கு இதன் மூலம் காண்பித்ததோடல்லாமல் புலவரின் 11 நூல்களை தேடி வெளிக்கொணர்ந்து அதனை 292 பக்கங்கள்கொண்ட ஒரு தொகுப்பாக வெளியிட்டு புலவருக்கு பெருமை சேர்த்தார். இதன்பொருட்டு தெல்தோட்டை ஊடகமன்றம் இவருக்கு **'அருள்வாக்கி நேசன்'** என்ற சிறப்பு விருதை வழங்கி மதிப்பளித்தது.

இவ்வாறு சிறுகதை, குறுநாவல், நாவல் என்று பல படைப்புகளை வெளியிட்டு தமிழ் இலக்கிய உலகில் ஆழமாக தடம் பதித்த இவர் **'ஞானம்'** சஞ்சிகையை ஆரம்பித்து அதில் தனது முழுமையான ஈடுபாட்டையும் கவனத்தையும் வழங்கி பல இலக்கியப் படைப்பாளர்களுக்கு தளம் அமைத்துக்கொடுத்து முழு நேர தமிழ் இலக்கிய வளர்ச்சி செயற்பாட்டாளரானார். ஞானம் சஞ்சிகையை இவர் கொழும்பிலிருந்தே வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சஞ்சிகையின் செயற்பாடுகளோடும் ஏனைய தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணிகளோடும் தம்மை இணைத்து அவற்றில் ஈடுபட்டுக்கொண்டு தனது இறுதிக்காலம்வரை கொழும்பிலேயே வசித்தார். இவ்வாறு தமிழ் இலக்கிய வளர்ச்சிப்பணியில் தனது முழு நேர உழைப்பையும் வழங்கிவந்த இவர் தனது 84ஆவது அகவையில் 12 சித்திரை 2026 அன்று இவ்வுலகை நீத்தார்.

# இரங்கல் செய்தி - டாக்டர் தி. ஞானசேகரன்




ஈழத்து மூத்த படைப்பாளியும் இனிய நண்பருமான தி.ஞானசேகரன் அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்தது (12-4-2026) ஈழத்தமிழ் இலக்கிய உலகிற்குப் பெரும் இழப்பாகும்.

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனில் பிறந்த இவர் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார். ஆயுள்வேத வைத்திய கலாநிதியான இவர் இலங்கையில் இருந்து வெளிவரும் ஞானம் என்ற மாதாந்த இதழின் முதன்மையாசிரியராகப் பணியாற்றினார். இலக்கியத்திற்காக சாகித்யரத்னா விருது பெற்றவர். ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்களை மட்டுமல்ல புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் வெளியிட்டு அவர்களின் இலக்கிய ஆளுமையை உலகறியச் செய்தவர்.

திரு ஞானசேகரன் திருமதி ஞானம் ஆகியோர் கனடா நாட்டுக்கு வருகை தந்தபோது அவர்களுடன் பல சந்தர்ப்பங்களில் சந்தித்து உரையாடியிருக்கின்றேன். எங்கள் அழைப்பை ஏற்று கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் நிகழ்ச்சிகளிலும் அவர்கள் பங்குபற்றி இருந்தார்கள். உதயன் பத்திரிகைக்காக அவரை ஒரு நேர்காணலும் செய்திருந்தேன்.

'தமிழ் நாட்டில் என்னை அறிந்த அளவிற்கு ஈழத்து வாசகர்கள் என்னை அறிந்திருக்கவில்லை' என்று சொல்லி எனது ஆக்கங்களை இலங்கையில் அறிமுகம் செய்ய வேண்டும் என்று என்னை ஒருமுறை அழைத்திருந்தார்கள். அதனால் அவர்களின் அழைப்பை ஏற்றுச் சென்றிருந்தேன்.



ஞானம் இலக்கியப் பண்ணை சார்பாக கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் விழா ஒன்றை ஏற்பாடு செய்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், அறிஞர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்ட அந்த நிகழ்வில் எனது இரண்டு நூல்களையும் வெளியிட்டு, **'கதாவித்தகன்'** என்ற பட்டமும் எனக்கு அளித்தார்கள். அது மட்டுமல்ல, எனது 25வது ஆண்டு இலக்கியப் பணியைப்பாராட்டி **'ஆச்சரியப்பட வைக்கும் எழுத்தாளன்'** என்ற தலைப்பில் நேர்காணல் ஒன்றையும் எழுத்தாளர் கே.எஸ். சுதாகர் மூலம் ஏற்பாடு செய்து அட்டைப்பட நாயகனாக வெளியிட்டிருந்தார்கள். இதே போல 50வது ஆண்டு இலக்கியப் பணியைப் பாராட்டி அட்டைப்பட நாயகனாக்கியிருந்தார்கள்.

தன்னலமற்று இலக்கிய படைப்பாளிகள் அனைவரையும் இனம்கண்டு, அவர்களை அணைத்துப் பணியாற்றிய இவரது இழப்பு தமிழ் இலக்கிய உலகிற்கு பெரிய இழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய, அவரது குடும்பத்தினருடன் இணைந்து இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**- குரு அரவிந்தன் -**

# சொர்க்க தேசம்

- வைத்திய கலாநிதி ஜலீலா முஸம்மில் -

## கவிதை



1

இலங்கைத் தாய்நாட்டை நேசிப்பது கடமை
இயற்கை எழிலை சுவாசிப்பது புதுமை
இலங்கிடும் முத்தாய் இந்து சமுத்திரத்தில்
இறைவன் அளித்த இனிய சொத்தாகும்
இலட்சக் கணக்கில் விளைந்திடும் வளங்கள்
உச்சம் தொடுகின்ற உழுநில வயல்கள்
இழுக்கிலா தாயகம் இன்னுயிர் போலவே
ஈர்த்திடும் அழகினை ஏற்றமாய் வாழ்த்துவோம்

2

தேசத்தில் விளைந்திடும்
பவளமும் முத்தும்
தெப்பக்குளத்தில் ஓடும் தெளிந்த நீரும்
பசுமையில் விரிந்த தேயிலைத் தோட்டம்
பாயும் நதியோ குதித்து ஓட்டம்
விசும்பு தொடுகின்ற வியத்தகு மலைகள்
விளையாடிக் களிக்கும் மேகத்தின் அலைகள்
பசும்பொன் கூரையோடு தலதா மாளிகை
பார்த்து வியந்திட யானையின் தந்தம்

3

பச்சைக் கம்பளமாய் புல்லின் வெளிகள்
பாய்ந்து தெறித்திடும் அருவியின் துளிகள்
இச்சை ஊட்டுகின்ற இயற்கையின் நாடு
இசைக்கும் இன்னிசை எழிலின் பறவைகளோடு
நச்சில்லாக் காற்றை வழங்கும் காடு
நதிநீரில் மீன்கள் கும்மாளம் போடும்
அச்சம் இன்றி வாழ்ந்திடும் வீடு
அனைத்து மதங்களுக்கும் ஒன்றே கூடு

4

தென்னையின் தோப்புக்குள் தெம்மாங்கு கேட்கும்
தரித்திடும் பொந்தினிலே கிளிகளின் கூட்டம்
கிண்ணையின் பழங்கள் நதிக்கரையில் தொங்கும்
கீழ்த்திசை வானில் சுடரொளி எங்கும்
எண்திசை இயற்கை சுற்றுலா தலங்கள்
இயல்பிலே இரத்தினக்கல் கொழிக்கும் நிலங்கள்
கண்களைப் போல காத்திடல் வேண்டும்
காத்திர மரபுரிமை பேணிடல் வேண்டும்

5

பண்டைய வணிகத்தில் மிளிர்ந்திட்ட தளமே
பாராளும் அரசர்கள் விரும்பிட்ட நிலமே
எண்ணிலா பயணிகள் எப்போதும் வருகை
இலங்கை நாடு இன்பத்தின்
சொரூபம்
தன்னிகரில் அமைதி சூழ்ந்திட்ட நாடு
தேவனின் கொடைகள் நிரம்பிய
தேசம்
அன்னை அவளே கொள்ளை அழகு
ஆருயிர் போலே பேரன்பு செய்வோம்

6

நாலினம் வாழ்ந்திடும் நல்லொற்றுமை நாடு
நேசத்தில் திளைத்து பழகிடும் மக்கள்
நலிவற்ற நிலைபேற்றின் நித்திய நாடு
நாயகமாய் வீற்றிருக்கும் நல்லுயிர்த் தீவு
நலவாழ்வு ஈந்திட்ட அற்புத தேசம்
நிகர்த்த பற்றினில் எழுந்திடும் பாசம்
நாளொரு மேனியாய் வளர்ந்திடும் விருத்தி
நாமெலாம் வியந்து புகழ்ந்திட வேண்டுமே

7

குறிஞ்சியும் முல்லையும்
நெய்தலும் மருதமும்
கொட்டிய ரம்மியத்தில் பேரெழில் ஓவியமாய்
கறுவா ஏலம் முத்து மாணிக்கம்
கேள்வியில் எழுந்த சீரெழில் தாயகம்
துறைமுகங்கள் இயற்கையாய்
தோன்றிட்ட துவீபம்
திரைகடல் சூழ்ந்த தித்திக்கும் சொர்க்கம்
பாரினில் கேந்திர நிலையமாய்த் திகழ்ந்திட்ட
பெருமை சொல்வேன் பேரின்பம் கொள்வேன்

8

எல்லா மாந்தரின் உள்ளத்தைக் கவர்ந்து
இலங்குது எங்கள் இலங்கைத் திருநாடு
நல்லார் சொர்க்கமாய் மிளிர்ந்திடும் தேசம்
நானிலம் பார்த்திடப் பொங்கிடும் பரவசம்
பல்கோடி மக்களின் புனிதத் தீவு
பன்னூறு சிறப்புகள் தாங்கிய தேசம்
வல்லாள் என்று வாழ்த்துவோம் நாமே
வெற்றியின் தாயென போற்றுவோம் அவளை!!

# கனடாவில் ‘தைப்பொங்கல்’ நூல் வெளியீடு


**சுலோச்சனா அருண்**

சென்ற ஞாயிற்றுக்கிழமை 18-1-2026 அன்று கனடா எத்தோபிகோவில் உள்ள திஸ்டில் நகரமண்டபத்தில் கிராமத்து வதனம் தமிழ் பெண்கள் அமைப்பினரின் ஏற்பாட்டில் தைப்பொங்கல், மரபுத்திங்கள், மற்றும் நூல் வெளியீட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன.

மங்கள விளக்கேற்றி, தமிழ்தாய் வாழ்த்து, கனடா தேசியப்பண் ஆகியன இசைக்கப்பெற்றன. அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து கிராமத்து வதனம் தமிழ் பெண்கள் அமைப்பின் பாடலுக்கு, நடன ஆசிரியர் திருமதி தயாளினி ஜீனராஜின் மாணவிகளின் நடனம் இடம் பெற்றது. இந்தப் பாடலை அகணி சுரேஸ் எழுத, சி. சுதர்சன் இசையமைக்க, மயூரதி தேவதாஸ் பாடியிருந்தார். அடுத்து திருமதி கலைமகள் புஸ்பநாதனின் வரவேற்பு உரை இடம் பெற்றது.

நூல் வெளியீட்டு நிகழ்வில் கனடாவில் இருந்து வெளிவரும் இளையதலை முறையினருக்கான, எழுத்தாளர் குரு அரவ-ந்தன் அவர்களை முதன்மை ஆசிரியராகக் கொண்ட ‘வதனம்’ எட்டாவது இதழும், திருமதி கமலவதனா சுந்தா எழுதிய சிறுவர்களுக்கான ‘தைப்பொங்கல்’ நூலும் வெளியிட்டு வைக்கப்பெற்றன.

தைப்பொங்கல் சிறுவர் நூல் வெளியீட்டு நிகழ்வில் அறிமுக உரையைக் குடும்ப பல்வைத்தியர் திருமதி சுமதி செல்வா அவர்களும், ஆய்வுரையை கனடா, அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் வாசுகி நகுலராஜா அவர்களும், ஏற்புரையை நூல் ஆசிரியர் கமலவதனா சுந்தா அவர்களும் நிகழ்த்தினார்கள். தைப்பொங்கல் பற்றிய சிறுவர்களுக்கு ஏற்ற அழகிய வண்ணப்படங்களுடன் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் இந்த நூல் வெளியிடப் பெற்றது. மரபுத் திங்கள் மாதம் என்பதால், எமது கலாச்சாரத்தை ஏனைய இனத்தவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழியும் இந்த நூலில் இடம் பெற்றது. இதற்கான வண்ணப்படங்களை ஓவியர் பிரவாகினி தர்மலிங்கம் வரைந்திருந்தார். ஜே.ஜே பிரின்ரேஸ் அச்சடித்த இந்த நூலின் வடிவமைப்பை நவீனி இராசையா மற்றும் பிரவீனி இராசையா செய்திருந்தனர்.




வதனம் இதழ் வெளியீட்டின் போது அறிமுக உரையை கிராமத்து வதனம் பெண்கள் அமைப்பின் நிறுவுனர் கமலவதனா சுந்தா அவர்களும், ஆய்வுரையை கனடா, அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு அவர்களும், வெளியீட்டுரையை முதன்மை ஆசிரியரும் எழுத்தாளருமான குரு அரவிந்தன் அவர்களும் நிகழ்த்தினார்கள்.

முதன்மை ஆசிரியர் குரு அரவிந்தன் அவர்கள் தனது உரையில் ‘மூன்றாவது ஆண்டில் இளைய தலைமுறை-றயினருக்கான வதனம் இதழ் கால்பதிக்கிறது என்றும், 50 கனடா தமிழ் பெண்கள் ஒன்று சேர்ந்து தாங்கள் வாழ்ந்த ஊர்பற்றி எழுதிய தொகுப்பு மார்ச் மாதம் கிராமத்து வதனம் தமிழ் பெண்கள் அமைப்பினரால் வெளியிட இருப்பதாகவும், இது ஒரு சாதனை படைக்கும் நூலாக வெளிவர இருப்பதாகவும்’ குறிப்பிட்டார்.




இளைய தலைமுறையினரின் ஆக்கங்கள் தமிழில் இடம் பெற்ற இந்த வதனம் மலரின் இணை ஆசிரியராக பூமிகா அன்புதாசன் பணியாற்றினார். புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க வேண்டுமானால், இளையதலைமுறையினருக்கு ஊடகத்துறையில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இதுவரை எட்டு இணை ஆசிரியர்கள் எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களால் பயிற்றப்பட்டிருந்தனர். இந்த நிகழ்வின் போது கவிநயா விஜயதர்சன், தருண் செல்வம், அர்ச்சயா மோகன்குமார், நஸ்வியா சற்குணராசா, ஆகாஸ் ஞானவேலு, அபிராம் பிரதீபன், கீசன் தயாளன், பூமிகா அன்புதாசன் ஆகிய இணையாசிரியர்கள் அனைவரும் சபையோருக்கு அறிமுகம் செய்யப்பட்டுப் பூச்செண்டு கொடுக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் இருவர் இம்முறை பல்கலைக்கழக அனுமதி பெற்று பல்கலைக் கழகம் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து மரபுத்திங்கள் மாதம் என்பதால் சங்க இலக்கியத்தில் இடம் பெற்ற தமிழ் மக்களின் வாழ்விடங்களான ஐந்து நிலத்திணைகள் பற்றியும், தமிழ் இலக்கியத்திற்குப் புதிய வரவான பனிநிலமான 'ஆறாம் நிலத்திணை' பற்றியும் பார்வையாளர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் பெற்றது. இந்த நிலங்கள் பற்றி இளைய தலைமுறையினரே பார்வையாளர்களுக்கு விளக்கமும் கொடுத்தனர். இதைவிட இந்த நிலங்கள் பற்றி காட்சிப்படமும் காண்பிக்கப் பெற்றது. எழுத்தாளர் குரு அரவிந்தன் அறிமுகம் செய்த புதிய வரவான "ஆறாம் நிலத்திணை" பலரையும் கவர்ந்திருந்தது.

அடுத்து பொங்கல் பற்றிய சிறுவர் பாடல், காவடி ஆட்டம், நடனம், பேச்சு, கராட்டி போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றன. காப்பாளர் நவா கருணரட்ணராஜா, கவிஞர் அகணி சுரேஸ் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து மேரி தயாளனின் நன்றியுரை இடம் பெற்றது. இளைய தலைமுறையினரான கவிநயா வி ஜயதர்சன், தருண் செல்வன் ஆகியோர் நிகழ்ச்சியைச் சிறப்பாகக் கொண்டு நடத்தினார்கள்.

கனடா கிராமத்துவதனம் பெண்கள் அமைப்பினர், கனடா தமிழ் எழுத்தாளர் இணைய அங்கத்தவர்கள், கனடா கவிஞர் கழக அங்கத்தவர்கள், ரொறன்ரோ கல்விச்சபை, அறிவக ஆசிரியர்கள் மற்று பெற்றோர்கள், அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். பார்வையார்களுக்கு இனிப்புப் பொங்கலும், சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.






கவிதை

# கற்பனையில் நான்

– ஏ. எஸ்.சுந்தரராஜன் –

தகுதியுடையகுக்கு மட்டும்
ஆசைப்பட
முடிவுக்கான காத்திருப்பில்
உள்ளம் அமைதி கொள்ள
முன் அபிப்பிராயமின்றி
சொல்வதை உள் வாங்க
தகுதி உடையோரால்
கோரப்படுகின்ற
அத்தனை புத்திரீதியான
சரீர ரீதியான
பொருளாதார உதவிகளை
செய்ய
செல்வ செழுமை
செல்வாக்கு
கல்வித் தெளிவு
புத்தித்தெளிவு
பேச்சாற்றல்
எழுத்தாற்றலில் மேம்பட்டவர்களை
ஒப்பீடு செய்து
பொறாமை கொள்ளாமல்
இருக்க
தொடர் தோல்வியிலும்
விடாது முயற்சி செய்ய
வசை மொழியில்
அதையே நினைத்து
மனம் நோகமால்
இருக்க
வெற்றியும்
பாராட்டும்
அங்கீகாரமுமான
பொழுதுகளில்
அவைகள்
புத்திக்கு செல்லாமால்
இருக்க
அறியாத விஷயத்தை
இருப்பைக்காட்டிக்கொள்ள
பேசமால் இருக்க
மற்றவரின்
சாதனைகளை
சொந்த சோகம் ஒதுக்கி
பாராட்டு கொடுக்க
ஏக்கமும்
எதிர்கால பயமும் இல்லா
இந்த கணத்தில் மட்டும்
வாழும்
பள்ளிப்பருவம் செல்ல
இத்தனையும்
ஒன்று சேர
நான் மகான்
இல்லாததால்
கற்பனையில் நான்



- நயினை அரா -

மண்ணினில் நல்ல வண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணமே இதுவே என்று
எளிதினில் வாழ்வோம் ஆயின்
திண்ணமாய் நாங்கள் எல்லாம்
எண்ணம்போல் வாழ்வோம் அன்றோ...

பிறந்திட்டோம் பூமிதன்னில்
பிறப்பொடு பயன்களோடு
மறந்திடா மறைகள் தன்னை
மனதினில் மனனம் கொன்டு
அறந்தனில் நின்றோம் என்றால்
எண்ணம்போல் வாழ்வுகன்டு
எளிதினில் வாழ்வோம் நாமே.....

பெற்றவர் பெருமை கொள்ள
பெரும்பணி எமக்கே என்று
கற்றிட வேண்டும் கல்வி
களைந்திடும் தீயதெல்லாம்
மற்றவர் மீது எண்ணம் அவர் நலம்பெற
நாட்டம் வேண்டும்
உற்றவர் உறவுதன்னை
உவகை கொண்டணைத்தல் வேண்டும்

முற்றிலும் முறையாய் கண்டால்
கனிந்திடும் எண்ணம்போல் வாழ்வு...

செய்திடும் கருமம் தன்னில்
செயற்திறன் தர்மம் இன்றேல்
மெய்யினில் உழைப்பு இல்லை
இறைபலம் இனிதாய் இல்லை
பொய்த்திடும் போலி வாழ்வில்
வாழ்ந்தவர் வாழ்க்கை கன்டார்
வாழ்வதும் எண்ணம்போலே
வாழ்ந்தவர் அன்றோ என்றும்....
தன்வினை தன்னைத் தாக்கும்
தரத்தினில் குறையாதாக
முன்வினை வந்து முட்ட முழுவதும்
எண்ணமாகும்
வாழ்வதே வாழ்ந்தார் கண்டோம்
வரலாறது பாடமாகும்

தன்னிலை மாறி எண்ணம்
வாழ்வினில் மாற்றம் காண
வந்ததும் வரலாறாக படிப்பதும்
வாழ்வு தானே
எண்ணம்போல் வாழ்வு காண்போம்

# அம்மாவும் .... நானும்



– உமா சரவணன் –

“அம்மா.. அம்மா..நான் வந்துட்டேன் உங்களுக்கு தெரியலையா!.. ஏம்மா!! என்னை உங்களால பார்க்க முடியலையா?.. நான்தான் வந்துட்டேனே!..

இத்தனை நாள் எவ்வளவு அழுதீங்க? எத்தனை பேர் உங்களை அப்படி திட்டினாங்க. நான் வந்துட்டேன் கவலைப்படாதீங்க! ..அழுகாதீங்க! அம்மா.

அந்த “பாட்டியையும் ,அத்தையையும்” நான் வந்து பார்த்துக்கொள்கிறேன். உங்களை நான் கவனமாகப்பார்த்துக் கொள்கிறேன்! நீங்க அழுகாதீங்க மா. அப்பா.. ஏம்ப்பா ..அமைதியா இருக்கீங்க. அம்மாவுக்கு ஆறுதல் சொல்லுங்கள் அப்பா .“நான் ” வந்துட்டேன் என்று சொல்லுங்கப்பா. அம்மாவ அழ வைக்காமல் நான் வந்துடுவேன் பா! நீங்க சொல்லுங்கப்பா.

“அம்மா” எங்கேயாவது திருவிழாவுக்கு தான் போறாங்களா... இல்லை.. ஊர் விசேஷங்களுக்கு தான் போறாங்களா !!!எங்கேயும் அம்மா போக மாட்டேன் என்கிறார்களே!!! அது என்னால் தானே.



தினமும் கேட்பார்களே அம்மாவை, ஏன் இன்னும் வரவில்லை? ஏன் இன்னும் வரவில்லை?? என்று கேட்பார்களே.

அவர்களுக்கென்ன வந்தது? என் “அம்மாவை” இப்படி கேள்வி கேட்பதற்கு. நான் வந்து விட்டேன். வந்து அவங்களுக்கு நான் பதில் சொல்கிறேன் .

“என் அம்மாவை” நான் பார்த்துக் கொள்வேன்.

அப்பா ...அம்மாவை பார்த்து நீங்களும் அழுகி றீர்களா? வேண்டாம் பா. “நான் ”இங்கே தானே இருக்கேன். உங்களுக்கு தெரியலையா? இரண்டு பேரும் ஏன் அழுகிறீர்கள்.

ஒவ்வொரு நாளும், “அம்மா” தன்னை வருத்திக் கொள்வார்களே!என்னால் தானே வருத்திக் கொள்வார்கள் .

நான் வரவேண்டும் என்று தானே வருத்திக் கொள்வார்கள். எத்தனை தியாகம் செய்கிறாள் அம்மா.

எத்தனை விதமான மன அழுத்தங்கள் கொடுக்கும் சொற்கள், எத்தனை விதமான அறிவுரைகள், எத்தனை விதமான மருத்துவ சிகிச்சைகள், அப்பப்பா!!! என்னால் பார்க்கவே முடியவில்லையே என்னால்.

அதனால்தான் “அம்மாவை” கஷ்டப்படுத்தக் கூடாது! என்று நான் வந்து விட்டேன். எனக்கு இன்னும் கை, கால்கள் கூட வரவில்லையே!.. அம்மாவின் கண்ணீரை துடைக்க.

ஏன் ? “என்னால் எழுப்ப முடியவில்லை.” அம்மா ,என்னை தூக்குங்க!.. நான்தான் வந்து விட்டேன் உங்களுக்கு தெரியலையா ? விரதம் இருந்து உடம்பைக்கெடுத்துக் கொண்டார்களே அம்மா!. அப்பாவும் எத்தனை நாள் யாருக்கும் தெரி யாமல் கண் கலங்கி இருந்திருப்பார்.

“நானும் பார்த்தேனே! அவரின் அந்த இயலாத நிலையை.


“அம்மா ,என்னை” உணருங்கள். என் சுவாசம் உங்களுக்கு தெரியும். அப்பா...” அம்மாவிடம்” சொல்லுங்கள்.

அவங்களுக்கு நாளையில் இருந்து சந்தோஷம் மட்டும்தான் கிடைக்கப்போகிறது.

“அம்மா ”.. வயிற்றில் நான் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியோடு வளருவேன்.

உங்களின் கைகளில் தவழ்ந்து, உங்கள் அன்பைப்பெற்று நல்லபடியாக வாழவேண்டும் என்று ரொம்ப ஆசையாக இருக்கிறது.



**– இரமணி –**

# வந்தாச்சு

ஏதோ தற்செயலாக நிகழ்ந்த சந்திப்பு! அவன் மகேஷ், அந்த அபார்ட் மென்ட்டுக்குப் புதுசு. குடி வந்து ஒரு வாரம் தான் ஆகிறது. அம்மா விதவை.... “இவனுக்கு வேலைகிடைத்து சென்னைக்கு போகிறான். இனி நமக்கு கிராமத்தில் என்ன வேலை. அவனுக்கு ஒருத்தி வரும் வரையாவது சமைத்துப் போட வேண்டாமா.“

“டேய்... பாக்கிறது பாக்கறே... கொஞ்சம்பெரியவீடாவே பாத்துடு. உனக்கு கல்யாணம் ஆனா சவுரியமா இருக்கும்.” அதான் இந்த வீட்டைப் பார்த்து குடியும் வந்தாகிவிட்டது. காலையில் எழுந்தவுடன் வண்டியை (டுவீலர்) எடுத்துக் கொண்டு மார்க்கெட் போவான். காய்கறி, மளிகை சாமான் எல்லாம் வாங்கிட்டு வருவான். மாலையில் அம்மா ஏதாவது கோவிலுக்கு போய் வருவாள்.

வதனா...! அடக்கமான அழகான பெண். அப்பாவுக்கு அரசு வேலை. இ எம் ஐயில் இந்த ஃப்ளாட்டை வாங்கினார். ஒரே பெண். கல்லூரியில் எம் பி ஏ பண்ணுகிறாள். தினமும் காலையில் அப்பாவுடன் தரைத்தளத்தில் நடைப்பயிற்சி செய்வாள்.

சுமார் நூறு ஃப்ளாட்களைக் கொண்ட பெரிய அபார்ட்மென்ட். அடுத்த வீட்டில் யாரு... என்ன... எப்படி.... ம்...ஹூம்.... பழக யாருக்கும் நேரமில்லை. எல்லோரும் வேலை வேலை என்று பறப்பார்கள். ஞாயிறு ஒருநாள் விடுமுறை. அனைத்துப் புறாக்களும் கூட்டிலடைந்து விடும். அல்லது அவரவர் குடும்பத்துடன் சுற்றுலா, கோவில், குளம். பக்கத்து வீட்டுக்காரர்களுடன் பழகும் சந்தர்ப்பம் குறைவு.

இன்று வதனாவின் அப்பா, அலுவலக வேலையாக வெளியே போய்விட்டதால், தனியாகவே நடைப் பயிற்சிக்கு வந்தாள். இவளைத் தவிர நடை பயின்ற எல்லோரும் மூத்த குடிமக்கள். அப்படி இப்படி நடந்துவிட்டு பார்க்பெஞ்சில் அமர்ந்து அரட்டை. அரசியல் முதல் அடுத்தாத்து அம்புஜம்வரை அலசல்கள். வதனா வேக வேகமாக அபார்ட்மென்டைச் சுற்றிச் சுற்றி வருவாள். அப்பா உடன் இல்லாததால் வேகம் அதிகம்.

மகேஷ் தன் வண்டியை ஸ்டாண்ட் எடுத்துவிட்டு, பின்னால் நகர்த்தினான். இங்கே யார் வரப்போகிறார்கள் என்று சற்று அசால்டாகவே நகர்த்தினான். வேகமாக நடந்து வந்து கொண்டிருந்த வதனாவைக் கவனிக்காமல் அவளை இடிக்கும்

நிலைக்குச் சென்று விட்டான். தற்செயலாக அதைக் கவனித்ததால் வதனா "ஹலோ..... கவனம்" என்று குரல் கொடுத்தாள்.

மகேஷ், திடீரென அருகில் இனிமையான குரல் கேட்கவே, வண்டியை நிறுத்தி திரும்பிப் பார்த்தான். அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. நாம் காண்பதென்ன கனவா அல்லது நனவா. நம் கண் எதிரே நிற்பது மண்ணுலக மங்கையா, விண்ணுலக நங்கையா..... ஆஹா.... அப்சரஸ் அருகில் வந்தாளா.... ?

"ஸாரி.... மேடம்.... பார்க்கலே"

"அதான் தெரியுதே.... நல்ல வேளை...."

"ஆமாம்..... இஙகதான் இருக்கீங்களா?"

"என்ன அசட்டுத்தனமான கேள்வி... சரி வண்டியை எடுங்க"

அசடு வழிந்து கொண்டே வண்டியைக் கிளப்பினான் மகேஷ்.

அது ஒரு மாலை. வதனாவும் தாயாரும் கோவிலுக்குக் கிளம்பினார்கள். லி∴ப்டில் தரைத்தளம் வந்தவர்கள் ரோட்டை நோக்கி, நடக்கத் தொடங்கினர். அப்போது மற்றொரு பிளாக்கிலிருந்து மகேஷின் அம்மா கோவிலுக்கு வந்து கொண்டிருந்தாள். வதனாவின் அம்மாவைப் பார்த்து சிரித்தாள் மகேஷின் அம்மா.

"கோவிலுக்கா...."

"ஆமாம்.... நீங்க...."

"கோவிலுக்குத்தான்... நாங்க இங்கே வந்து ஒரு வாரம் தான் ஆச்சு.... கிராமத்துல இருந்துட்டு.... இங்கு வந்ததுல.... மனுஷாளையே.... பாக்க முடியலே..... எல்லாரும் ரொம்ப பிஸியாக இருக்கா...."

"ஆமாம், அப்படித்தான்.... யாரும் லேசுல பழக மாட்டாங்க.... பழகினா... விட மாட்டாங்க"

"அப்படியா.... பாக்கலாம்.... இப்பத்தானே வந்திருக்கோம். போகப் போகப் பழகிடும்"

பேச்சு கோவில் வரை தொடர்ந்தது. பிரகாரத்தைச் சுற்றிவிட்டு ஓரிடத்தில் அமர்ந்தனர். மகேஷின் அம்மாவிற்கு வதனாவின் பேச்சு ரொம்பப் பிடித்தது.

(அப்ப கதையை முடிச்சிடலாமா. மகேஷும் வதனாவும் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்கன்னு.

அதெப்படி..... இப்பத்தானே பாத்திருக்காங்க...... அதுக்குள்ளே கல்யாணம்னா எப்படி.... இருங்க... அவசரப்படாதீங்க.)

மற்றொரு நாள் விடுமுறை. மகேஷ் வீட்டில் இருந்தான். அழைப்புமணி அடித்தது. "அம்மா...." என்றான். "யாருன்னு போய்ப் பாரேன்டா...." பார்த்தான்.... "அட..... நீங்களா..... என் வீடு எப்படி....?"

வதனா...!

"வெய்ட்.... வெய்ட்.... நான் கேட்கவேண்டிய கேள்வியை நீங்கள் கேட்டா....?"

"அப்படின்னா.... புரியலே....".

"இல்லே.... நான் கேக்குறேன்.... நீங்க இங்க எப்படி...?"

"நல்ல ஜோக்..... என் வீட்டுல வந்து.... அப்படின்னா.... எங்கம்மாவைத் தெரியுமா....?".

"நல்லா கேட்டீங்களே.... உங்கம்மாவா அவங்க.... அவங்கதான் எனக்கு இப்ப வழிகாட்டி.... நாளைக்கு நான் எப்படி குடும்பம் நடத்தணும் என்பதற்கு கைடு....".

"அப்ப நீங்க எக்ஸ்பர்ட் ஆகியிருப்பீங்க.... இனி தைரியமா குடும்பம் நடத்தலாம்.... ஐ மீன்.... நீங்க....".

"என்ன.... பேச்சு ஒருமாதிரியாக போகுது..... "

"இல்லையே.. நல்லாத்தானே போகுது... ஆமா ... எங்கே வந்தீங்க." கேட்டுக் கொண்டிருந்த அம்மா கலகல என சிரித்தவாறே....

"வாம்மா....வதனா..... மகேஷைத் தெரியுமா?"

"நல்லவேளை...தப்பிச்சேன்..

".. மோதலே.... நான் இன்னிக்கு நல்லா இருக்கேன்... இல்லைன்னா ஹாஸ்பிட்டல்ல என் கால் ஊஞ்சலாடிட்டிருக்கும்..." வதனா சிரிக்க... எல்லோரும் சிரிக்க..... !

(அப்படியே முடிச்சிடலாமா..... சே.... என்னங்க.... காதலிக்கவே ஆரம்பிக்கலே....

ஓகே....இப்போது எல்லோரும் அறிமுகமாகி விட்டனர்... ஸோ..... அவங்க ரெண்டு பேரையும் சேர்த்திடலாமே..... இல்லையே..... அதுல கொஞ்சம் சிக்கலிருக்குங்க… என்ன.....?)

இப்போது இவர்கள் அடிக்கடி சந்திக்கின்றனர். ஆனால் தனிமையிலல்ல...

"அம்மா.... ரொம்ப போரடிக்குதும்மா.... அப்படியே ஜாலியா.... மகாபலிபுரம் போகலாமா.... "

"போகலாம்..மகேஷ்..... ஆனா நாம்ப ரெண்டுபேர் மட்டுமா.... நல்லாருக்காதே...."

"ஒரு ஐடியா சொல்லட்டா..... வதனாவையும் கூட கூப்பிடலாமா....."

"அதெப்படி கரெக்டா சொல்றே..... ஆனா வதனாவை மட்டுமில்லே. அவ அப்பா, அம்மாவையும்...." மகேஷின் முகத்தில் அசடு வழிந்தது. எப்படியோ ஒரு நாள் புறப்பட்டனர்.

மகாபலிபுரம்..... காதல்கிளிகள் கொஞ்சி விளையாடுவதற்கென்றே படைத்தானோ பல்லவன்.... கல்லிலே கலை வண்ணம் கண்டான். சிலை வடித்தான் ஒரு சின்னப் பெண்ணிற்கு... கன்னியவள் வயதோ பதினாறு.... ஆண்டுகள் போயின அறுநூறு. இன்னும் அவள் முதுமை எய்தவில்லை. என்னதான் ரகசியம் புரியவில்லை. இது போல் அங்கு வரும் காதலர்கள் மிக இனிமையாக பொழுது போக்குவர். நேரம் போவதே தெரியாமல் சிற்பங்களின் அழகைப் பருகு-வர்.

நமது மகேஷும் வதனாவும் பெற்றோர்களுடன் நடக்கத் தொடங்கினர். மகேஷின் அம்மா... "டேய் நாங்க இந்த பெஞ்சுல உட்காரறோம். நீங்கள் எல்லா இடமும் சுற்றிப் பார்த்துவிட்டு வாங்க." பெற்றோர்களை விட்டுவிட்டு வதனாவும் மகேஷும் நடந்தனர்... பெரியவர்கள் நாசூக்குத் தெரிந்தவர்கள். இப்போது ஜோடிக்கிளிகள் சுதந்திரமாய்ப் பறந்தன. பலவித கருத்துப் பரிமாற்றங்கள். தங்கள் தங்கள் திறமைகள் குறித்து விவாதங்கள். குடும்ப நிலை பற்றிய கருத்துக்கள். கடைசியில்.... மகேஷ் "அப்போ எல்லா விதத்திலும் நாம ரெண்டு பேரும் ஒரே தண்டவாளத்துல பயணம் செய்யறோம். இதை வேறு விதமாக வித்தியாசமான கோணத்தில் பார்க்கலாமா?".

வதனாவுக்கு மகேஷ் எங்கு வருகிறான் என்பது ஓரளவு புரிந்தது. இருந்தாலும் "நீங்க எங்க வறீங்க" குறும்பாகக் கேட்டாள் வதனா.

"என்னங்க நம்மைப் பெற்றவங்க நாம தனியாகப் பேச வழிவிட்டு ஒதுங்கிட்டாங்க. அப்படீன்னா அவங்க மனசுல ஏதோ முடிவு பண்ணிருக்காங்கன்னு தெரியுதில்லே. அந்த முடிவை ஏன் நாம் அப்ரூவ் பண்ணக்கூடாது. ஐ மீன். நாம்ப ஏன் லவ் பண்ணக்கூடாது?"

"ஓஹோ... ஐயாவுக்கு அப்படி ஒரு ஆசை இருக்கோ.... ஏதோ போனாப் போகுது ஃப்ரண்ட்ஷிப்பா இருந்து தொலைப்போம்னு பாத்தா.... ரூட்... எங்கெங்கேயோ போகுதே.... நான் இந்த விளையாட்டுக்கு வரலை.... இந்தமாதிரி சபலம் வந்ததுன்னா.... என் படிப்புக் கெட்டிடும். எனக்கு வாழ்க்கையில் இன்னும் எவ்வளவோ சாதிக்க வேண்டி இருக்கு. இப்பவே காதல், கீதல் வலையில் சிக்கினா, தப்ப முடியாது"

"என்னங்க விளையாடறீங்களா.... இவ்வளவு தூரம் ஆசையா வந்திருக்கோம்..... ஒரு தடவை.... ஒரே ஒரு தடவை "ஐ லவ் யூ" சொன்னா குறைஞ்சா போயிடுவீங்க..."

"வேண்டாங்க.... இந்த விபரீத ஆசையெல்லாம் வேண்டாங்க. நாம பெஸ்ட் ஃப்ரண்டா இருப்போம். தாட்ஸ் இட்

ஆல்.... அதுக்கு மேல இப்ப வேண்டாம்"

"அப்படீன்னா.... ஏதோ உங்க மனசுலயும் இருக்கு..... ஆமா..... நம்ம பெத்தவங்க ஒத்துக்கிட்டாங்கன்னா...?"

"அதை அப்போ ஆலோசிக்கலாம்.... இப்ப புறப்படுவோம்."

ஆனால் அங்கே பெற்றோர்களிடையே ஒரு மினி நிச்சயதார்த்தமே நடந்திருந்தது.... இவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

அந்த ஜோசியர் முன் மகேஷின் அம்மா வெகு ஆர்வத்துடன், அவர் திருவாய் மலர்ந்து என்ன அருளப் போகிறார் என அவரது முகத்தையே பார்த்தவண்ணம் அமர்ந்திருந்தாள். ஆனால், ஜோசியர் என்னமோ பெரிதாகக் கண்டுபிடிக்கப் போவதுபோல் இரண்டு ஜாதகங்களையும் அக்குவேறு ஆணியாவேறாகப் பிரித்துப் பரிசீலித்துக் கொண்டிருந்தார். திடீரென நிமிர்ந்து அம்மாவின் முகத்தைப் பார்ப்பதும் பிறகு மீண்டும் ஜாதகத்தினுள் முழுகி முத்துக் குளிப்பதுமாக நேரம் போய்க் கொண்டிருந்தது. திரும்பவும் தலையை நிமிர்த்தி அம்மாவைப் பார்த்தவர், ஏனோ தனது முகவாய்க்கட்டையை வலது. கையால் சொறிந்து கொண்டார். (அதுதான் எல்லா டிவி சீரியல்லேயும் பாக்குறோமே...) திடீரென தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ஏதோ சொல்ல வருகிறார், என்ன... என்பது போல் ஆர்வமாக அவரது முகத்தைப் பார்த்தாள் மகேஷின் அம்மா.

"ஜாதகம் இரண்டுக்கும் எட்டுப் பொருத்தம் பிரமாதமா யிருக்கு"

"அப்படியா.... ரொம்ப சந்தோஷம்..."

“ஆனா.....”

“ஆனா, ஆவன்னா எல்லாம் வேண்டாம். சொல்லறதை சட்டுப் புட்டுனச் சொல்லுங்க.”

“ஏம்மா... அவசரப்படுறீங்க....அதுக்கு முன்னால் நீங்க பெண்ணுக்கு உறவா,.. பிள்ளைக்கா....?”

“நான் மகேஷோட அம்மாங்க....”

“அப்ப உங்ககிட்ட தாராளமா சொல்லலாம்...”

“என்ன சொல்லப் போறீங்க.... ஏதாவது பரிகாரம், கிரிகாரம்னா சொல்லுங்க... செய்துடறோம்”

“ஒன்னுமில்லே.... பெண்ணோட ஜாதகத்துல செவ்வாய் ரொம்ப ஸ்ட்ராங்கா நிக்கறார். பெண்ணுக்கு செவ்வாய் தோஷம்....”

“அதனாலென்ன.... பரிகாரம் ஏதாவது செய்துட்டாப்போச்சு...”

“இல்லீங்க.... அவ்வளவு ஈசியா சொல்லிட முடியாது.... பெண்ணுக்கு செவ்வாய் தோஷம்னா... பையனுக்கு ஆகாது.”

“அதுதான் ஏதாவது பரிகாரம் செய்திடலாம்”

“இல்லீங்க.... கலியாணம் ஆன ஆறுமாசத்துல மாப்பிள்ளை உசிருக்கே ஆபத்து வர வாய்ப்பிருக்கு”

“இப்ப என்ன சொல்ல வரீங்க”

“இந்தப் பெண் வேண்டங்கறேன்..... வேறே பெண்ணா கிடைக்காது”

“இல்லீங்க இந்தப் பெண் மாதிரி கிடைக்காது”

“அப்புறம்.... ஒங்க இஷ்டம்.... நாளைக்கு வந்து என்னைக் கேக்கப்படாது...”

“நான் வரேங்க” கிளம்பினாள் மகேஷின் அம்மா.

இதை எப்படி வதனாவின் பெற்றோரிடம் சொல்வது.? சொல்லாமல் மறைத்து கலியாணம் பண்ணிடலாமா. அப்புறம் மகேஷுக்கு ஏதாவது ஆச்சுன்னா.... ஐயையோ.... வேண்டாம்.... வேண்டாம்..... ஜாதகம் பொருத்தமில்லேன்னு சொல்லிடலாம். ஆனா.... மகேஷ்கிட்ட உண்மையை மறைக்கறது தப்பில்லையா. பாவம் அவங்க ரெண்டுபேரும் நெருங்கிப் பழகிட்டாங்க.... அவங்களைப் போய் பிரிக்கறதா...? மகேஷின் அம்மா குழம்பினாள்.

“அம்மா...” மகேஷ் வந்துவிட்டான்.

“என்னம்மா போன காரியம் காயா, பழமா... நீ போனேன்னா அது பழமாத்தானே இருக்கும்.... ஓ கே.... அப்ப வதனாகிட்ட “சக்சஸ்“ னு சொல்லவா....?”

“இல்லே மகேஷ்.... அவசரப்படாதே.... ஜோசியர் என்ன சொல்றார்னா...?”

“என்னவாம்..... பொருத்தமில்லை ன்னுட்டாரா?”

“இல்லைடா..... ஜாதகம் நல்லா பொருந்தி இருக்கு.... ஆனா....?”

“ஆனா...... என்னம்மா..... ”

“வதனாவுக்கு செவ்வாய் தோஷமாம்டா... கல்யாணம் பண்ணினா... உன் உசிருக்கு ஆபத்தாம்....” கல..கல....கல.....வென சிரித்தான் மகேஷ்.....

“அம்மா.... செவ்வாயாவது.... தோஷமாவது...... எல்லாம் காசுக்காகச் சொல்றது..... ஏதாவது பரிகாரம், அது இதுன்னு சொல்லி இருப்பாரே....”

“இல்லைடா..... இதுக்குப் பரிகாரமே இல்லையாம்.......அந்தப் பெண் வேண்டாம்னு சொல்லிட்டார்டா....”

“போம்மா.....இதையெல்லாம் நம்பிக்கிட்டு..... பொருத்தம் பாக்கணும்னே.... பாத்துட்டே... அதோட விடு..... மற்ற காரியத்தைப் பாக்கலாம்....”

“இல்லேடா..... கல்யாணத்திற்கப்புறம்...

உனக்கு ஏதாவது ஆச்சுன்னா.... என்னால் தாங்க முடியாதுடா.... உன்னைவிட்டா எனக்கு யாரிருக்கா.... வேண்டாம்டா.... சொன்னாக் கேளு.....”

“சரிம்மா..... நீ பயப்படறே..... ஆனா ஒன்னு.... வதனாகிட்டே பேசறேன்.... அவ ஒத்துக்கிட்டான்னா....ஓகே....”

பேசினான்.... இவனைவிட அதிகமாக கல.....கல....கல..... என்று சிரித்தாள் வதனா. “நான் அதுதான் அன்னைக்கே சொன்னேன். காதல், கீதல்னு வளத்துக்க வேண்டாம்னு..... இப்ப பாத்தீங்களா.... இதுமாதிரி ஏதாவது வரும்னு

எதிர்பார்த்துத் தானிருந்தேன்..... ஓகே.... அதனாலென்ன..... ஜஸ்ட் ஃப்ரண்ட்ஸா இருப்போம்..... அவ்வளவுதானே...."

"இல்லே வதனா....என்னால் அப்படி விட முடியாது. எனக்கு நீ வேணும் வதனா... உன்னைத் தவிர வேறொரு பெண்ணை என்னால் நினைக்கக்கூட இடமில்லை...."

"இல்லை மகேஷ்.... சூழ்நிலையைப் புரிஞ்சுக்கோங்க. பெரியவங்க மனசைத் துன்புறுத்தக் கூடாது. நாம் நாமாக இருப்போம்"

"இல்லை வதனா.... உன்னை முதன் முதலாய்ப் பார்த்ததிலிருந்தே... நீ எனக்கு கிடைக்க மாட்டியான்னு ரொம்ப எதிர் பார்ப்பை வளர்த்துக்கிட்டேன். அதற்கேற்றமாதிரி நாம் பழக நல்ல வாய்ப்புகள் கிடைத்தது. பெரியவங்களும் அதை மறுக்கலே... ஏதோ உரித்த வாழைப்பழம் வாயுக்குள் விழுந்து அது வயிற்றை அடையற நேரத்துல, வாந்தி எடுடா...ன்னா.... சே... முடியாது வதனா. நீ இதையெல்லாம் நம்பறியா...?"

"இல்லே மகேஷ்.... எனக்கு இந்த ஜாதகம் ஜோசியம் எதுலையும் நம்பிக்கை கிடையாது. ஆனா கடவுள் நம்பிக்கை உண்டு. நாம் செய்கிற ஒவ்வொரு செயலையும் கடவுள்தான் இயக்குகிறார் என்பதில் தீவிர நம்பிக்கை உண்டு. எனவே, இப்படித்தான் நடிக்கணும்னு இருந்தா அதை நம்மால் மாற்ற முடியாது. எதற்காகவும் பெரியவங்க மனசு கஷ்டப்படக் கூடாது...மகேஷ்"

"அப்ப ஒன்னு செய்யலாம்.... உங்கப்பா. அம்மாவிற்கு இந்த விஷயம் தெரிய வேண்டாம். எங்கம்மாவை நான் சமாளிச்சுக்கறேன்.... ப்ளீஸ்...வதனா... என்கூட கொஞ்சம் கோஆபரேட் பண்ணேன்....."

"நீங்க இவ்வளவு தூரம் சொல்வதால ஒத்துக்கறேன். ஆனா என் படிப்பு முடிந்து தான் திருமணம்.... ஓகேவா...."

"ஓகே"

எப்படியோ மகேஷின் அம்மாவின் அரைகுறை ஒப்புதலுடன் மகேஷ் வதனா திருமணம் இனிதே நடந்தது.

**(அப்பாடா.... ஒரு வழியா கதையை முடிச்சிட்டீங்க.....**

**யாரு சொன்னா..... செவ்வாய் தோஷம்.... என்ன பண்ணித்துன்னு தெரிய வேண்டாமா....?)**

இன்னிக்கு மகேஷ்...வதனா தம்பதியரின் 25வது திருமண நாள்.... தோளிற்கு மேல் வளர்ந்த ஒரு பையனும், (அமெரிக்காவுல இருக்கான்) +2 படிக்கிற பெண்ணும்..... தங்கள் திருமண நாளுக்கு மகேஷின் மகன் ஒரு ஸ்மார்ட்ஃபோன் குரியர் மூலம் பிரசன்ட் பண்ணினான். மகளுடன் கொடைக்கானலில் கேக் வெட்டி ஸ்டார் ஹோட்டலில் என் ஜாய் பண்ணுகிறார்கள்.

(அப்ப.... செவ்வாய் தோஷம்...? அதுதானே..... என்னாச்சு....?. எல்லாம் நம் மனசுல தாங்க..... நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும்..... எல்லாம் நலமே...!)

**- மு.மங்கையர்க்கரசி -**

## ஹைக்கூ கவிகள்

மரக்கிளைகளில் தொட்டில்கள்
அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன
கருத்தரிப்பு மையங்கள்

வன உயிரினங்கள்
தொடர்ந்து அழிந்து வருகின்றன
விவசாய நிலங்கள்

அடர்ந்த மரங்கள்
மழை பொழிந்திட உதவுகின்றன
சூழ்ந்த மேகங்கள்

தேர்தல் பரப்புரை
வாக்குறுதி வழங்கப்படுகிறது
ஓட்டுக்குப் பணம்

வானத்தில் இரவுகளில்
விண்மீன்கள் அமாவாசையிலும் ஒளிர்கின்றன
மின்மினிப் பூச்சிகள்

வானில் சூரியன்
தண்ணீரில் தெளிவாய்த் தெரிகிறது
மரத்தின் பிம்பம்

வானில் பறவைகள்
இரை தேடிக்கொண்டு இருக்கின்றன
நீரில் வாத்துகள்

ஓடையில் வெள்ளம்
தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது
நீர்மின் உற்பத்தி

# பெரிதினும் பெரிது கேள்

பெரிதினும் பெரிது கேள்

இருக்கும் இடம் தெரியாமல்
வாழ்ந்து விட்டுப் போவதற்கு
ஆறறிவு எதற்கு மனிதா?

மலைகளில் சிகரத்தைப் பார்
அலைகளைக் கடந்து
ஆழிக்குள் செல்!

விமானப் பயணம் போதாது
விண்கலத்தில் பயணிக்க
விடாமுயற்சியுடன் பேசு!

கோளாக சுற்ற விரும்பாமல்
கதிரவனாக ஆசைப்படு
மதியின் உச்சத்தை உரசு!

நள்ளிரவோ...நண்பகலோ...
உழைக்க மட்டும் தயங்காதே

சிறியதை விரும்பும்
சிந்தையுடன் செல்லாதே
பேராற்றல் உனக்குளுண்டு
பெரிதினும் பெரிது கேள்!

தோல்வியே நெருங்கினாலும்
வெற்றியின் வருகையைத்
தடுக்க முடியாது!

– பாக்கிய பாரதி –



கவிதை

# ஐந்தாவது ஹைக்கூ மாநாடு

**தமிழ் ஹைக்கூ: ஐந்தாவது உலக மாநாடு வரும் மே 17 அன்று புதுக்கோட்டையில் நடைபெறுகிறது**




புதுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம், ‘இனிய நந்தவனம்’ இதழ்,

தமிழ் ஹைக்கூ கவிதையாளர்கள் இயக்கம் இணைந்து நடத்தும் “தமிழ் ஹைக்கூ: ஐந்தாவது உலக மாநாடு - 2026“ வரும் மே 17 அன்று புதுக்கோட்டையில் நடத்துவதாக திருக்கோகர்ணம் ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிகுலேசன் மேனிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.



இக்கூட்டத்திற்குத் புதுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கவிஞர் தங்கம்மூர்த்தி தலைமையேற்றார். கவிஞர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்றார்.

தலைமையேற்ற கவிஞர் தங்கம் மூர்த்தி பேசுகையில், ”2022-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் திருச்சியில் “தமிழ் ஹைக்கூ: முதலாவது உலக மாநாடு“ நடைபெற்றது. பிறகு, அந்தமான், மதுரை, இலங்கை ஆகிய நாடுகளில் அடுத்தடுத்த மாநாடுகள் நடைபெற்றன. இந்த நான்கு மாநாடுகளிலும் கலந்துகொண்ட போது, ஹைக்கூ எனும் மூவரி ஜப்பானிய ஹைக்கூ கவிதைக்கு இப்படியொரு வரவேற்பா என வியந்துபோனேன்.

இன்றைக்கு உலகமெங்கும் இருக்கும் தமிழர்கள் பலரும் ஆர்வத்துடன் ஹைக்கூ கவிதைகளை எழுதுகிறார்கள். அவர்களுக்கு ஹைக்கூ பற்றிய தேடலைத் தூண்டும் வகையில் நடத்தப்படும் இந்த மாநாட்டில் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, குவைத், துபாய் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த ஹைக்கூ கவிஞர்கள் பங்கேற்கிறார்கள்.

புதுக்கோட்டை சத்தியமூர்த்தி நகரிலுள்ள மகாராஜ் மகாலில் வரும் மே 17-ஆம் தேதி நடைபெறவுள்ள ஐந்தாவது உலக மாநாட்டில் கவியரங்கம், கருத்தரங்கம், நூல் வெளியீடு, ஹைக்கூ கவிதைக் கண்காட்சி ஆகியன இடம்பெறவுள்ளன” என்றார்.

ஹைக்கூ மாநாட்டு வரவேற்புக் குழுவைக் கவிஞர் மு.முருகேஷ் முன்மொழிந்து பேசினார். மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவராக கவிஞர் தங்கம்மூர்த்தி, செயலாளராக கவிஞர் மகா.சுந்தர், பொருளாளராக சு.பீர்முகம்மது ஆகியோர் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் சா.விஸ்வநாதன், கணேசன், கவிஞர்கள் வம்பனார் அன்பழகன், முருகபாரதி, காசாவயல் கண்ணன், மலையப்பன், அரசு வழக்கறிஞர் மு.செந்தில்குமார், உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிறைவாக, கவிஞர் மகா.சுந்தர் நன்றி கூறினார்.

# காஞ்சி கிருபா கவிதைகள்

சாதிச் சண்டையில்
மனிதன்
உள்ளம் பதைத்தான்

சாதிகள் வேண்டாமென
சமத்துவ கருத்துக்கள்
விதைத்தான்...

சாதிகள் தான் வேண்டுமென
உயர்ந்த நெறிகளை
உணர்வின்றி உதைத்தான்!!

சாதி தீயினை
அணைக்க வந்த
சமத்துவ நீரினை
கொட்டி சிதைத்தான்!!

மானுடம் நேசிக்கும்
மனிதத்தை
மண்ணில் புதைத்தான்!!

நான் தான்
தான்தான்
என்றான்!!

தன் சாதியோடு
மட்டுமே நின்றான்



– காஞ்சி கிருபா –

# திருக்குறளும் வாழ்வியலும்

வள்ளுவர் கூறிய வாழ்வியல் நீதிகளாக, கல்வி அறிவுகளால் ஏற்படும் நன்மை, நீத்தார் பெருமை, இல்வாழ்க்கைநெறி, இல்வாழ்வான், இல்லாளுக்கு இருக்கவேண்டிய பண்புகள், விருந்தோம்பலின் சிறப்பு, பொதுவாக மனிதனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் அனைத்தும் திருக்குறளில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

வள்ளுவர் கூறிய வாழ்வியல் நீதிகள் யாவும் உலகில் மனிதனாகத் தோன்றிய அனைவருக்கும் உரிய வாழ்வியல் நீதிகளாக அமைந்திருப்பதே திருக்குறளின் சிறப்பாகும்.

இதன் அடிப்படையில் திருக்குறளையும் வாழ்வியலையும் நோக்கும் போது

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்கே உலகு” என்னும் கடவுள் வாழ்த்துக்கேற்ப



**- கமலவதனா- சுந்தா -**

அறவழியில் மனிதர் உறுதியாக நிற்றலே நிறைந்த வழிபாடு என்பதும் சிறந்த இறைவாழ்த்தாகிறது. கடவுள் வாழ்த்துக்கும் அறங்களுக்கும் உள்ள இணைப்பு பற்றிய தண்டபாணி தேசிகர் கருத்து நினைக்கத்தக்கது: ”அறங்கள் நிலைக்க வேண்டுமானால் கடவுள் உணர்ச்சி இன்றியமையாதது கடவுள் வாழ்த்துதலும் ஓர் அறமாம் என்று கருதியே இவ்வதிகாரம் படைக்கப்பட்டது ”எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்று அஞ்சி அங்கங்குலைவது அறிவு” அதாவது எங்கும் நிறைந்த இறைவன் காண்கின்றானென்று நடுங்கி, உடல்பதறுவதே அறிவாகும் என்று குமரகுருபர் கூறியதுபோல கடவுளுணர்வு இருந்தாற்றான் அறங்கள் யாவும் நின்று நிலவும் என்பதற்காகவே கடவுள் வாழ்த்தையும் முதலறமாகக் கருதுகிறார் வள்ளுவர்.

.தொடர்ந்து வாழ்வியலைச் கூறவந்த வள்ளவர் மனிதனையும் சமுதாயத்தையும் செந்நெறிப்படுத்தும் ஒழுக்க நெறியே சிறந்த அறம் எனக்கூறுகிறார்

வரைவிலக்கணம் கூற முடியாத அறத்திற்கு வள்ளுவர் சில சொற்களால் மிகச் சீரிய முறையில் இலக்கணம் கூறியுள்ளார் மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன் அதாவது உள்ளத்தில் குற்றம் இல்லாமலிருத்தலே அறமாகும் என்ற மாட்சிமையான குறள் தந்தார்.

தனி மனிதன், குடும்பம் முதலியவற்றை மையமாகக் கொண்ட அறத்துப்பால் மனிதனின் தனி வாழ்க்கையை விளக்கி அன்பை வளர்த்து அறத்தைப் போற்றி மனத்தூய்மை பெற்று வாழும் வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்கிற முப்பாலிலுமே அறமே நிறைந்து நிற்கிறது. இன்பமும் அறம் சார்ந்த இன்பமாகக் கருதுதல் வேண்டும் என்று வள்ளுவர் எண்ணினார்.

அறத்தால் வருவதே இன்பம் அறத்தை மறத்தல் ஒன்றே ஒருவனுக்கு கேடு விளையப் போதுமானது “ஈன்றாள் பசி காண்பாள் ஆயினும் சான்றோர் பழிக்கும் வினையைச் செய்யாதே” என்பது குறள் தரும் அறவுரையாகும்.

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது” ஒரு இல்லறத்தான் எவ்வாறு வாழ வேண்டுமென்பதை இக்குறள் கூறுகின்றது. இல்லறத்திலிருந்து வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துக்கு ஒப்ப கருதப்படுவான் இல்வாழ்வில் நின்று ஒழுகுபவர்கள், ஒப்புரவறிந்து, ஈகையால் புகழ் பெற்று, அதனையும் கடந்து அருள் முதலிய விரதங்களை மேற்கொண்டு, தவத்தால் நீங்கப் பெற்று, நிலையாமையை உணர்ந்து, துறவு நிலை மேற்கொண்டு, எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்றுணர்ந்து, அம்மெய்யறிவால் துன்பத்துள் துன்பம் விளைவிக்கும் அவாவை அழித்து, சிறப்பெனும் செம்பொருள் காண்கிறார்கள். அறஒழுக்கத்தின் பயன் சிறப்பும் செல்வமும் ஆகும். இதுவே அறத்துப் பால் எமது வாழ்க்கையை ஒழுக்கநெறி தவறாது வாழவேண்டும் என உணர்த்துகிறது.

முப்பால்களில் ஒன்றான பொருட்பாலில் வாழ்வியல் குறித்துப் பார்க்கின்ற போது குறித்து ஆராய்ந்தால் ஒரு நாட்டின் அரசியலையும் ஒழுங்குமுறைச் சமுதாய வாழ்வினையும் கூறுவதோடு. மட்டுமல்லாது

ஒரு நாட்டின் தலைவனாக விளங்கும் அரசன் அரசனாக மட்டுமல்லாமல் அரசருள் தலைவனாய் விளங்க வேண்டும் எனக் கூறும் வள்ளுவர் அரசர்கட்குரிய பண்புகளை ஒரு பக்கமும், அவர்தம் செயல் திறங்களைப் பிறிதொரு பக்கமுமாகக் அரசியலில் கூறிச் செல்கின்றார். அரசு முறை, ஆள்பவன் என்பவற்றை

எல்லாம் கடந்து ஆட்சியின் பொதுத்தன்மைகளை மட்டும் கூறுவது பொருட்பாலின் தனிச் சிறப்பாகும்.

நல்ல குடிமக்கள் உருவாக்கப்பட்டால் அதுவே நாட்டின் அரசியலின் பெருமையும் பயனும் ஆகும். இதனாலேயே குடிச் சிறப்பை உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் பொருட்பாலின் இறுதிப்பகுதியாக விளங்கும் குடி இயலில் வள்ளுவர் தெளிவாக விளக்குகின்றார்.

“கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டது அமைச்சு”

ஆலோசனை சொல்லக்கூடிய அமைச்சருடனே, பகைவர் ஊறு செய்யலாகாத அரணிலிருந்து, படையையும் நட்பையும் துணயாகக் கொண்டு, பொருள் செய்யப்படவேண்டும் என்பது பொருட்பாலின் முற்பகுதியின் கருத்து.

“ பிரித்தலும் பேணிக்கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல அமைச்சு”

“ அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட

மறை பிறர்க்கு உய்த்துரைக்கலான்”

கயமை ஒழிந்து, குடிகள் தங்கள் குடிமைக்கேற்ற குணங்களையுடையராய், பொருளின் மையால் நல்குரவெய்தி இரவாமல், தங்கள் குடியை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது பொருட்பாலின் பிற்பகுதியின் கருத்து.

இது இரண்டும் இல்லாமை எமது தாயகம் இன்று நல்ல தலைனும் இல்லை ஆலோசனை வழங்குவதற்கு ஒரு அமைச்சரவையும் இல்லாமல் காட்டிக்கொடுப்பும், கயமையுமாகச் சீரழிவதைக்காணலாம், எனவே புலம் பெயர் நாட்டில் சீரிய அரசியல் நெறியால் அமைதி பெற்றோங்கிய சமுதாயமாக, பண்பாட்டில் சிறந்து விளங்கி பொருட்களை ஆக்கிப் பகுத்துண்டு பயன்பெறும் சமுதாயமாக வாழவேண்டும்!

நிறைவான காமத்துப் பாலில் தொல்காப்பியரின் தொல்காப்பியமும் சங்கிலக்கிய நூல்களான, நற்றிணை, குறுந்தொகை, அகநாநூறு, முதலிய தொகை நூல்களும் கூறும் அகப்பொருள் மரபுகளின் சாரமாக அமைந்துள்ளது. களவு, கற்பு எனக் காதலன் காதலியின் இல்வாழ்க்கை உலக வழக்கொடு பொருந்த ஒரு நாடகப் பாணியில் உருவகிக்கப்பட்டுள்ளது.

குறளின் காமத்துப்பால் சங்க அக இலக்கியங்களின் கருத்துப் பிழிவாய் அமைந்து கற்பனைவளமும் இலக்கியச்சுவையும் சேர்ந்து காதலரின் கூடல், பிரிதல், ஊடல் என்ற பிரிவுகளில் காதல் நாடகமாய் அமைகிறது. காமத்தினை இவ்வளவு தூய்மையாகப் பாடமுடியுமா என்று எல்லாரும் வியக்கும் வண்ணம் உள்ளது இப்பகுதி. காதலரின் பண்பட்ட நெஞ்சத்தை விளக்கும் கற்பனை கலந்த உணார்ச்சிக் குவியலாகத் தீட்டப்பட்டு அன்பும் அறனும் ஒன்றிய இன்பநெறியாய் ஒளிர்கிறது இது. காமத்துப்பாலில் வள்ளுவரின் கலையுள்ளம் வெளிப்பட்டு அவரை ஒரு தலை சிறந்த இலக்கியச் செல்வராக அடையாளம் காட்டுகிறது. காமத்துப் பால் சொல், பொருள், உவமை நயம் கொண்டு, மகிழ்ச்சி, இரங்கல், சோகம், காமம், உளவியல் இவற்றை அடக்கி இலக்கியச்சுவை ததும்பப் பாடப்பட்டுள்ளது.

உலகத்திலுள்ள எல்லா உயிர்கட்கும் காம உணர்ச்சி இயல்பான ஒன்று பசிப்பதுபோல், தாகம் எடுப்பதுபோல் ஏற்படும் ஓர் உணர்வு. மனிதர்கள் ஆணும் பெண்ணுமாகக் கூடி மகிழ்வது இயல்பாகும். இக்கூடுதலில் விளையும் உள்ளப் புணர்ச்சியையும் உடல் புணர்ச்சியையும் கூறுவது காமத்துப்பால். கூடுதல் என்னும்போது பிரிதலும் நேர்கிறது. கூடுதலால் தோன்றும் இன்பமும் பிரிதலால் உண்டாகும் துன்பமும் மாறி மாறி வரும் நிலையினை நெஞ்சை அள்ளும் ஈரடிகளால் படைக்கப்பட்டது காமத்துப்பாலின் சிறப்பாகும்.

சொல்லித் தெரிவதில்லை காமக்கலை என்பது உண்மையானாலும் மலரினும் மெல்லிய காமத்தை அதன் செவ்வி தலைப்பட நுகர்வேண்டும் என்று புரிந்து கொள்ளவேண்டும். இதனாலேயே வள்ளுவர் போன்ற சான்றோர் தூய காமப்பனுவல்களை இலக்கியச் சுவை நிரம்ப இயற்றினர். காமக் கல்வி பெற்றால் இல்லற வாழ்க்கை இனிய வெற்றி தரும். காமத்துப்பாலை ஓதுவேவார் காமத்தின் முழுச்சுவை காண வல்லவர் ஆவர். “காமத்துப்பாலின் நுதலும் பொருளைப் பல முறையும் சிந்தித்தால் ஒருகாலைக்கொருகால் கருத்து ஆழ்ந்து செல்லும் அழகைக் காணலாம்“ என்பர் திருமணம் செல்வக் கேசவராயர்.

வள்ளுவர் காமத்துப்பாலில் ஒருதலைக் காமத்தையோ பொருந்தாக் காமத்தையோ கூறவில்லை. தொல்காப்பியம் கூறிய “அன்பின் ஐந்திணை” அதாவது ஒன்றுபட்ட காதலர்களிடையே நிகழும் காதல் ஒழுக்கத்தையே கூறுகின்றார்.

நிறைவாக வள்ளுவரின் முதல் அதிகாரம். கல்வியின் சிறப்பை எடுத்து இயம்புவதோடு, கற்றபின் என்ன செய்ய வேண்டும் என்பதையும் விளக்கும். வாழ்க்கைக்குப் பொருள் கட்டாயமாகத்தேவை என்று கருதியதால் ”செய்க பொருளை” என்று அழுத்தமாக எடுத்துரைத்துள்ளார்.

மேலும் காலம் அறிதல், இடம் அறிதல், வலியறிதல், ஊக்கம், சோம்பலில்லாமை, முயற்சி, துன்பத்தில் கலங்காமை, சொல்வன்மை, செயலில் தூய்மை, செயலில் உறுதி, செயல் செய்து முடிக்கும் திறமை, நட்பு, பகை, பெரியோரைப் போற்றல், விலைமகளிரிடம் சேராமை,கள் குடித்தலின் தீமை, சூதாட்டத்தின் தீங்கு, மருந்து, மானம், நற்பண்பு, உழவின் சிறப்பு, வறுமையின் கொடுமை முதலிய அதிகாரங்களின் கருத்துக்கள் குடிமக்கள் எல்லாருக்கும் பொதுவாகப் பொருந்தும் வகையில் இருப்பதாக அமைந்துள்ளன. இவை அத்தனைகளும் ஒரு மனிதன் மனிதனாக மனிதப் பண்போடு வாழ வேண்டும் என வள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன் கற்றுத் தந்த பாடத்தை ஒவ்வொரு குடிமகனும் அதன் வழி பின்பற்றி வழிநடந்தால் நாடு நலம் பெற ஒற்றுமையாக வாழலாம்.

# பெண்மையின் ஒளி



பாலம்மாள் பொன்னுசாமி

பெண்மையின் மென்மை
பெருமைதரும் ஒளி
உயிரோட்டமாக நடமாடும்
உணர்ச்சி பொருளல்ல
உறவுகளை மேம்படுத்தும் உன்னதமான அதிசய உறவு
மயக்கத்திற்கு உதவிடும்
மதுபான போதையல்ல
அவளின் மனமோ
திறந்த புத்தகத்தின் தீண்டாத வெளிச்சம்
ஊடுருவிச் செல்லும் ஒளிவட்டம்
ஒப்பற்ற உலகில்
எதுவும் புரிந்து எழுகின்ற
வானவில்லின் வனப்பான தோற்றம்
அன்பின் ஒளியாய்
அனைத்திலும் மிகுதியாக மின்னுபவள்
பாவையின் தோற்றம்
மயக்கும் வெளிச்சமல்ல
தீக்கனலவள்
திக்கற்றோருக்கு தாயாக
திலகமாக தோன்றும் தென்றல்
முள்செடியில் சிந்திக் கிடக்கிறாள்
இரத்தத் துளியாக
மனிதர்களே
மனிதநேயம் எங்கே இருக்கிறது
மறைந்துவிட்டதோ

# பொங்கப் பான தூக்கிக்கிட்டு



ரேனு பாலு

பருவமழைத் தப்பாம பொழிஞ்சது அதனாலே
பூமியிலே நெல்லும் முத்தா வெளைஞ்சிது
பட்டபாடும் வீணாகலே குவியலாக் கெடக்கு
கொலதெய்வமும் மாரியாத்தாளும்
எங்களைக் கைவிடல

வித்தக்காசில மூத்தமவளுக்கு
கண்ணாலத்த முடிச்சாச்சி
பண்டிகைக்கு மாப்பிள்ளையோட ஒன்னா வந்திருக்கா
பொங்கப் பானக் கையாலத் தூக்கிட்டு
பொங்க வைக்கப் போறாப் புதுப்பொண்ணு

கல்லக்கூட்டி வெறகமூட்டி பொங்க வைக்கிறாளே
பஞ்சுப் பொதியாட்டம் பொங்கி வழியுதே
கைக்குத்தல் பச்சரிசி பானையில பொங்கலிட்டு
தலைவாழை எலைபோட்டு சர்க்கரை வெண்பொங்கல்
தாம்பூலத் தட்டோட தேங்காய் பழங்களவச்சி

வெளஞ்ச கரும்பு மஞ்சக்கொத்து வச்சிக்கட்டியே
சூரியனுக்கு படைச்சி மனசாரக் கும்பிட்டோமே
வருசவருசம் இதேமாதிரி கொறையே இல்லாம
நெறஞ்சி இருக்க
மனசார வேண்டிக்கிட்டோமே



# எங்களுக்கும் காலம் வரும்

**சாந்தி குமார்**

## கவிதை

அகிலத்தையே தன் வசப்படுத்தும் சிறந்த ஆளுமையே
அடிமை தலையை மோதி மிதித்து விட்டாய்
ஆயிரம் சக்தி அவளிடம் உண்டு
அவளின்றி ஓரணுவும் அசையாது இப்பூமியில்
வலியையும் வழியாக்கும் வலிமைமிகு பேராற்றல்
வீரம் விளைந்த மண்ணின் பிறப்பிடம் அவள்

தன்னம்பிக்கை கொண்டு ஒவ்வொரு நாளும் வாழ்கின்றாள்
பெண்ணாக பிறந்ததற்கு பெருமை கொள்வோம்
உயிருக்கு உயிர் கொடுக்கும் உயரியவள்
கல்வியேன் உனக்கென்று தடைவிதித்து
வீட்டுக்குள்ளே பூட்டி வைத்தவர் மாண்டு விட்டார்
பெண்கள் இன்று இல்லாத துறையேது

வீட்டில் சும்மாதான் இருக்கேன் என்று
சும்மா கூட சொல்லி விடாதே ஒரு நாளும்
சும்மா இருக்கும் உனக்குத்தான் ஓயாத வேலை
தடைகளைத் தாண்டி சாதனை படைத்த
தனித்தே போராடும் உயர்ந்த குணம் கொண்டவளே
நின் புகழையையும் வளர்ச்சியையும் உலகம் ஒரு நாள் சொல்லுமே

அன்றாடமே உன்னை நாளும் உயர்த்தியே புகழ் பாடியே
மனதில் நீங்கமறா நிலைத்திருக்கும் பெண்ணோவியமே
மனதின் ஆசைகளை ஒவ்வொரு நாளும் வெளி காட்டாமலே
அன்பிற்கும் தடை உண்டோ இப்பூலகில்
அணுவினையும் தன் வசப்படுத்தி விளையாடும் பேரழகே
பெண்களின் வரலாற்றை உலகம் சொல்லும்

பெண்ணே நீ அதிசயம் தான் ஒவ்வொரு நாளும்

# திருக்குறள் அதிகாரம் 23



**டாக்டர் புட்பா கிறிட்டி**

**(உலக திருக்குறள் சமூதாய மையத்தில் புட்பா கிறிட்டி அவர்களால் வாசிக்கப்பட்ட கட்டுரை) - பகுதி 2)**

**(ஈதல் என்றால் என்ன? என்ற கேள்வியுடன் கடந்த இதழில் வெளிவந்த திருக்குறள் அதிகாரம் 23 என்ற தலைப்பிலான கட்டுரையின் இறுதிப்பகுதி தொடர்கிறது.)**

இந்த உணவு, குளிர்சாதனப் பெட்டியில் இருந்து, கெட்டு விட, அதனை எடுத்து குப்பையில் கொட்டி விடுவார்கள். ஒரு திருடன் வந்து கொள்ளையடித்துச் சென்றால் மனம் வருந்துவார் அல்லவா! இதனையே கொன்றை வேந்தனில் ஔவையார், **'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்'** எங்கிறார்.

நான் முடிந்தவரை அளவோடு சமைப்பேன். அப்படிக் கூடி விட்டால், எடுத்து, ஒரு பெட்டியில் போட்டு, சூடு ஆறும் முன்னரே கொண்டு சென்று என் அயல்வீட்டில் கொடுத்து வருவேன். அவர்கள் ஆப்பிரிக்கர்கள். கணவனுக்கு பகுதி நேர வேலை. மூன்று குழந்தைகள். மனைவி, வீட்டிலிருந்து குழந்தைகளைப் பராமரித்து, பாடசாலைக்குக் கூட்டிச் சென்று வருவார். அவர்களின் நிலை தெரியும். அவர்கள் என்னை உணவுப் பொதியுடன், தமது வீட்டு வாசலில் கண்டால், அந்தக் குழந்தைகள் குதூகலித்து மகிழ்வார்கள். நமக்கும் மகிழ்ச்சி பொங்கும்.

என் குழந்தைகள் வளர்ந்து வரும் காலங்களில், நான் அவர்களுக்கு விலையுயர்ந்த பெரும் பெயர் கொண்ட (அதாவது brand name) ஆடைகள், பாதணிகள் வாங்கிக் கொடுத்ததில்லை. அவர்கள் இருவரும் இங்கு பிறந்தவர்கள். சக தோழர்கள், போடும்போது, தமக்கும் அது போல் வேண்டும் என வந்து கேட்பார்கள். நான் அவர்களுக்கு உணவூட்டும் போது, 3ம் உலகநாட்டு வறுமை நிலையை உலகுக்கு எடுத்துக்காட்டும். World Vision என்னும் தொலைக்காட்சி நிகழ்வைக் காட்டுவேன். அதில், குடிநீர் எடுக்க 7 மைல் தூரம் நடந்து சென்று, சகதி கலந்த நீரைச் சிறுவர்கள் எடுத்து வருவார்கள். சோளக் கொல்லையில், காய்ந்த சோளப் பொத்தி தேடுவார்கள். கிழிந்த ஆடையுடன் விளையாடுவார்கள். எலியைப் பிடித்துச் சுட்டுத் தின்பார்கள். ஒரு ரொட்டித் துண்டை பலரும் பகிர்ந்து உண்பார்கள்.

இதனைக் காட்டியதும். அவர்கள் மீது பரிதாபம் கொள்ளும் என் பிள்ளைகள், தமக்கு இருப்தே போதும் என்பார்கள். என்னைச் சில குழந்தைகளைத் தத்தெடுக்கும் படி வற்புறுத்தினார்கள். எங்கள் ஊதியம் அப்போது போதவில்லை. இன்று அவர்களே அப்படி வறிய குழந்தைக்களுக்குத் தருகிறார்கள். தமது பிறந்த நாட்களைக் கொண்டாட மனமில்லாது ஏழைகட்கு உணவளிக்க, அனாதை மடங்களுக்குப் பணம் அனுப்புகிறார்கள். என் மகன் பிறந்த மே 8ம் நாள் என் தந்தை இறந்தார். இது 2008ம் ஆண்டிலிருந்து, அவன், கல்லறை சென்று வேண்டி பூசைக்குச் சென்று பணம் கட்டி, அவரின் ஆன்மாவுக்கு வேண்டுவான். நாம் சேர்த்து வைத்துக் காணத இன்பத்தைப் பிறர்க்குக் கொடுத்து, அவர்கள் இன்புறுவதில் நாமும் மகிழலாம்.

**"இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**

**தாமே தமியர் உணல்"** (குறள். 229)

தாம் தேடிய செல்வம் குறைந்து விடுமென, இரப்பவர்க்குத் தராமல், தானே தனித்து உண்பது பிறரிடம் கையேந்தி இரந்து நிற்பதைக் காட்டிலும் கொடுமையானது. தமக்கெனச் சேர்த்து வைக்கும் பொருள், இறுதியில் யாருக்கும் பயனில்லாது போய்விடும்.

இலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தான் நான் பிறந்தேன். ஆனால் கொழும்பில் தான் 3 வயதிலிருந்து வளர்ந்து கல்வி கற்றேன். என் தந்தை கொழும்பு துறைமுகத்தில் வேலை பார்த்தார். ஆதலால் எங்களுக்கு அரச விடுதி கிட்டியது. பரந்தன் என்னும் ஊரில் தான் என் தாத்தா பாட்டி இருந்தனர். அவர்களோடு, பாடசாலை விடுமுறை காலங்களில், நாங்கள் வந்து ஒருமாதம் தங்கி கிராமத்து வாழ்வை அறிந்து, உணர்ந்து, புரிந்து பழகிச் செல்வோம்.

எமது காணிக்கு அருகில் ஒரு முதியவர், 40 ஏக்கர் பெரும் நிலத்துடன் வாழ்ந்து வந்தார். எச்சில் கையால் கூட காகம் விரட்ட மாட்டார். யாருக்கும் எதுவும் தரமாட்டார். ஒருமுறை அங்கே கடும் வறட்சி வந்தது. அந்த ஊரில் யார் கிணற்றிலும் தண்ணீர் இல்லை. அவரது கிணற்றில் மட்டுமே இருந்தது. ஆனால் யாருக்கும்

கிணற்றுக்கு அருகில் செல்ல அனுமதி இல்லை.

அப்படி நாங்கள் போனால், அவரது வீதி முன்றலில் நின்று, இரும்புக் கம்பியால், மணி அடிக்க வேண்டும். அவரது வேலையாள் வந்து எமது குடத்தை வாங்கிச் சென்று, தண்ணீர் அள்ளிக் கொண்டு வந்து வீதியில் வைப்பான். நாங்கள் எடுத்து வருவோம். குளிப்பதற்கு, சுமார், 5 மைல் தொலைவில் உள்ள ஒரு குளத்தில், ஆச்சியுடன் நடந்து சென்று குளித்து வருவோம்.

அவர் வீட்டு மரங்களில், மா, பலா, தென்னை, வாழை, என பழுக்கும் பழம் யாவும் கடைக்குச் சென்று காசாகிவிடும். அருகில் இருக்கும் ஏழை எளியார்க்கு எதுவும் தர மாட்டார். அந்த மனிதர் 102 வயது வரை வாழ்ந்தார். ஒரு நாள் அவர் மகன் சொன்னார் அப்பா இறந்து விட்டார் என்று. அதே போன்று அவர் மகனும் நடந்தார். அவரும், ஓரிரு வருடங்களின் பின் இறந்து போனார். அவர்கள் சேர்த்த செல்வம் யாவும் அரசுடமையானது. பிறர்க்குத் தானம் வழங்காது, வாழ்ந்து மடிந்தனர் தந்தையும் மகனும். இதனால் அவர்களுக்கு என்ன பெயர் வந்தது. ஈயாதவர்கள் எனும் பழிச்சொல்லுடன் இவ்வுலகை விட்டு மாண்டனர்.

**“சாதலின் இன்னாத தில்லை இனித்தூஉம்**

**ஈதல் இயையாக் கடை”** (குறள். 230)

சாவதை விடக் கொடியது ஒன்றில்லை. அதைவிட வறியவர்க்குக் கொடுக்க முடியாத நிலை வந்த போது, அச்சாவும் இனிமையாக இருக்கும்.

இன்றைய சூழலில், இந்தக் குறள் எனக்கு மிகவும் நெருங்கிய ஒன்றாக இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு குடும்பம். அவர்கள் எழுத்தாற்றல் மிக்கவர்கள். கணவர், ஒரு விமர்சகர், எழுத்தாளர். நூலாசிரியர். மனைவியும் அறிவாற்றல் மிக்கவர். பிறர்க்கு உதவியே தம் சொத்தை இழந்து இன்று வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களை எனக்கு எப்படித் தெரியும் என்றால், 1989, வருடம் நான், கனடா வந்த போது, பெரிதாக ஊடகங்கள், இல்லாத நிலையில், எனக்கும் எழுத்தார்வம் இருந்த போது, யாரோ இவர் சஞ்சிகை நடத்துகிறார் என்று சொல்ல, நான் ஒரு கவிதை எழுதி அனுப்பினேன். அதை அவர் பிரசுர களம் ஏற்றினார்.

அதன் பின் என் தாயார், உடல் நலமில்லாமல், என் வீட்டில், இருந்த போது இரண்டு தடவைகள் என் தாயாரைப் பார்க்க கணவன் மட்டும் வந்து போனார். அப்போது அவருக்கும் கான்சர் என்றும் தானும் வெகு விரைவில் இறந்து விடுவேன் என்றார். என் அன்னையின் மரணச் சடங்கில் கலந்து கொண்டார். அதன் பின் அவர்கள் தொடர்பில்லாது போனது.

கடந்த ஆனி மாதம், மும்மையிலுள்ள ஒரு நிறுவனம், இலவச சமஸ்கிருத வகுப்பு நடத்துவதாகச் சொல்ல, நானும் அதில் இணைந்தேன். சில தமிழர்களும் இணைந்தார்கள். அன்று மாலையே இவரின் மனைவி என்னை அழைத்தார். புஷப்பா கிறிஸ்ரி என்ற பெயர் எமக்கும் பரிட்சயமாக இருக்கிறது. நீங்கள் எங்களின் “நான்காவது பரிமாணத்தில்” கவிதை எழுதியவர் தானே என்றார். நான் ஆம் என்றேன். அவருக்கு ஏற்கனவே கொஞ்சம் சமஸ்கிருதம் தெரியும் எனவே எனக்கு வழிகாட்டுவார்.

அங்கிருந்து வரும் பாடப்பிரதிகளை, எனக்கு பிரதியெடுத்து, நான் வீட்டில் இல்லை என்றாலும், என் தபால் பெட்டியில் போட்டுச் செல்வார். வினாத் தாழ்கள் வந்தால் எம்முடன் கூட இருந்து, தானும் எமக்குப் பாடம் புகட்டி, எல்லோரும் ஒன்றாக விடை எழுதி அனுப்புவோம். எனக்கு எங்காவது போக வேண்டுமென்றால், வந்து அழைக்கச் சொல்வார்.

இந்த அன்னை, இன்று சுமார், 4 வாரமாக, நுண்தொற்றால் பீடிக்கப் பட்டு, கோமா நிலையில் உள்ளார். அதற்கு முன்னர் நோய் கண்ட போது நான் கேட்டேன், இரசம் வைத்துக் கொண்டு வரவா? குடிநீர் கொண்டு வரவா? சரக்குக் கஞ்சி காய்ச்சிக் கொண்டு வரவா? எதுவும் வேண்டாம் என்றார். அவர் ஆங்கில வைத்தியத்தில் நம்பிக்கை இல்லாதவர், ஆயுள்வேத வைத்தியமே சிறப்பு என சொற்பொழிவாற்றுவார். அவரது நம்பிக்கை, இன்று அவர் உயிர் வாழ்கிறார்.

இந்த ஆய்வில் ஒரு குறிப்பைச் சொல்ல விரும்புகிறேன்.

அதாவது சிறுவயதிலிருந்தே குழந்தைகட்கு, நம் வறுமையைச் சொல்லிக் காட்டுங்கள். அதிகம் செலவு செய்தல் கூடாது எனச் சொல்லுங்கள். ஈகையைச் சொல்லிக் கொடுங்கள். சேமிக்கக் கற்றுக் கொடுங்கள். பிறர் மீது அன்பு காட்டச் சொல்லிக் கொடுங்கள், **“அபியும் நானும்”** என்னும் திரைப்படத்தில், ஒரு சிறு பெண், ஒரு பிச்சைக்காரனை, தன் வீட்டுக்கு அழைத்து வந்து அவனைக் குளிக்க வைத்து, அவனைக் குடும்பத்தில் ஒருவனாக மாற்றுவாள். அப்படியான நல்ல கருத்துள்ள படங்களை குடும்பத்தோடு பாருங்கள் இருந்து குழந்தைகட்குச் சொல்லிக் கொடுங்கள். அவர்கள் கற்றுக் கொள்வார். எதிர்காலத்தின் தலை சிறந்த குடிமக்களாக மாறுவார்கள்.

மருத்துவமனைக் கட்டிலில் கண்மூடிக் கிடக்கிறான் வருண்..உறவுகள் சுற்றிலும் நிற்கின்றனர். வேலை வேலை என்று பம்பரமாய்ச் சுற்றி வந்த கால்கள் படுக்கையில் விழுந்து ஆறேழு மாதங்களாகிவிட்டன. ஐம்பது வயதான வருண் ஆக்ஸிஜன் வென்டிலேஷன் வயருக்குள் அடிமையாகி விட்டான். சிகரெட்டுக்கும், மதுவுக்கும் அடிமையானவர்கள் மத்தியில் செயற்கை ஆக்ஸிஜனுக்கு அவனுடைய உடல் அடிமையாகிவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாக தொடங்கிய வியாதி ஒவ்வொரு உறுப்புகளுக்குள்ளும் பாதிப்பைத் தந்து கொண்டிருக்கின்றது. உடலிலே இதுதான் முக்கிய உறுப்பு என்று இருக்கிறதா? ஒவ்வொன்றும் ஒவ்வொன்றுக்கு முக்கியமாகப்படுகிறது. உறுப்புக்களை ஒன்றாய்ச் சேர்த்து இயங்க வைக்க முக்கிய காரணிகள் போதுமான அளவில் இருக்க வேண்டுமே.

வருணின் கட்டிலின் அருகிலேயே அமர்ந்திருக்கிறாள் வர்ஷிணி. வீட்டுக் கூரையில் இருந்து மழை ஓய்ந்து துளி துளியாகக் கொட்டுவதுபோல வர்ஷிணியின் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டுகின்றது.

அழுதுட்டே இருந்து நீயும் உடம்பைக் கெடுத்துக்கப் போறியா ..ஆகவேண்டியதைப் பார். நானில்லாத உலகத்தில் வாழப் பழகிக்கோ..

வருணுடைய வார்த்தைகளில் வலுவிழந்து சரிந்தாள் வர்ஷிணி .. உயிரை யாரோ உருவி எடுப்பதுபோல் உணர்ந்தாள்..

அன்றொரு நாள் அவள் வேலை விசயமாக வேறு ஒரு இடத்திற்கு செல்ல வேண்டிய கட்டாயம்.. இரண்டு நாள் கருத்தரங்கு. விடுதியில் தங்க வேண்டும். வருணிடமிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை. அன்றும் வருண் சொன்னான்.

நான் இல்லாமல் இந்த உலகில் வாழப் பழகிக்கோ..

# மடை கடந்த மௌனம்

**– ஜானகிகணேசன் –** மதுராந்தகம்

தன்னுடைய கைகளால் வருணின் வாயைப் பொத்தினாள்.

வாயில் இருந்து வருகின்ற சொற்களுக்கு எவ்வளவு வலிமை இருக்கின்றது என்று தெரியுமா? இப்பிடிச் சொன்னால் நான் போக மாட்டேன்" என்று சொல்லி அவள் ஆர்ப்பாட்டம் பண்ணியதை இன்று நினைத்துப் பார்க்கிறாள்.

இவர்களுடைய வாழ்க்கையில் தம்முடைய அன்பைக் கூறுபோட குழந்தை என்னும் வாரிசும் இல்லை. பணத்தோடு பண்பும் பரிவும் அன்பும் ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்ளும் வகையிலே நிறையவே கிடந்தது. இருவருக்கும் உறவினர்களுகுத்தான் பஞ்சம்.. நட்புக்கும் வசதிக்கும் பஞ்சமேயில்லை. உனக்கு நான் எனக்கு நீ என்னும் அற்புத பந்தத்தை இந்த உறவு கொடுத்தது. பூமிக்குள் விழுந்துவிட்டால் என்றோ ஒரு நாள் வெளியே வரத்தானே வேண்டும். இறப்பு தேதியில் மாற்றம் இருக்கும். ஆனால் அனைவரும் பூமியிலிருந்து விடை பெற வேண்டியவர்களே. கைகளில் தாங்கிய வள்ளியை பொத்தென்று கீழே போடுவதுனா, சாதாரண விசயமா? ஆனால், அவளை அவன் போடத்தானே வேண்டும்.


நீண்ட நாளைக்கு இந்த செயற்கைச் சுவாசம் கொடுக்க முடியாது வள்ளி. செயற்கை சுவாசத்தை அகற்றுவதற்கு உங்களுடைய ஒப்புதல் தேவை. உறவினர்களுக்கு சொல்லி அனுப்புங்க என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள்.

அவருடைய உறுப்புக்கள் விடைபெறத் துடிப்பதையும் அவை அழுகின்ற காட்சியையும் மருத்துவர்கள் கண்டு விட்டார்கள் போலும். அமெரிக்கா, துபாய் சிங்கப்பூர், மலேசியானு உறவுக்காரங்க.. எல்லோரும் வந்தாச்சு. அண்ணன்கள், தங்கை,அக்கா, மாமன்னு வருணைச் சுற்றிலும் கண்ணீர் மல்க நிற்கின்றனர்.

காயத்ரி மட்டுமே அங்கு பம்பரமாய்ச் சுற்றுகின்றாள். அவளுடைய கண்களும் கண்ணீரைச் சொரிந்து கொண்டே இருக்கின்றன. இருவருக்கும் நட்புடன் இருந்தவள் அவள்தான். தினந்தோறும் வீட்டுக்கு வந்து அனைத்து பணிவிடைகளும் பார்க்கின்ற வேற்று மொழியினள். வீட்டு வேலைக்காரி. ஆனால் வருணுக்கும் வர்ஷிணிக்கும் அன்புத் தோழி.

அவளுடைய வேலை முடித்து வீட்டிற்குப் போகும் முன்பு வருண் வர்ஷிணி இருவரும் ஆ∴பிஸிலிருந்து வீட்டுக்கு வந்துவிடுவார்கள். மூவரும் ஒன்றாக அமர்ந்து அன்றாடம் நடந்த விசயங்களை பேசிக் கொண்டே காபி அருந்துவார்கள்.

அன்பும், பணமும் ஒரே இடத்தில் கிடைப்பதாக இருந்தால், யார்தான் மனதை தாரை வார்க்காமல் இருப்பார்கள்.



காயத்ரி தயாரித்து வைத்த இரவுணவை இருவரும் உண்பார்கள். ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை மட்டுமே அவளுக்கு விடுமுறை கொடுத்திருந்தார்கள். சனிக்கிழமை வர்ஷிணியும் காயத்ரியும் சேர்ந்து புதுப்புது உணவு சமைத்து உண்பார்கள்.

இத்தனை உறவுகள் வருணுக்கும் வர்ஷிணிக்கும் இருப்பதை இன்று தான் காயத்ரி பார்க்கிறாள். கடைசி காலத்தில்தான் உறவுகள் வரும் என்பது பிறந்த ஊரைவிட்டு நகரம் சென்று தங்கிய மக்களுக்கு ஒன்றும் புதிசு இல்லை. இப்பவாவது வாட்ஸ் அப் முகநூல், யூடியூப்னு உறவுகளைத் தக்க வைத்துக் கொள்ளத் துணையாக இருக்கிறது. எல்லோருக்கும் காபி பரிமாறுகிறாள்.

ஆனால், வர்ஷிணி சாப்பிட்டு மூன்று நாட்களாகிவிட்டது. வாயில் நீர் படுவதற்கு காயத்ரி வர வேண்டும். மரத்துப் போன அவள் உணர்வுகளுக்கு ஆதரவு நீரும் அவளே கொடுக்க வேண்டும். காபியைக் கையில் கொடுத்துவிட்டு அருகே அமர்கிறாள்...

காயத்ரி... என்ற அழைக்கும் குரலுக்கு வருணை நிமிர்ந்து காயத்ரி பார்க்கிறாள்.

“நீ வர்ஷிணிகூட எப்போதும் கூடவே இருப்பனு எனக்கு நம்பிக்கை இருக்கு காயத்ரி இருப்பியா? என்று வருண் கேட்ட போது அவனுடைய கைகளைப் பிடித்து மௌனமாய் அழுகிறாள்..

திடீரென்று நீண்ட காலத்தின் பின் குடும்பப் பிரச்சினையால் பிரிந்து போன வர்ஷிணியினுடைய அண்ணன் குடும்பம் உள்ளே நுழைகின்றார்கள்.

“என்ன இது வர்ஷிணி வராதவர்கள் எல்லாம் வருகிறார்கள். ஆக்ஸிஜன் ஒயரை எனக்குக் கழட்டிவிடப் போகிறார்களோ? என்று வருண் கேட்ட போது..

அவங்க உங்களைப் பார்க்க வேண்டும் என்று சொன்னாங்க அதான் வரச் சொன்னேன் என்று வர்ஷிணிக சமாளித்தாள்.

பாரு வர்ஷிணி எங்களுக்கு எவ்வளவு சொந்தக்காரங்க இருக்காங்கனு.. இவ்வளவு பேர் இருந்தும் நாங்க தனியாதானே இருந்திருக்கிறோம். நீ எத்தனை தடவை சொல்லியிருக்க. யாரை நம்பி இந்தப்பூமியில் பிறந்தோம். வாழ்ந்து காட்டவில்லையா? என்று அதுபோலத்தான் நீ நல்லா இருப்பாய். உனக்குத் தைரியத்தை நிறையவே நான் தந்திருக்கிறேன்.

அருகே வந்தவர்கள் வருணுடைய கைகளைப் பிடித்து எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்ட போது.

அதான் பார்க்கிறீர்கள்களே .. ஏதோ உயிரோடு இருக்கிறேன். மருத்துவம் என்னை உயிரோடு வைத்திருக்கிறது-என்கிறான்.

வர்ஷிணி முப்பத்திரண்டு வயதாக இருக்கும் போது அறுவைச் சிகிச்சை மூலம் அவளுடைய கர்ப்பப்பையை அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது பல விசயங்களை நினைத்து அவள் கலங்கிப் போகிறாள். அப்போது அவன் கூறிய வார்த்தைகள் அவளுக்கு ஆறுதல் அளித்தன.

எப்படி வர்ஷிணி இருக்க?

என்று வருண் கேட்ட போது ஏதோ உயிரோடு இருக்கிறேன். என்று அவள் சொன்ன போது

“அதுபோதாதா வர்ஷிணி கர்ப்பப்பை பிள்ளை உருவாக்கும் ஒரு மெஷின் அவ்வளவுதான். எனக்கு நீ நல்ல பிள்ளையாக இருக்கிறாயே. ஆ.ஃபிஸ் முடிந்து வந்தால் என்ன வாங்கி வந்தீர்கள் என்று கேட்கிறாய்? சிலவேளை அடம்பிடிக்கிறாய். அங்கே இங்கே கூட்டிப் போகச் சொல்லி ஆர்டர் போடுகிறாய் .. என்று வருண் சொல்ல.

அதில்ல நமக்கு வாரிசு .. . என்று அவள் வாயெடுத்த போது “கொஞ்சம் வாயை வச்சிட்டு சும்மா இருக்கிறீயா? நாம் இருக்கும் வரைதான் அதெல்லாம். நாம் போய்விட்டால் இந்த உலகத்தில் இருக்கும் வரைதான் போனபிறகு ஒன்றுமே இல்லை. உடம்பு ஒரு கூடு. உயிர் எங்கேயோ எதுவாகவோ யாராகவோ.. இதெல்லாம் என்னிடம் சொல்லாதே. தைரியமாக குணமாகி வீட்டுக்கு வா என்று ஆறுதல் கூறினான்.

இன்று அவன் கூறியது போல் அவனுடைய இடம் வெற்றிடமாகப் போகப் போகிறது. மருத்துவர் வருகிறார். வருணுடைய காலன் வைத்தியர் வடிவில் உள் நுழைகிறார். வருணை சுற்றியுள்ள ஒயர்களைப் பார்க்கிறார். இதயத் துடிப்பைக் காட்டும் இயந்திரம் ஓடிக் கொண்டிருக்கின்றது.

“ஹலோ வருண். வீ கேட்ஸ் எப்படி இருக்கிறாய்” என்று கேட்டபடி அவனைத் தடவுகின்றார்.

இது அவனுடைய வாழ்க்கையின் கடைசிக் கட்டம். இறப்பின் நேரம் யாருக்கும் தெரிவதில்லை. தெரியாமல் இருப்பதுதான் சிறப்பு. தெரிந்துவிட்டால் உலகத்தை விட்டுப் போக யாருமே விரும்ப மாட்டார்கள். புரியாத கவலை, தவிப்பு, ஏக்கம் எல்லாம் கூடவே வரும். வருண் விசயத்தில் பிறருக்கு இறுதி நாள் நிச்சயமாகத் தெரிந்து விட்டது. ஆனால் நேரம் தான் தெரியவில்லை.

வர்ஷிணி மனதுக்குள் வேண்டாத தெய்வங்கள் எல்லாவற்றையும் இன்று வேண்டுகிறாள். அதிசயம் நடக்காதா? மிராக்கில் என்று டாக்டர் சொல்ல மாட்டாரா என்ற தவிப்பு.

இதே தவிப்பு காயத்ரியிடமும் இருந்தது. ஏனென்றால், வருணுடைய நோய், இன்ப, துன்பங்களுக்கும் நெருக்கமாக இருந்த உறவுகள் இவர்கள் இருவரும்தானே.

டாக்டர் உள்ளே வந்ததில் இருந்து நெஞ்சுக்குள்ளே யாரோ அழுத்துவது போல ஒரு உணர்வு. இவ்வளவுதானா வாழ்க்கை! இதற்குத்தானா இத்தனை காலம் இவருடைய வாழ்க்கை எனக்குச் சொர்க்கத்தைக் காட்டிவிட்டுப் போகின்றது! இவரில்லாமல் எப்படி நான் வாழப் போகின்றேன். வர்ஷிணியின் மனதிலும் ஒருவித வெறுமை.

மருத்துவர் வர்ஷிணியைத் திரும்பிப் பார்க்கிறார்.

என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்றபடி வருண் அறியாதபடி ஒயரைக் கழட்டுகின்றார். தன்னுடைய ஒரு நோயாளிக்கு நிரந்தர உறக்கத்தைக் கொடுத்து அவருடைய உயிரின் வலிக்கு விடுதலை கொடுத்த பெருமூச்சுடன் வெளியேறுகின்றார்.

இவை மருத்துவர் பணியின் கசப்பான பக்கங்கள். ஒருவிதத்தில் இதுவும் ஒரு கொலையாகவே இநதச் சமூகம் பார்க்கின்றது. அதனாலேயே கருணைக் கொலை என்று அற்புதமான பெயரில் கருணையைச் சேர்த்திருக்கின்றது.

வர்ஷிணி கண்ணீரைத் தடுக்கத் தடுக்கப் பார்க்கின்றாள். அவள் கண்கள் அவளை மீறி கொந்தளிக்கின்றன. விழிநீர் தாரைதாரையாக வழிகின்றது.

வர்ஷிணியைப் பார்த்த வருண் ஏன் இப்படி அழுகின்றாய்? திக்கித் திக்கி வருகின்ற வார்த்தைகளை வெளிவிட்டபடி சுற்றியுள்ள அனைவரையும் பார்க்கின்றான். பேச்சு முதலில் தடைப்படுகின்றது. யாருடைய முகத்திலும் உணர்ச்சியில்லை. ஒரு மரணத்தின் ஒவ்வொரு நொடியையும் பார்த்துக் கொண்டிருக்கின்ற கல் நெஞ்சக்காரர்களாக எல்லோரும் இயலாமையின் விளிம்பிலே நிற்கின்றார்கள்.

இமைகள் மெல்ல மெல்ல மூடுகின்றன. அந்தப் பார்வைக்குள் இரு உருவங்கள் மட்டுமே இறுதி வரை உச்சியிலிருந்து உள்ளங்கால்கள் வரை பார்க்கப்பட்டு முடிக்கப்படுகின்றன.

வருண் கண்களை முதலில் மூடுகின்றான். இதயத் துடிப்பு மெல்ல மெல்ல அடங்குகின்றது. மூச்சு தன் பயணத்தின் வேகத்தை மெல்ல மெல்ல இழக்கிறது. இறுதியில் நின்று விடுகின்றது.

ஓ... ... என்று பெரிய சத்தத்துடன் வெடிக்கிறது வர்ஷிணியினுடைய அழுகை. அவளை இறுக்கி அணைக்கிறாள் காயத்ரி ..திறந்த வாயை அடித்து மூடுகின்றாள்.

அருகே வந்து அனைவரும் இறுதி அஞ்சலியைச் செலுத்துகின்றார்கள். வர்ஷிணியை அணைத்து அனுதாபம் தெரிவிக்கின்றார்கள். வருணுடைய உடலை மருத்துமனை ஊழியர்கள் கட்டிலுடன் எடுத்துச் செல்கின்றார்கள். நடைப்பிணமான வர்ஷிணி மற்றவர்களுடன் விடைபெறுகின்றாள். ஒரு மனிதனின் வாழ்க்கைப் பயணத்தின் முடிவுரையைக் கண்ட கனத்த மனத்துடன் உறவுகள் சூழ காயத்ரி கைத் தாங்கலாக அழைத்துச் செல்ல மருத்துவமனையை விட்டு வெளியேறுகிறாள் வர்ஷிணி..

- முற்றும் -




# நிழலின் தனிமை

## நூல் மதிப்புரை

- வே. சுகந்தி -



ஒரு இளைஞனுக்கு 30 வருடங்களாக உள்ளுக்குள் எரிந்து கொண்டிருக்கும் பழிவாங்கும் எண்ணம் எவ்வாறு எல்லாம் அவனை முன்னோக்கி இழுத்துச் செல்கிறது என்பதும் ஒதுக்கப்பட்ட ஒரு சமூகத்தில் பிறந்ததினால் தங்களின் வாழ்வு இத்தனை மோசமானதாக மாறிப் போய்விடும் என்று எண்ணி நொந்து கொள்வதை தவிர வேறு எதுவும் செய்ய இயலாத ஒரு நிலையில் எளிமையான வாழ்க்கையாக இருந்தாலும் மகிழ்ச்சியாக சென்ற வாழ்க்கையில் தன் சகோதரியின் மீதான பாலியல் வன்புணர்ச்சியை நேரில் கண்ட சிறுவனின் மனநிலையில் இந் நாவல்.

கதையை அந்த இளைஞனே கூறுவதுப் போல் நகர்கிறது.

12 வயது சிறுவன் கண் முன்பு நடந்த அநீதியை எதிர்க்க முடியாமல் போகும் இயலாமை வஞ்சினமாக நெஞ்சில் உரம் ஏறி விடுகிறது .அதுதான் பழிவாங்கும் எண்ணம். அவன் முப்பது வருடமாக அதையே நினைத்து வெவ்வேறு வடிவங்களில் அதற்கான செயல் ஆக்கத்திற்காக காத்திருக்கிறான். தன் சகோதரியின் அந்த நிலைக்கு தன் தாயின் மீதே சந்தேகம் கொள்கிறான். ஆனால் கடைசி வரையில் அதை தெளிவு படுத்தவில்லை கதையில்.

படுக்கையில் இருக்கும் தாயும் உதவிக்கு இருக்கும் கணவனை பிரிந்த தங்கையுடனும் வாழும் சூழலில் ஒரு பள்ளியில் எழுத்தாளராக வேலையில் சேருகிறான்.. அங்குதான் தன் சகோதரியை பலவந்தப் படுத்திய கந்து வட்டிக் கடைக்காரனான கருணாகரனை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவனாக சந்திக்கிறான். ஆனால் கருணாகரனுக்குச் சிறுவனாக பார்த்தவனை இன்று அடையாளம் தெரிவதில்லை.

அடிக்கடி தன் சகோதரியிடம் பழிவாங்கலைப் பற்றி பேசிக் கொண்டேயிருக்கிறான். சாரதா இவன் சகோதரி தான் என்று புரிவதற்கே சற்று நேரம் எடுக்கிறது. அதேப்போல் சாரதாவின் கணவரையும் கருணாகரனின் மகள் சுலோசனாவின் கணவரையும் அப்பாவிகள் என்று குறிப்பிடுகிறார். ஏனெனில் இரண்டு பெண்களும் ஏற்கனவே உடலால் வேறோருவனால் ஆக்ரமிக்கப்பட்டவர்கள் என்ற கோணத்தில்.

கருணாகரனை பார்த்ததில் இருந்து இவனின் பழிவாங்கல் முயற்சி தீவிரமடைகிறது. பள்ளியில் இவனின் மீதான மரியாதையை உயர்த்திக் கொள்கிறான். கருணாகரன் செய்த செயலைப் பற்றியும் நட்பாக நிகழ்வைப் பற்றியும் மொட்டைக் கடிதமாக டைம் செய்து அனுப்புகிறான்.

மெல்ல கருணாகரனுக்கு வேண்டியனாக மாறி அவன் குடும்பத்தில் உள்ளே நுழைகிறான் .கருணாகரன் வலுக்கட்டாயமாக செய்த செயலை இவன் காதல் என்ற போர்வையில் அவர் மகளிடம் முடித்துக் கொள்கிறான்.

பின்னர் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கி விடுகிறது. அடுத்து என்ன என்ற ஆர்வத்தை விதைக்கிறது கதையின் நகர்வு. ஒவ்வொரு முறையும் கருணாகரனை சந்திக்கும் பொழுதும் கடிதத்தைப் பற்றி நினைத்து பதட்டப்படுவது நம்மையும் பதட்டத்திலேயே நிறுத்துகிறது.

கோயில் திருவிழாவில் நடந்த சம்பவம் கருணாகரன் குடும்பத்தை அடியோடு புரட்டி வாழ்வின் கடைசி எல்லைக்குக் கொண்டுவந்து சேர்த்து விடுகிறது. இவனால் காதலிக்கப்பட்ட சுலோ வேறொருவனின் மனைவியாகி பாடாய்படுவதும் பார்க்க சகிக்காமல் வேறு இடத்திற்கு மாற்றலாகி போகிறான். அங்கு வேறோருவனின் மனைவியுடன் தொடர்பு வைத்துக் கொள்கிறான். அந்த பெண்ணை தன் மனைவியாகவே உருவகித்துக் கொள்வதும், அதுவும் அவள் கணவனும் உடன் இருக்கிறான் அவனுக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்கிறான் அவனும் கண்டு கொள்வதில்லை இது என்ன செயல்? .கருணாகரனுக்கும் இவனுக்கும் என்ன வித்யாசம்?

காமம் ஒருவரை வீழ்த்தி விடும் பெரும் ஆயுதமாகவும் ,பெண்களை உடல் ரீதியாக வீழ்த்தக் கூடிய மிகப் பெரிய ஆயுதமாகவும் கூட இருக்கிறது. அதன்பிறகு அவர்களுக்கு வேறு எதுவும் பெரிதில்லை என்பதை மனதில் எண்ணியே இதனை கையிலெலுடுக்கும் ஈனப்புத்தியுள்ள ஆண்கள். வலியோர் எளியோரை மிக சுலபமாக வீழ்த்தி விடக்கூடிய தாகவும் அமைந்து விடுகிறது.

தாயின் இறப்பும் தங்கையின் வாழ்வை மீண்டும் சீரமைத்து விட்டாலும், சுலோவின் மீதான எண்ணம் மீண்டும் தலையெடுக்க அவளைத் தேடி பழைய இடங்களுக்கு செல்வதும், பால்யத்தின் நினைவுகள் வந்து அலைக்கழிப்பதும், கதையின் முக்கியமான இடங்கள். சில இடங்களில் சிறுவர்களின் செயல்களை வெளிப்படையாக கூறியிருப்பது சற்று முகம் சுழிக்க வைக்கிறது.

சுலோவின் மாமியார் அவனின் சாதியைப் பற்றி பேசும் பொழுது கோபம் வந்தாலும் அந்தக் குடும்பத்திற்காக சகித்துக் கொள்கிறான்.

சாரதாவின் நச்சரிப்பும் அதிகரித்துக் கொண்டே போகிறது. கருணாகரன் படுக்கை புண்ணில் அவதிப்படுகிறார். சுலோவும் கணவனை பிரிந்து தந்தையுடனே இருக்கிறாள். கருணாகரன் மகன் கொலைப்பழியால் சிறையில் இருக்கிறான். ஒவ்வொரு முறையும் கருணாகரனை கொல்ல முயற்சித்து முடியாமல் கடைசியில் அவனுக்கு சேவை செய்யும் நிலையில் இருப்பவனிடம் அவன் சகோதரி சாரதாவின் வேண்டுகோள் திடுக்கிடலைத் தருகிறது. பிறகு என்ன நடந்தது கதைக்குள் பயணித்துப் பாருங்கள்.

ஏழ்மையும் எளிமையும் போட்டி போடும் மக்களின் வாழ்க்கையை மிக வெளிப்படையாக சொல்லப்பட்டுள்ளது.

காமத்தால் வஞ்சமும் ,வெறியும் வென்று விடும் என நினைத்துக் கொள்ளும் இடத்தில் சாரதாவின் ”இவன் அவனல்ல வேறு யாரோ” என்று கூறுவதில் மனிதாபிமானமும் கருணையுமே வெற்றிக் கொள்கிறது.

கதைசொல்லியின் உள்ளத்தின் பல்வேறு நிலைகளை உணர்த்திக் கொண்டே வருவதும் ,அவனின் இயல்புகளையும் தன் சகோதரியின் மேல் உள்ள பாசத்தையும் எந்த இடத்திலும் குறைத்துவிடாமல் கடைசி வரையில் நகர்வது சிறப்பு . அவனுள் இருந்த மெல்லிய வன்மமும் விலகி விடும்.

கருணாகரனுக்கு எழுதிய கடிதம் என்னவானது?

சாரதாவின் மறிலைக்கே தாயின் ஆதரவும் இருந்ததா?

போன்ற கேள்விகள் எஞ்சி நிற்கிறது.

நிறைய கதாபாத்திரங்கள் வந்தாலும் பழந்துணி விற்பவனும், திருவிழாவில் கதை சொல்லியாக வருபவரும் தனித்து நிற்கிறார்கள்.

# மரபுக்கவிதை

கவியமுது சு.பிரபாகரன்,

## அடி மறி மண்டில ஆசிரியப்பா

### தாய்மையின் மேன்மை

அருளினை அளிக்கும் அன்பின் உச்சமே..

இருளினை விளக்கும் இன்பச் சிற்பமே..

கருவிழி மணியாய் கனிந்த தெய்வமே..

கருவினில் சுமந்து காத்த அன்னையே..!

## நேரிசை வெண்பா

### பொங்கல் திருவிழா



கரும்பின் சுவையாய் களித்திடும் பொங்கல்
தரணி முழுதும் தமிழர் - திருநாள்
உழவர் பெருநாள் உலகே மகிழ
கழனி  செழிக்கும் கனிந்து..!

## சாவி

மனதை திறக்கும் மந்திர சாவி
மங்கிடாத அன்பென்று அகிலமறிந்திட வேண்டுமே..!
மௌனத்தை களைந்து மாயங்கள் செய்வது
மையல் கொண்ட மங்கையின் புரிதல்தானே!
கருத்துப் பிறழ்வுகளை கனக்கச்சிதமாக அகற்றிடும்.
கண்கண்ட மருந்து கனிவுடன் பணிவே.!
புதுமைகள் அனைத்திற்கும் புனிதமான திறவுகோல்.
புனிதமான பகுத்தறிவும் புத்தொளி விரிசிந்தனையும்தானே!



# போரில்லா உலகு

– ந. இரவிச்சந்திரன் – பழனி



தமிழகத்தை சார்ந்த மிக சிறந்த காந்தீயவாதியான ஐயா கருப்பையா என்பவரை பொள்ளாச்சி காந்தி சேவா ஆசிரமம்.அபேக்ஸ் (APEX) குழுமம் மற்றும். பன்னாட்டு அரிமாசங்கத்தில் உறுப்பினராக உள்ள பழனி தங்கரதம் அரிமா சங்கம் சார்பில் **“போரில்லா உலகு காண.”** நாடு முழுவதும். அமைதி நடை பயணம் செல்ல தமிழ்நாட்டின். முக்கிய ஆன்மீகத்திருத்தலமான பழனியில் அமைந்துள்ள காந்தி சிலையில் துவங்கி நல்லெண்ண தூதுவராக பாண்டிச் சேரி உலக அமைதி கேந்திர அலுவலகம் உள்ள. ஆரோவில். வரை சென்று. போரில்லா உலகம் காணும். அமைதி வலியுறுத்தும். பன்னாட்டு அரிமா சங்க கடிதத்தை நேரில். அதிகாரிகளை சந்தித்து தந்து.இத் தகவல். ஐ நா சபை வரை செல்ல ஆவன செய்திட்டார்

ஒன்றல்ல இரண்டல்ல 430. கீமீ தொலைவு நடை பயணம். க்கள் நடமாட்டமுள்ள பகுதிவழியே. ஆங்காங்கே வழிச் செலவுக்கும் உணவிற்கும் தன்னார்வ இயக்கங்கள், அரிமாசங்கங்கள் சர்வோதய சங்க ஒத்துழைப்புடன் வழியில் உள்ள கோவில் குளம் பொது இடம் அறிந்து தங்குதல் என நடைபெற்ற பாதயாத்திரை பயணம் இது





கடந்த மார்ச்18 ல் துவங்கி ஏப்ரல் 7 உலக சுகாதார தினத்தில் வெற்றிகரமாக முடிந்தது இதில் ஆரம்பம் முதல் முடிவுவரை வழி நெடுக உள்ள 5 மாவட்டங்களின் பற்பல அமைப்புகளுடன் தொடர்புகள் ஏற்படுத்தித் தந்து உதவிகள் பெற்று யாத்திரை நிறைவேற பழனி வாழ் ந இரவிச்சந்திரன் அவர்களது பங்களிப்பும் மிகுதியாக இருந்தது.

இது தேர்தல் காலம் என்பதால் வழக்கம் போலவே வழிநெடுக நிறைய சோதனைகள். ஆனால் இப்பயண நல்லெண்ண நோக்கம் அறிந்து அரசு தரப்பும் சேர்ந்தே உதவிட எண்ணியது நிறைவேறியது

தற்போது உலகளாவிய தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்த தகவல்.என்பது இம் முயற்ச்சிக்கு கிடைத்த பரிசாக நினைக்கிறோம் உலக அமைதிக்கு எங்களால் முடிந்த சிறு முயற்சி இது. இந்த நேரத்தில் இங்கு இதனை பதிவிடுவது அனைவரும் அறியவே...

(காந்தியவாதி திரு கருப்பையா ஏற்கனவே நாட்டின் முக்கிய பிரச்சனைகளை வலியுறுத்தி குடும்ப சகிதம் 40“000கிலோ மீட்டர் வரை பயணித்தவர் என்பதும்)



முகில் தினகரன்


# அமுதென்பதா விஷமென்பதா!

ஒரு புகைப்படப் போட்டிக்காக, உலகின் மிக அழகான பெண் குழந்தையின் புகைப்படம் ஒன்றையும், உலகின் மிக விகாரமான பெண்மணியின் புகைப்படம் ஒன்றையும் எடுத்து, ஒரு மென்மையான கான்ஸெப்டில் அவையிரண்டையும் இணைத்து, ஒரு மாஜிக் நிகழ்த்த விரும்பினார் புகைப்படக் கலைஞர் நம்பிராஜன்.

அதற்காக அலைந்து திரிந்து நேற்றுத்தான் ஒரு அழகான பெண் குழந்தையின் புகைப்படத்தை ஒரு அனாதை ஆசிரமத்தில் எடுத்தார்.

அடுத்து, விகாரமான பெண்மணியைத் தேடிப் பயணமானார்.

யாரோ கொடுத்த அறிவுரைப்படி அந்தச் சிறைச் சாலைக்கு வந்து, பெண் கைதிகளை சந்திக்க அனுமதி கேட்டார்.



ஆரம்பத்தில் மறுத்த சிறை அதிகாரி, பின்னர் ஒப்புக் கொண்டனர். அங்கிருப்பவர்களிலேயே மிகவும் விகாரமான பெண்மணியான, இருபத்தைந்து வயது, கோகிலாவைப் பார்த்துப் பேசி புகைப்படமும் எடுத்துக் கொண்டார் நம்பிராஜன்.

“யாரைம்மா கொலை பண்ணினே?” கேட்டார்.

“என் புருசனை”

“ஏன்...?”

“அவன் கூடக் குடித்தனம் பண்ணி அழகான பெண் குழந்தையைப் பெத்தெடுத்தேன்... “அசிங்கமான நீ எப்படிடி அழகான பெண் குழந்தையைப் பெத்தே?”ன்னு அடிச்சான்... போட்டுட்டேன்.. இங்க வந்திட்டேன்” சாதாரணமாய்ச் சொன்னாள்.

“உன் குழந்தை?”

“அனாதை ஆசிரமத்துல விட்டுட்டேன்!.. சரி அதை விடு... எதுக்கு அசிங்கமான என்னை படம் புடிக்கறே?” கேட்டாள்.

நம்பிராஜன் போட்டி பற்றிச் சொல்ல,

“எங்கே அந்தப் பெண் குழந்தை போட்டோ காட்டு”

காட்டினார்.

கதறி விட்டாள். “தெய்வமே... இது என் குழந்தை சாமி” போட்டோவை வாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

இறைவனின் திருவிளையாடலை எண்ணி வியந்தார் நம்பிராஜன்.

**- முற்றும் -**

# பொய் முகங்கள்

– அனுராதா சௌரிராஜன் –



கேட்காத காதுகளால்
இசை இறந்து போவதில்லை!
பார்க்காத கண்களாயினும்
புரிந்தவை மறந்து விடுவதில்லை!

செருப்புகளில் நுழைவதற்குக்
செதுக்கலாமோ கால்களை?
சுய தேவைகளுக்கே
சுழலும் சக்கரங்கள்!

சமூகத் தேவைகளை
சிந்திக்கத் தவறுபவைகள்!
நடைமுறையில் நாளும்
நாம் சந்திக்கும் பொய்முகங்கள்!

வேக வாழ்க்கை ஓட்டத்தில்
விரும்பி வரும் குழந்தைகள்!
வழிமறிக்கும் பாசத்தை
பணியிடத்து அவசரங்கள்!

தேவையான காலத்தில்
தெளிக்காத பாசம்!
தொய்வடைந்து போகுமே
தளிர்களின் நேசம்!

ஈட்டுவன வெட்டும் எல்லைக்
கட்டத்தில் பெற்ற ஆடுகள்!
கேலிக் கூத்தாகும்
கால ஓட்டத்தில் இல்லறமே!

கூலிக்கு வைத்த ஆயாவிடம்
குழைந்து தஞ்சமாகும் பிஞ்சுகள்!
வாலி போல் அதற்கில்லை
வலிமை இரண்டு மடங்கு!

உயிரில்லா வாழ்விலே
உயர்வைத் தேடும் உதாசீனங்கள்!
சிரித்திருக்கும் காந்தித்தாளில்
சிந்தனை சிதற விட்டவர்கள்!

தப்பிக்க வழிகாணாது வாழும்
தண்டனைக் கைதிகள்!
சுந்தரப் பாசக் காற்றை
சுவாசிக்காத இயந்திரங்கள்!

கேழ்வரகில் வழிகின்ற
நெய்யில் என்ன பெருமை!

# கவிதை



– தி. ஸ்ரீராமன் –




விண்ணும் எல்லையல்ல
வித்தகப் பெண்களுக்கு..!
மண்ணிலே சாதித்துச்
சிறந்திடும் கண்களுக்கு..!
ஆண்களுக்கு நிகராக
அனைத்துத் துறைகளிலும்..!
உண்மையில் ஊடுருவி
உயர்கிறார் நிறைகளிலும்..!
பண்ணிலே அடங்கிடுமோ
பாவையர் பெருமை..!
கண்களாகும் நாட்டிற்குக்
கனிகையர் அருமை..!
எண்ணையும் எழுத்தையும்
ஏற்றமாய்க் கற்று..!
ஆண்களையும் படைக்கிறார்
பிள்ளையாய்ப் பெற்று..!
உண்டியைச் சமைப்பதுடன்
உற்சாகமாய்ப் பகிர்வதிலும்..!
தண்மையைக் கலந்து
தானும் சுகித்திடுவாள்..!
நண்ணிடும் நல்லவரை
நயமாகக் காத்திடுவாள்..!
புண்ணியம் செய்துமே
புதுமலராய்ப் பூத்திடுவாள்..!
கண்ணியம், கடமை
கட்டுப்பாட்டைப் பேணிடுவாள்..!
உண்மைக் காதலையும்
உரைத்திட நாணிடுவாள்..!
புண்பட்ட மனதினையே
புன்னகையால் ஆற்றிடுவாள்..!
கேண்மையை வளர்த்தே
வெறுப்பினையும் மாற்றிடுவாள்..!!



– தஞ்சை பழ வள்ளியப்பன் –




வஞ்சகம் பேசி
வாழ்ந்திடும் மனிதம்
சற்றும் இல்லை
உலகினில் புனிதம்
எங்கும் எதிலும்
போலிகளின் வாசம்
உண்மையை உரைத்திட
மானுடம் அஞ்சும்
பெண்களுக்கு எதிராய்ச்
செயல்கள் நித்தம்
அநீதியைக் கண்டே
கொதித்திடும் நெஞ்சம்
போராட்டக் களமாய்
மாறிடும் பொழுதுகள்
மாறிடக் கூடாதா
துளிர்விடும் எண்ணங்கள்
நாளையத் தலைவர்கள்
இளைஞர்கள் என்பேன்
சாதிக்கும் ஆற்றல்
உண்டென அறிவேன்
கொடுமையைக் களைந்திடப்
புறப்பட வேண்டும்
கரங்களைக் கோர்த்தே
பயணித்தல் சிறக்கும்
வரவினை நாடிக்
காத்திருக்கும் வையகம்
வந்தால் மட்டுமே
பிறந்திடும் புதுயுகம்
புலர்ந்திடும் சூரியன்
வழிகளை அமைக்கட்டும்
இளையத் தலைமுறை
வெற்றிகளை ஈட்டட்டும்

# விசித்திரம் ஒன்றுமில்லை

**சேஹ் மொஹம்மது பெனாஸிரா** – முஸ்லிம் ஹல்மில்லாவ, மதவாச்சி

ஒவ்வொரு நாட்களும்
ஒராயிரம் சரித்திரங்களை பதுக்கி வைத்துக் கொண்டுதான்
ஒற்றையடிப் பாதையில் பயணிக்க விடுகிறது...
தனிமையிலும்
குடும்ப வாழ்விலும்
நண்பர்களுடனும்
ஏனைய உறவுகளுடனும்
சாலை மரங்களாய்
சந்திப்பு நடத்துகிறது
மனதோடு..

புன்னகையைச் சுருட்ட
சிறு முள் குத்தும்
காயங்களும்
கண்களை இருள வைக்க
தாவும் நீண்ட செடிகளும்
தலையை விறைக்க வைக்க அப்பப்போ
விழும் பாறாங்கற்களும்
அந்தப் பாதையில்
நிறைந்தே கிடக்கிறது...

உனக்கும் எனக்கும்
எல்லோருக்கும் தான்
வித்தியாசமான பாதை அது ...விசித்திரம்
ஒன்றுமில்லை
பொதுவாக இருப்பதால்..



**இளையவன் சிவா**
**கவிதைகள்**



# இயற்கையின் கொந்தளிப்பில்

பச்சையத்தின் மேனிக்குள்ளே
பருவங்கள் மாறிவர
பால் நிலா தடம் மாறாது
பகலவனும் மினுமினுப்பில்
கூட்டும் அனலுக்குள்
மிச்சத்தின் எச்சமெலாம்
மனிதனுக்கென மாறிவிட்டே
துச்சமென இயற்கையினை
துய்த்துவிட்ட வேளையிலே
பொறுமையென்றே நில்லாமல்
பூமிதனில் விரிந்திடும் கீறல்கள்
நீண்டு நீண்டு
பொங்கிடும் தாக்குதலில்
புதைவதென்னவோ
மனிதன் மட்டுமே.

உயிர்வாழும் உணர்வில் நாடாது
சேமிப்பும் சேகரிப்பும் தனக்கேயென்ற
சுயநலத்தின் பேயாட்டம்
சுரண்டியவை கொஞ்சமல்ல.

வளியின் ஓட்டத்தோடு
வாழ்வை உறிஞ்சியவனுக்கு
வாகனமும் கருவிகளும்
வானளவில் பெருக்கியபின்
ஆலைகளும் ஆசைகளும்
அளவற்ற பேராசைக்குள்
அகத்தை மறைத்திட
காற்றும் நஞ்சாக
காலடி மண்ணும் நஞ்சாக

புசித்திடும் உணவும் சக்கையென்றாகிட
பொழுதும் புறமும் கலங்கிடவே
பற்றி எரியும் பசுமைக்குள்
பாலைவனங்கள் பெருகிவர
புற்றெனப் புறமும் நோயாகி
முற்றும் மாறி முடங்கிவிட
நிலையற்ற வாழ்வில்
நிலைத்திடுமென சேகரிப்பில்
நிறைப்பதெல்லாம்
சாம்பலாகிப்போகுமென்ற
சரித்திரத்தை உணராமல்
தன்னைத்தானே உயர்த்திடவே
எச்சிலை விழுங்கும் இனமென்றே
மாறிப்போன மானிடா.

சூழலைக் காத்திடல் பிரசவத்தின்
அவசரமென்றே
சூளுரைத்தே காலடி வைத்திடுக.

மனதைச் சூழ்ந்த பேராசை
கலைத்தால்தானே மாற்றங்கள்.

ஏற்காமல் உறங்கிப்போனால்
இயற்கை பாடம் சொல்லவரின்
ஏற்பதன் துன்பம்

எரிமலையென்றும்
நடுக்கத்தின் மீறளுக்குள்
மேகவெடிப்பும் வறட்சியும்
மீறியவெள்ளமுமென
நீண்டிடுமே நிம்மதியற்றே.

# மரபுக் கவிதைகள்

## பஃறொடை வெண்பா





### மரணத்தின் நிமிடம்

துடித்தே அடங்கும் துளிநேர மூச்சும்
படித்தே முடிக்கும் பயனற்ற பேச்சும்
தொடுத்தே அணைக்கும் தொடர்கின்ற பாசமும்
விடுத்தே பிரியும் விதியெனும் காலமே!
மறைந்தே விலகும் மயக்கத்தின் நிழலும்
உறைந்தே இருக்கும் உடலெனும் கூடும்
பிறந்தே வளர்ந்த பெருமைகள் யாவும்
துறந்தே முடியும் துகளெனத் தானும்
கனவாய் முடியும் கடந்தநல் வாழ்வும்
நினைவாய் எஞ்சும் நிமிடத்தின் முடிவும்
வினையாய்த் தொடரும் விதிதந்த கணமே
தனியாய்ச் செல்வோம் தருமமே துணையே!

**- கோவிந்தசாமி அய்யாசாமி-**

### மரணத்தின் நிமிடம்

கற்றக் கலைகளுங் கைவிட்டுப் போகுமே
முற்றத்துச் சுற்றமும் மொய்த்தழுவ நற்றவமே
செய்யா தவர்மனத்துத் தீராத ஆசையெனும்
வெய்ய வலையிடை வீழ்ந்தபின் கையற்றே
உய்யா வலியால் உழன்றுயிர் புள்நிகராய்
மெய்யெனும் கூட்டை விடுத்தே ஓடுமுயிர்
மண்ணும் மனையும் மறந்தே மடிந்துவிழ
விண்ணில் விரையும் விதியதுவே எண்ணுங்கால்
கூற்றுவன் வந்து குறுகிய அந்நேரம்
மாற்றவோ யாராலும் வாராதே தோற்றமது
மாயையென்றே தேறி மனமொன்றி நின்றபின்
தூய கதியடை வார்!

**- கீதா அருண் -**





### மரணத்தின் நிமிடம்

மரணத்தின் போது மனமும் பழைய
வரலாற்றை எண்ணி வருந்தும் துயரில்
உறவுகள் நெஞ்சில் உணர்வுடன் வந்து
மறவாது சொத்து மனத்தினில் வந்திடும்
தன்நிலை மெல்ல சிதைகின்ற வேளையில்
இன்னமும் வாழ இனிதாய் நினைத்திடும்
பண்டித மேன்மை பிரிந்து ஒடுங்கிடும்
மண்ணின்மேல் பற்று மயங்கி அடங்கிடும்
சுற்றியங்கு நிற்போர் சிறுகவே தோன்றுவார்
பற்றற்றுப் போகும் பரமனடி சேர்ந்திட
விற்பன்னர் வாழ்வில்நல் வெற்றிகள் பெற்றவரை
மற்றவர் காண்பர் மறைவு

**- கவிஞர் இரா. கி -**

### மரணத்தின் நிமிடம்

மூச்சு நழுவும் பொழுதே முடிவென
பேச்சது அற்றே பயத்தையேத் தந்திடத்
தாய் முகம் தோன்றிடத் தழுவித் தணியவே
வாய்ச்சொல் உறைந்து வலிகள் பரவிடும்
கொண்ட கனவுகள் காற்றாய்க் குலையவே
கண்ட உணர்வு கரைந்தே உருகிடப்
பாசம் அறுந்து பயணம் தொடங்க
மௌனம் நிறையும் மரண நிமிடம்
காலம் கரைந்து கருணை மறைந்திட
ஞாலம் இருண்டிட ஞானம் அடங்கிட
ஆலம் விழுங்கிய ஆதி யென,
அடங்கி ஒடுங்கியது உயிர்

**- சரஸ்வதிராசேந்லிரன் -**

ஒருநா புளியங்குடில இருந்து ஒருத்தரு அந்தகோவிலுக்கு சாமிகும்புட வந்துருந்தாரு. சாமி கும்புட்டு சுத்தி வாரப்ப இவரப்பாத்துட்டாரு

டேய் மாடசாமி தான நீன்னு கேட்டாரு. இவரு இல்லப்பா

என்பேரு அது இல்லன்னு வேகமாபோனாரு அவருவிடல

எனக்குத்தெரியும் நீமாடசாமிதான் இங்கயா இருக்கன்னு கேட்டவுன்ன

அவரு கண்ணு கலங்கிடுச்சு. ஆமா அந்த ஊருவேணாம்னுதான இங்க வந்தேன். நீ வந்து எல்லாத்தையும் ஞாபகப்படுத்தாத போயிறுன்னாரு அப்ப அவரு கண்ணு கலங்குச்சு..........

அந்தகோயில்ல அவருக்குப்பேரெல்லாம் கெடையாது ந்தா , யோவ், ஏய் பெருசு இப்புடித்தான் எல்லாரும் கூப்புடுவாக அவரு கிட்டத்தட்ட பத்துவருசம் அந்தக்கோவில்லதான் கெடக்காரு. சாப்பாடு, வேலை, தூக்கம் எல்லாம் அங்குணக்குள்ளதான்.

ஒரு துணிமூட்டை மாதிரி வைச்சிருப்பாரு அதுக்குள்ள என்னா இருக்குன்னு ஆருக்கும் தெரியாது. அதை தூங்கும் போதுதலைக்கி வைச்சிப்படுத்துக்குவாரு மத்தபடி அது கோயில் மூலையிலதான் கெடக்கும். காலைல 4மணிக்கி எந்திரிச்சிருவாரு

சாமியோட மண்டபங்கள்ல இருந்து வார மாலை குப்பைகள் சாப்புட்டுப்போடுற எலை இப்புடி பெரும்குப்பை சேந்துடும்




# குப்பை

## சிறுகதை

மொத்தகோயிலையும் கூட்டி அந்தக் குப்பய அள்ளி வெளிய குப்பத்தொட்டில போடுவாரு. அப்புறமா தண்ணிய ஊத்திகழுவிடுவாரு கோயில் சுத்தமா ஆயிடும். அப்புறமா குளிச்சிட்டு எல்லாசாமியையும் கும்புடுவாரு காலையில பூசைமுடிஞ்சப்புறம் பொங்கசோறு குடுப்பாக அதுதான் சாப்பாடு.

கோயிலுக்கு வாரவுக ஏதாவது காசுகுடுத்தா வாங்கிக்குவாரு. கோயில்ல இருந்து சம்பளமுன்னு எதுவும் அவருக்குக்கெடையாது. என்ன குடுத்தாலும் வாங்கிக்குவாரு

வெள்ளி, செவ்வா அப்புறம் விசேசநாளுகள்ல குப்ப குவிஞ்சிடும் அள்ளுறதுக்குள்ள அச்சுவிட்டுறும். ஆனாலும் சளைக்காம அள்ளிப்போடுவாரு. அதுக்கு தனியா காசெல்லாம் கெடையாது

அவருக்கு 88 வயசிருக்கும். அவர ஆரும் வந்து பாக்கல

இந்த நேரத்துலதான் புளியங்குடிக்காரர் இவர அடையாளம் கண்டுபிடிச்சது

அப்ப அவரு சொன்னாரு இங்குணக்குள்ளதான் கெடக்கேன் எல்லாத்தையும் மறந்துட்டு


அப்புறமா ஏதாவது தகவல் வந்துச்சான்னு கேட்டாரு

ஒன்னும் வரல, நொந்துபோயி ஊரவிட்டு வந்துட்டேன்னாரு

இவரு இங்கவாரதுக்கு முன்னாடி புளியங்குடிலதான் இருந்தாரு அங்க கூலிவேல வெவசாயவேலை எல்லாம் பாத்துக்கிட்டு இருந்தாரு. அங்கயும் இப்புடித்தான் என்ன வேல குடுத்தாலும் செய்வாரு. குடுக்குறத வாங்கிக்குவாரு.. அவருக்கு குடும்பம்னா ரெண்டு மகளுக அப்புறம் பொண்டாட்டிதான். இவரோட பொண்டாட்டி கொஞ்சம் வசதியான வீட்டுல இருந்து வந்தவுக. அவளுக்கு இவரோட பொழப்பு புடிக்கல

அதுநால அடிக்கடி சண்டதான். கெட்டபழக்கமெல்லாம் இவருக்குகெடையாது ஆனா சுதாரிப்பில்லாத மனுசன் புத்திசாலித்தனம் போதாதுன்றது அவளோட நெனப்பு. அதுநால திட்டிக்கிட்டே கெடப்பா இவரு காதுலபோட்டுக்க மாட்டாரு. அப்ப பக்கத்துல இருந்த ஒருத்தன் அடிக்கடி வந்துபேசிக்கிட்டு இருப்பான் அந்த அம்மாகிட்ட

ஒருநா அவளக்காணாம். அவ யாருகூடயோ ஓடிப்போயிட்டதா சொன்னாக இவரு நம்பல பொறந்த வீட்டுக்குத்தான் போயிருப்பான்னு அங்க போயிப்பாத்தாரு. அங்கயும் வரல. அப்புறம் அவ திரும்பி வரவே இல்ல என்ன ஆனான்னு தெரியல. எல்லாரும்சொன்னாக அவ ஓடிப்போயிட்டதா



இவருக்கு ஒண்ணும் புரியல அதுக்கப்புறம் ரெண்டுமகளையும் கஸ்டப்பட்டு வளத்தாரு பெரியவுகளானாக ஒருபொண்ண கைல இருந்த காசு கொஞ்சமா நகைபோட்டு கட்டிக்குடுத்தாரு. அந்த ஊருல ஒருத்தரு ஒதவுனாரு. ரெண்டாவதுமக கொஞ்சம் அழகா இருப்பா. அவமேல இவரு அம்புட்டுப்பிரியம் வைச்சிருந்தாரு. செல்லமா வளத்தாரு அம்மா இல்லாதகொற தெரியாமப்பாத்துக்கிட்டாரு.

ஆனா அடிக்கடி கேப்பா அம்மா எங்கன்னு. இவரு சொல்லுவாரு செத்துப்போயிட்டான்னு

அவ நம்புனமாதியும் தெரியும் நம்பாத மாதிரியும் தெரியும். ஒருநா அவளையும் காணோம். இவருக்கு ஒண்ணும் புரியல. எல்லாரும் சொன்னாக . ஆத்தா மாதிரியே புள்ளயும் ஓடுகாலின்னு

இவரால தாங்கமுடியல. அழுக அழுகயா வந்துச்சு. கொஞ்சநாளு வீட்டுக்குள்ளயே கெடந்தாரு. சோறு ஆரு போடுவா . தற்கொலை செய்யலாம்னு முடிவெடுத்தாரு அதுக்கு தைரியம் வரல

ஒரு நா ராத்திரி கெளம்பிட்டாரு ஊரவிட்டு அங்க இங்க சுத்தித்தான் இங்க வந்து சேந்தாரு. இப்புடி இவரு வந்து எல்லாத்தையும் நாவகப்படுத்திட்டாரு.

அப்பப் புளியங்குடிக்காரரு கேட்டாரு உனக்குதகவல் தெரியுமா உன் ரெண்டாவது மக திரும்பி வந்து ஒன்னத்தேடுனதுன்னு கேட்டாரு

இவருக்கு தூக்கிவாரிபோட்டது,. வந்துச்சா என்மகன்னு கேட்டாரு

ஆமா அவமாத்திரம் வரல ஒன்னோட பொண்டாட்டியும் வந்தான்னாரு

இவருக்கு ஒருமாதிரி ஆயிடுச்சு. பொலபொலன்னு கண்ணீர் கொட்டுச்சு

அப்ப அவருசொன்னாரு. ஓம்பொண்டாட்டி இப்ப பம்பாயில இருக்குதாம் அது கூடத்தான் ஒன்னோட ரெண்டாவதுமகளும் இருக்காம்

ஒன்னோ மக கலியாணத்துக்குக் கூப்புடத்தான் வந்தாக தேடுனாக ஒன்னப்பத்திய தகவல் ஏதும் தெரியல

அப்பத்தான் ஒன் மகசொன்னா

அவளோட அம்மா குற்றாலத்துக்குக் குளிக்கவந்தவுக கூட வீட்டு வேலைக்கி நல்ல சம்பளம் தாரோம் அப்புறமா ஒங்க குடும்பத்தை கூட்டிட்டு வரலாம்னு சொல்லிக் கூப்புட்டுப்போயி வச்சிருந்ததையும் அப்புறமா கடுதாசி-போட்டதையும் அப்புறம் வந்து கூட்டிட்டுப்போனதையும் சொன்னா

அவுகளுக்கு புள்ளக ஆரும் கெடையாதாம் அதுனால கொஞ்ச சொத்தை ஒன் சம்சாரம் பேருலயும் மீதிய தருமத்துக்கு எழுதிவைச்சதையும் சொன்னாளாம். அப்புறமாத்தான் வந்து மகளக்கூப்புட்டுப்போயிருக்கா. போயிட்டு திரும்பிவந்தா நீ ஊரவீட்டு ஓடியாந்துட்டன்னாரு இவருக்கு கண்ணீர்தார தாரயா ஊத்துச்சு

ரெண்டுபேரும் நல்லா இருக்காகளா அதுபோதும் ன்னு அழுதாரு

அப்ப வந்தவரு சொன்னாரு, பேசாம நீயும் போகவேண்டியதுதான அங்கயேன்னு. அதுக்கு இவரு சொன்னாரு இந்த மாடசாமி வேணாம்னு முடிவெடுத்துத்தான போனாக. அங்கயே நல்லா இருக்கட்டும்

நான் இங்கயே இருந்து பழகிட்டேன் இன்னும் கொஞ்சநாளு என்ன இந்தகோயிலும் சாமியும் பாத்துக்கிடும்.

ஒருதடவ குப்பவேணாம்னு ஒதுக்கிட்டா அது குப்பதான் திரும்ப கோயிலுக்குள்ள வரமுடியாது. நானும் வேணாம்னு ஒதுக்கித்தள்ளுன குப்பதான்.......ன்னு சொல்லிட்டு குலுங்கிகுலுங்கி அழுதாரு ...அவரால சமாதானப்படுத்த முடியல மாடசாமியால, அவரும் கண்ணு கலங்குனதைத்தவிர வேற ஒன்னும் செய்யமுடியல.......

# நடு இரவில் தெரியும் சூரியன்



– குரு அரவிந்தன் –

ஐஸ்லாந்திற்குச் சென்ற போது நடுநிசியில் சூரியனைப் பார்த்திருக்கிறேன். அதே அனுபவம் மீண்டும் அலாஸ்காவில் கிடைத்தது. கனடாவின் வடக்குப் பக்கத்தில் அலாஸ்கா இருந்தாலும், ரஸ்யாவிடம் இருந்து அமெரிக்கா அதை விலைக்கு வாங்கியிருந்தது. தெற்கே ஹவாயும் வடக்கே அலாஸ்கா மகாணமும்தான் அமெரிக்காவுடன் நிலத்தொடர்பு இல்லாத மாகாணங்களாக இருக்கின்றன. அலாஸ்காவின் வடபகுதி பனிசூழ்ந்த பனிப்புலமாக இருந்தாலும், 776,000 மக்கள் இங்கே வசிக்கின்றார்கள். ஆதிகாலத்தில் ஆசியாவுடன் நிலத்தொடர்பு இருந்ததால், பழங்குடி மக்கள் முதன் முதலாக அலாஸ்கா வழியாகத்தான் உள்ளே வந்தார்கள். பழங்குடி மக்களின் சுமார் 22 மொழிகள் இங்கே பாவனையில் இருக்கின்றன. இங்குள்ள 86 வீதமான மக்கள் ஆங்கிலமொழி பேசுகின்றார்கள்.

பனிப்பாறைகள் சூழ்ந்த வடதுருவம், நடுநிசியில் தெரியும் சூரியன், பல வர்ணங்கள் கொண்ட நொதேன்லைட், வட அமெரிகாவிலே உயர்ந்த தெனாலி மலைத்தொடர், உலகிலே உயிர் வாழும் மிகப் பெரிய உயிரினமான திமிங்கிலங்கள், பனிக்காலத்தில் உறங்குநிலைக்குப் போகும் கரடிகள், வடதுருவ பனிக்கரடிகள், பனிக்கட்டி வீட்டில் வாழும் எஸ்கிமோக்கள் என்றெல்லாம் மாணவப் பருவத்தில் படித்ததை அங்கே நேரடியாகக் காணமுடிந்தது. இதைவிட முக்கியமான ஒரு காரணமும் இருந்தது, அது என்னவென்றால் 'என்ன சொல்லப் போகிறாய்?' என்ற, சேலம் தமிழ் சங்கத்தின்



சிறந்தநாவல் -2020 க்கான பரிசு பெற்ற எனது நாவலின் தளமாகவும் பனிசூழ்ந்த அலாஸ்காதான் இருந்தது.

நாங்கள் ஒரு கரவன் வண்டியை அதாவது இங்கே ஆர்.வி. என்று சொல்லப்படுகின்ற வண்டியை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வடக்கு நோக்கிச் சென்றோம். அதில் சமையலறை, படுக்கையறை, குளியலறை எல்லாமே இருந்தன. பெயபாங் என்ற இடத்தில் இருந்து டல்ரன் நெடுஞ்சாலையில் சென்றால் வடதுருவத்தை அடையலாம். அங்கே உள்ள மொறிஸ் தொம்ஸன் கலாச்சார மண்டபத்திற்குச் சென்றால் வடதுருவத்தில் கால்பதித்தவர் என்று உங்களுக்கு ஒரு சான்றிதழ் தருவார்கள்.

வடஅமெரிக்காவில் மிக உயரமான மலைச்சிகரம் ஆழரவெ ஆஉமுடைெ-டநல இங்கேதான் இருக்கின்றது. உலகிலேயே மூன்றாவது பிரபலமான இந்த மலையின் உயரம் 20,310 அடியாகும். இந்த மலைத் தொடரில் பனிப்படலத்தால் உறைந்த ஐந்து கிளேஸியர்கள் இருக்கின்றன. சிலெட்டோக் என்று சொல்லப்படுகின்ற அலாஸ்கியன் நாய்கள் இழுத்துச் செல்லும் வண்டிகளில் பயணிப்பது, பனியில் சறுக்கி விளையாடுவது, கூடாரம் அடித்து தங்கி காம்பயர் செய்வது, மலை ஏறுவது, வேட்டையாடுவது, மீன் பிடிப்பது

போன்ற பொழுது போக்குகள் இங்கே உண்டு. கருங்கரடிகள், கரிபோ மான்கள், மலை ஆடுகள் போன்றவற்றை அருகே சென்று பார்க்கவும், புகைப்படங்கள் எடுக்கவும் முடிந்தது. கழுகுகள், மலை எலிகள், நரிகள், மலை அணில்கள் போன்றவற்றையும் அங்கே காணமுடிந்தது. எஸ்கிமோக்கள் என்று நாங்கள் சிறுவயதில் படித்த, பனிக்கட்டிகளால் உருவான வீடுகளில் வாழ்ந்த முதற்குடி மக்களின் பரம்பரையினரை அங்கு சந்தித்து உரையாட முடிந்தது.

அங்கரேய்ச் நகரில் தங்கி அருங்காட்சியகம் போன்றவற்றைப் பார்த்தோம். கடல் உணவுக்குப் புகழ் பெற்றது. இரவுதங்கிவிட்டு தெற்கே 127 மைல்களுக்கு அப்பால் உள்ள சீவாட் என்ற இடத்திற்கு மறுநாள் காலையில் பயணமானோம். சீவாட்டில் சுமார் 3000 மக்கள் வசிக்கிறார்கள். கினாய் பியோட்ஸ் நேசனல் பார்க் என்ற இடத்திற்குச் செல்வதற்காக முற்கூட்டியே பதிவு செய்து வைத்திருந்தோம். இது றிசுரக்'ன் குடாவின் கரையோரத்தில், மலைகள் சூழ்ந்த பகுதியில் இருப்பதால் படகில்தான் செல்லவேண்டும். படகில் செல்லும் போது, ஒன்றல்ல, இரண்டு இடங்களில் கறுப்பு வெள்ளை நிறமான 'கில்லவேல்' என்ற திமிங்கிலங்களை மிக அருகே காணமுடிந்தது. எக்ஸிற் கிளேஸர் என்ற பனிமலை இப்பகுதியில் பிரபலமானது.

திரும்பி வரும் வழியில் கோப் (ர்ழிந) என்ற மிகப் பழமையான ஒரு கிராமத்துக்குச் சென்றோம். இங்கு 1898 ஆம் ஆண்டு தங்கச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டதால், சியாட்டோவில் இருந்து மக்கள் வந்து குடியேறினார்கள். அங்கே உள்ள அருங்காட்சியகத்திற்குப் பொறுப்பாக இருக்கும் முதியவரான பெண்மணி, தான் அங்கே பிறந்து வளர்ந்ததாகவும், தனது தாத்தா, பாட்டி காலத்தில் அவர்கள் தங்கச் சுரங்கத் தொழில் நிமிர்த்தம் இங்கு வந்து குடியேறியதாகவும் குறிப்பிட்டார். ரொறன்ரோவில் இருந்து வந்திருக்கிறோம் என்று சொன்னதும் மிகவும் மகிழ்ச்சியோடு தேனீர் தந்து உபசரித்தார். எங்களுடன் நின்று படமும் எடுத்துக் கொண்டார். தங்கச் சுரங்கத்தில் பாவித்த மிகப்பழைய பொருட்களைக் காட்சிப் படுத்தி இருந்தார்கள். எப்படித் தங்கத்தை பிரித்து எடுப்பது என்றும் அதற்கான தொட்டியில் செய்து காட்டினார்.













- ந. இரவிச்சந்திரன் -

# பாசம்

## குறுங்கதை

தாத்தா எதனால எனக்கு தூக்கம் தூக்கமா வருது

எதனால என்னை படுக்க வைச்சிருக்கிறீங்க....இது பேத்தி பிரகதியின் கேள்வி

மகனும் மகளும் பணி நிமித்தம் வெளியே சென்று விட பேத்தியைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு தாத்தாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

உனக்கு கடுமையான காய்ச்சல் பாப்பா இப்போதைய பருவகால மாற்றச்

சூழ்நிலை சரியில்லாததாலும் சத்தான ஆகாரங்கள் இன்றி கடையில் விற்கும் குளிர் பானங்கள் துரித உணவு எனச் சாப்பிட்டதாலும் உன் உடம்பு அதனை ஏத்துக்கல வாந்தி மயக்கம் காய்ச்சல் என்று வர மருத்துவர் ஆலோ-ாசனையின் பெயரில் உனக்கு இப்ப ஓய்வுதான் தேவை நீ என்னதான் சுட்டித்தனமா விளையாண்டாலும் பேசினாலும்... உடல் நலம் முக்கியமடா ராசா... அதற்குத்தான் பெரியவங்க சொல்வதை கேக்கணும்.

நல்ல சத்தான ஆகாரங்களை சாப்பிடனும்

வெளியே விற்கிற உணவுகளை அதிகம் சாப்பிடக்கூடாது

தொலைக்காட்சிப் பெட்டியில் வருகிற விளம்பரங்களைப் பார்த்து இனிமே அது வேணும் இது வேணும்ன்னு அடம் பிடிக்காம சமத்தா அம்மா, அப்பா வாங்கித் தருவதை சரியான நேரத்தில் சாப்பிட்டு பிறகு விளையாடு படி, எல்லாம் சரியாயிடும்.

தாத்தா என்கிற முறையில் பெரிய பாடமே நடத்தினார்

பாவம் பிரகதி அவள் கஷ்டம் அவளுக்கு...

அரை குறையாக கேட்டபடி கண்ணயர்ந்தாள்.

பேத்தியின் சுட்டித்தனமும் குறும்பும்தான் தாத்தாவிற்கு மிகப் பெரிய மன ஆறுதல்.

சில சமயங்களல் பெற்றோர் தருகின்ற செல்லமும் உறவுகள் வரும்போது கேட்டதை எல்லாம் வாங்கித் தருவதும், இது போன்ற சிக்கலை ஏற்படுத்தி விடுகின்றன.

குழந்தை வளர்ப்பே மாபெரும் கலைதானே...

அறியாததை அறிய வைத்து புரியாததை புரிய வைத்து பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப உணவு உடை தந்து முறைப்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

நமக்கு ஒன்றெனில் தாங்கிக்கொள்வோம் குழந்தைகளுக்கு எனில்....

அசதியில் தாத்தாவும் பலவாறாக யோசித்தபடி கண் அசரத்துவங்கினார். பேத்தியைப் பார்த்து இரசித்தபடி.

குழந்தையும் செல்வமும் இறைவன் தருகிற வரம்தானே

**- முற்றும் -**

# காதல்

## சிறுகதை

மயூரி, அம்மா இன்று கல்லூரி சீக்கிரமாக முடிந்து விடும் அதனால் எனக்கு மதிய உணவு வேண்டாம் வீட்டில் வந்து சாப்பிட்டு கொள்கிறேன் என்றாள்.

அம்மா, எங்களுக்கும் இன்று வேலை குறைவுதான், வியாபாரம் கொஞ்சம் டல் தான் என்றாள் மாதவி.

அந்நேரம் மயூரிக்கு அவள் கல்லூரி தோழி ஸ்வேதா , போன் செய்தாள். மயூரி அழைப்பை ஏற்று பேசினாள். சரி சரி என அழைப்பை துண்டித்தாள்.

மாதேஷ், என்ன என கேட்க,

அவள், நெருங்கிய உறவுக்கார ஒரு அக்கா, காதல் என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுறாங்களாம். திருமணத்திற்கு முன் உள்ள காதல், திருமணத்திற்கு பின் உள்ள காதல் என எழுதுறாங்களாம்.

சரி , மேலே சொல்லு என்றார் மாதேஷ்.

இங்கே உங்களிடம் திருமணத்திற்கு பின் உள்ள காதலை பற்றி தெரிந்து கொள்ள வரலாமா? என கேட்டாள் ஸ்வேதா என்றாள் மயூரி .

மாதவி, வர சொல்லு மயூரி.



**மகாராஜா பரமேஸ்வரி**

எப்ப வருவாங்க? உன் தோழிகள் யாரும் வருவார்களா? ஏன் என்றால், மதியம் என்றால் உணவும், மாலை என்றால் ஏதாவது சிற்றுண்டியும் தயார் செய்யனும் என்றாள் மாதவி.

சிற்றுண்டியே தயார் செய்து விடுங்கள் அம்மா.என் தோழி ஸ்வேதாவும் அவள் சொன்ன அந்த அக்கா மட்டும் தான் என்றாள் மயூரி.

மாலை, நான்கு மணிக்கு ஸ்வேதாவும், அவள் சொன்ன அக்காவும் இரு சக்கர வாகனத்தில் வந்து இறங்கினார்கள்.

மயூரி அவர்களை வரவேற்று அப்பா, அம்மா, தங்கை தர்ஷினி என அனைவரையும் அறிமுக படுத்தினாள்.

ஸ்வேதாவும் இவங்க எங்க அக்கா, பேரு வேணி என்றாள்.

மாதவி, அனைவருக்கும் தேநீரும் சூடாக போட்ட உளுந்த வடையையும் கொடுத்து அவளும் குடித்தாள்.

இங்கே அமர்ந்து பேசுவோமா, அல்லது தோட்டத்தில் அமர்ந்து பேசுவோமா என கேட்டாள் மாதவி.

மயூரி தோட்டம் என்றால் இப்போது தான் வைத்துள்ளோம். கொய்யா செடிகளும் சப்போட்டா செடிகளுக்கும் என்றாள்.

மயூரியும், அவள் தோழி ஸ்வேதாவும் சேர்கள் எடுத்து போட்டார்கள்.

சொல்லுங்க , அக்கா உங்கள் திருமணம் காதல் திருமணமா? அல்லது நிச்சயிக்கப்பட்ட திருமணமா? என கேட்டார் வேணி.

நிச்சயிக்கப்பட்ட திருமணம் தான் என்றார் மாதேஷ்.

சந்தோசம் என்றார் வேணி.

திருமணத்திற்கு பின் உள்ள காதல் என்று குறித்து கொண்டார் .

திருமணத்திற்கு பின் உள்ள காதல் கட்டாய காதல் தானே! என கேட்டார் வேணி.

மாதவி , இருக்கலாம். ஆனால் காதலின் கொள்கை என்ன என கேட்டாள் மாதவி.

வேணி , என்ன புரியவில்லை நீங்கள் சொல்லுங்கள்.

காதலில் எத்தனை வகை உள்ளது என கேட்டாள் மாதவி.

வேணி , அதற்கு நிறைய இருக்கலாம். எனக்கு தெரிந்தது ஒரு தலைக்காதல். இருவருக்கும் காதல் இருந்தும் சொல்லாத காதல். வெற்றி பெற்ற காதல். இருவருக்கும் காதல் இருந்து திருமணம் நடக்காமல் தோற்ற காதல்.

என்றார் வேணி.

சரி வெற்றி பெற்ற காதல் திருமணத்திற்கு பின் நிலைத்து நின்றது எத்தனை? உங்கள் ஆய்வறிக்கையில் தெரிந்து இருக்குமே!.

வேணி, வெற்றி பெற்ற காதல் திருமணத்திற்கு பின் தோற்றதும் உள்ளது. நிறைய வெற்றி பெற்றதும் உள்ளது என்றார்.

என்ன காரணம் வெற்றி பெற்ற பின் தோற்பதற்கு என கேட்டாள் மாதவி.

அதற்கு வேணி, இருவர் கருத்தும் ஒத்து போகாததால் திருமணத்திற்கு பின் தோற்றுள்ளது என்றார்.

இப்போது மாதவி, இதைத்தான் நான் உங்களிடம் காதலின் கொள்கை என்ன என கேட்டேன் என்றாள் மாதவி.

இரு மனங்கள் இணைவது தான் காதல். அந்த இரு மனது திருமணத்திற்கு பின் இணைந்தால் அது கட்டாய காதலா? காதலின் கொள்கை இரு மனங்கள் இணைவது தானே. ஒருவர் மட்டுமே காதலித்தால் அது ஒருதலைக் காதல். திருமணத்திற்கு பின் இரு மனங்கள் இணைவதும் காதல் தான் என்றாள் மாதவி.

எந்த ஆணும் கட்டாயப்படுத்தி ஒரு பெண்ணை காதலிக்க வைக்க முடியாது. அதேபோல் எந்த பெண்ணும் ஒரு ஆணை கட்டாயபடுத்தி காதலிக்க வைக்க முடியாது. இரு மனங்கள் இணைய வேண்டும்.

உதாரணத்திற்கு நீங்கள் எங்களிடம் காதல் பற்றிய கட்டுரை எழுத வரலாமா? என கேட்டீர்கள் அல்லவா.

ஆம் என்றார் வேணி.

நாங்கள் இருவரும் சம்மதித்த பின்னே நீங்கள் வந்தீர்கள். எங்கள் இருவரில் ஒருவர் வேண்டாம் என்றாலும் நீங்கள் இங்கே வந்து இருக்க முடியாது.

உண்மைதான். ஆனால் இது காதல் என்று எப்படி?

திருமணத்திற்கு பின் கட்டாய காதல் என்றீர்களே , உங்களை வர சொல்வது கட்டாயம் இல்லேயே.

எங்கள் இருவரில் ஒருவருக்கு பிடிக்க வில்லை என்றாலும் வேண்டாம் என்று சொல்லி இருப்போமே. இரு மனங்கள் எப்போது இணைந்தாலும் அது காதல் தான். காதல் இல்லாத உயிரினமே இல்லை. காதலிக்காத மனிதர்களும் இல்லை. காதல் வயது வரம்பு பார்த்து வராது.

வேணி, நீங்கள் என்ன சொன்னாலும் உங்கள் காதல் கட்டாயக் காதல் தான்.

மாதேஷ் குறுக்கிட்டு, மன்னிக்கவும் நான் என் கருத்தை சொல்கிறேன். நீங்கள் பெண்கள் பேசியதால் மௌனமாக இருந்தேன். 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஒருவர் வெற்றி பெற்றால் அது வெற்றியா அல்லது மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றால் வெற்றியா என கேட்டார் மாதேஷ்.

இரண்டுமே வெற்றி தான் என்றார் வேணி.

100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றவர் கண்டிப்பாக மாராத்தனில் கலந்து கொள்ள வேண்டுமா? இல்லை மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டவர் 100மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமா?

அப்படி இல்லை. யார் வேண்டுமானாலும் இரண்டிலும் கலந்து கொள்ளலாம் , கலந்து கொள்ளாமலும் போகலாம் என்றார் வேணி.

நல்லது. நாங்கள் திருமணத்திற்கு பின் மாரத்தான் என்ற ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டு மெதுவாக ஓடி ஓடி இறுதியில் ஜெயிப்பது போல நாங்கள் இருவரும் ஒவ்வொருவரையும் மெதுவாக புரிந்து கொண்டு காதலில் ஜெயித்துள்ளோம் என்றார் மாதேஷ்.

ஓட (வாழ) கஷ்டமா இருக்கு என்று பந்தயத்தில் (வாழ்க்கையில்) பாதியிலே நின்றவர்களும் உண்டு. சிலர் 100 மீட்டரில் (திருமணத்திற்கு முன் காதலித்து) ஜெயித்து, மாரத்தானிலும் (திருமணத்திற்கு பின்னும் அதே காதலுடன்) ஜெயித்தவர்களும் உண்டு என்றார் மாதேஷ்.

ரொம்ப நன்றிங்க நாங்கள் கிளம்புகிறோம் என்றார் வேணி.

மயூரி, மயூரி, முதன் முறையாக நம்ம வீட்டுக்கு வந்து இருக்காங்க அவங்களுக்கு லட்டுப்பாக்கெட்டும், மிக்சர் பாக்கெட்டுகள் கொடுத்து விடு என்றாள் மாதவி.

அவள் தோழியையும் கூட வந்த அவங்க அக்காவையும் வழி அனுப்பி விட்டு உள்ளே வந்தாள் மயூரி.

**- முற்றும் -**



**- சி. துளசிகா -**

*மனம் தேடும் பொருள்*

*மீண்டும் ஒரு கருவறை அமைதி...*

*கேலிச்சித்திரங்களில்*

*வடிவமைத்த இடங்கள்...*

*வனவிலங்குகளுடன்*

*களியும் பொழுதுகள்....*

*இவையெல்லாம்*

*கைபிடித்துக்காண்பிக்க*

*நீ நிறைந்த நீ.....*

*மேலும் கதகதப்பான*

*மாரில்மயிர்கூச தலைவைத்து*

*கால் போட்டணைத்து உறங்கினால் இந்நாள் முற்றும்....*

*என் பார்வையில்*

*ஏதுமற்ற வையகத்தில்*

*விலங்கியலின் இயல்பான ஒரு நாள்.....!!*

*உம் பார்வையில்*

*இது என்னவோ....??*



## நல்லூர் வெண்பா

நல்லூர் அழகனின் கோயில் மணியோசை
நல்லருட் தேனமுதை நாளும் - பொழிந்திடத்
தங்க மயிலும் அயிலும் துணையாகப்
பாங்கொடு பூத்ததே காண்!!

**- வாசுகி பிரபா -**

# உடைந்த உள்ளத்தை... காதலித்துப்பாருங்கள்



**கவிதை** **- செல்வி. ஜி -**

உடைந்து போயிருக்கும் ஒரு உள்ளத்தை
காதலித்துப் பாருங்கள்
தனிமை நாடி
எதையோ தேடிடும் விழிகளோடு
நினைவிடம் படபடப்பிலும்
அந்த உள்ளம் தொலைந்து இருக்கும்
குழப்பங்களை ஏற்க முடியாமல்
இதயத்தின் துயரத்தை வார்த்தையில்
வடிக்க முடியாமல்
நான் நல்லா இருக்கேன் என்பார்கள்
எல்லாம் சரியாகும் என சொல்லாதீர்கள்
மாறாது என்ற முடிவுக்கு வந்திருப்பார்
போராடி ஓய்ந்திருக்கும் உள்ளத்திற்கு
அனைத்தும் சரி செய்து உதவுங்கள்
கடந்து விடும் என ஆறுதல் தவிர்த்து
கடக்க உதவுங்கள்
உடைந்து போய் இருக்கும் ஒரு உள்ளத்தை
காதலித்துப் பாருங்கள்

அந்த உள்ளமது உடைந்து போயிருந்தாலும்
வலிமையாய் எழுந்து நிற்கும்
கானல் நீர் ஆகிப்போன கனவுகள் வாட்டினாலும்
எப்படி வாழ்வது
இதயமது காயம் பட்டாலும் எப்படி அன்பு செய்வது
என்று அந்த உள்ளம் கற்பிக்கும்.
அச்சத்தை மறக்க
நரகத்திற்கு சென்று திரும்பிய அந்த உள்ளம்
அழகாய் கற்பிக்கும் உங்களுக்கு
உடைந்து போயிருக்கும் ஒரு உள்ளத்தை
காதலித்துப் பாருங்கள்

அந்த உள்ளத்தை கசப்பான நினைவில் இருந்து
மீட்டெடுத்த மகிழ்ச்சியில் குதிப்பீர்கள்
ஆனால் அந்த உள்ளத்தை புரிந்து கொள்ள இயலுமா?
தன் வாழ்வின் போராட்டங்களை
மனதின் பக்கத்தில் எழுதும் திறந்த புத்தகம்
அந்த மனது கொடுங் கனவுகளில் இருந்து
பேய் கதைகளையும் வலிகளில் இருந்து
கவிதைகளையும் படைத்து இருப்பர்
உடைந்து போய் இருக்கும் ஒரு உள்ளத்தை
காதலித்துப் பாருங்கள்

உலகம் உங்களுக்கு அளித்த காயங்களை
அந்த இதயம் ஆற்றும் உங்கள்
உடைந்த இதயத் துண்டுகள்
அவளின் உடைந்த இதயத் துண்டுகளோடு சேர்த்து
ஓவியம் படைப்பார்
அது ஓவியர் மாருதியின் தூரிகையை தோற்கடித்து

அவர்களின் வெற்றி குவியலின்
மகத்தான நினைவு பரிசாகி நிற்கும்
உடைந்து போயிருக்கும் ஒரு உள்ளத்தை
காதலித்துப் பாருங்கள்

பெரிதாக எதுவும் எதிர்பார்க்காது
எதிர்பார்த்தல் பிரிவில் முடியும் என அறிவர்
அவ்விதயம் நம்மால் காயப்படுமோ
எனப் பதற வேண்டாம்
கொடுத்த வாக்குறுதிகள் மீறிடுமோ என
அஞ்ச தேவை இல்லை
அது அவர்களின் எதிர்பார்ப்பல்ல
மனிதர்கள் வருவது விலகி ஓடத்தான் என்பதை
நன்கறியும் அந்த உள்ளம்
எந்த மோசமான பிரிவும் அவர்களை தாக்காது
ஏனெனில் இப்பாதையில் அவர்கள்
தொலைந்து போக இயலாது
இவர்கள் ஏற்கனவே தொலைந்து போனவர்கள் தானே?
உடைந்து போயிருக்கும் ஒரு உள்ளத்தை
காதலித்துப் பாருங்கள்

அவர்களின் மனவெளியில் ஒரு நடை போடுங்கள்
நம்பிக்கை இன்மை தழைக்க முற்படும்
கருணை நதியும் அன்பு விதைகளும்
வேர்விட முற்படும் பிரபஞ்சத்தில்
அழகாய் முடிவற்றதாக அவர்கள் இதயம்
படபடப்பதை கண்டு பிரமிப்பீர்கள்
உடைந்து போய் இருக்கும் ஒரு உள்ளத்தை
காதலித்துப் பாருங்கள்

ஒரு நாள் அவர்கள் மீண்டு வருகயில்
இதுவரை பார்த்திராத
ஓர் அற்புதத்தை காண்பீர்கள்
கடந்த காலங்களை கடந்து
பீனிக்ஸ் பறவையாய் புகழில் உயர்வார்கள்
உலகை தைரியமாய் எதிர்கொள்ள துணிவார்கள்
கடந்த கால பயன்கள்
கண்ணாமூச்சி ஆடிய நிலைகள் கடந்து
புது பிறப்பாய் தெரிவார்கள்

அவர்களது அத்தனை கவலைகளும்
காணாமல் போன சுவடுகளை காண்பீர்கள்
ஒருவேளை நீங்கள் இருவரும் இணைந்தால்
இந்த உலகையே மாற்றும்
சக்தி பெறுவீர்கள் குறைந்தபட்சம் ஒரு
உடைந்த இதயத்தையாவது
மீட்டெடுக்கலாம் அல்லவா ?
உடைந்து போயிருக்கும் ஒரு உள்ளத்தை
காதலித்துப் பாருங்கள்

# கரிசல் மண்ணில் ஒரு காவியம்

## தொடர் நவீனம்

### அத்தியாயம் 7

நல்ல வேளை அந்தக் கல் கிழவியின் காலை மட்டும் காயப்படுத்தியது.இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. கமலாவின் அப்பா ஒரு பெரிய வீச்சரிவாளோடு வேகமாகப் பாய்ந்து வந்தார். அரிவாளே தொட்டும் பாராத அந்த மனிதர் கொலை வெறிக் கோபத்தோடு கொதித்து வந்தார். ஊரே கூடிவிட்டது வேடிக்கை பார்ப்பதற்கு. கமலாவின் அப்பாவை அக்கம் பக்கம் நின்றிருந்தவர்கள் அவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள்.

“உங்க அம்மாவுக்குதான் ஒன்னும் ஆகலில்லயே அப்புறம் என்ன!” என அவரை சமாதானப் படுத்தி அரி-வாளைப் பிடிங்கிக் கொண்டார்கள்.

“அட விடுங்கய்யா அந்தக் கல்லு எங்கம்மா தலையில விழுந்திருந்தா என்ன ஆயிருக்கும். அவ செத்திருந்தா உசுர யாருய்யா குடுப்பா. இன்னிக்கு இந்தப் பயல ரெண்டுல ஒன்னு நாங் பாதுர்ரேன். டேய் உன்னைய சும்மா விட மாட்டண்டா. உன்னப் போலிசில மாட்டிவிட்டு என்ன பண்ரேன்னு பாருடா.



கொ.பெ.பி.அய்யா.

நீ வாம்மா போலிசுக்குப் போகலாம்.” எனக்கூறி காவல் நிலையத்திற்குப் புறப்படத் தயாரானார்கள்.

அப்போது ஒரு பெரியவர் குறுக்கிட்டார். “யோவ் முத்துச்சாமி கொஞ்சம் பொறுமையா இருமைய்யா. போலிசு அது இதுன்னு போனா பல பல பிரச்சனைகள் வருமையா. போலிசுக்குப் போனா பிரச்சன முடிஞ்சிருமா? அவங் வந்து என்ன பண்ணுவாங் அங்குட்டு ஆயிரம் இங்குட்டு ஆயிரமுன்னு புடுங்கிக்கிட்டு மேலும் மேலும் பகையத்தான் வளத்து விடுவாங்க. அதெல்லாம் வேண்டாமய்யா எல்லாம் பேசித் தீத்துக்கலாம். ஊர்ப் பஞ்சாயத்துன்னு ஒண்ணு இருக்குல்ல. அதுல பாத்துக்கலாம்.”என அந்தப் பெரியவர் சமாதானப் படுத்தினார். இன்னும் கூட்டம் கூடி விட்டது.

இன்னொருவர் கூட்டத்தை துளைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார். “யோவ் என்னய்யா பேசுறீங்க! அந்தக் கல்லு படாத இடத்தில பட்டு அந்தப் பெரியம்மா செத்திருந்தா என்னய்யா ஆயிருக்கும்.”

“கொலகாரப்பாவி. ஒரு கொலை செய்ய முயற்சி பண்ணியிருக்காங் அவன ஊருக்கூட்டம் போட்டுப் பாராட்டப் போறீங்களா! இதுக்கெல்லாம் போலிசுக்குப் போனாதாங்யா சரியா வரும். நீ வாண்ணே நாம போலிசுக்குப் போலாம்.” அவர் எரியிற தீயில எண்ணையை ஊற்றினார்.

அப்போது வெள்ளை மீசைக்காரர் ஒருவர் நிதானமாக பொறுப்போடு பேசினார்.

“இந்தா பாரு முத்துசாமி நாங் சொல்றதக் கேளு! ஓங் வீட்ல ஒரு வயசுக்கு வந்த பொட்டப் புள்ள இருக்கு.பே ாலிசுக்குன்னு போகும்போது விஷயம் பெருசாயிரும் ஹ. போலிசுன்னு போனா பேப்பர்ல



வந்துரும்.வெளியூருக்கெல்லாம் தெரிஞ்சா ஒவொருத்தரும் ஒவ்வொரு விதமா பேச ஆரம்பிச்சுரு வாங்க. போலிசும் வேண்டாத கேள்வியெல்லாம் நோண்டி நொண்டிக் கேப்பாங்க அப்புறம் அசிங்கமாப்போயிரும்பா. அவனும் அப்படிப் பையன் இல்லப்பா. உங்க அம்மாவுக்கும் பேசத் தெரியலப்பா. பெத்த தாயப் பத்தி தப்புத் தப்பாப் பேசினா யார்தான் பொறுத்துக்கிட்டு இருப்பாங்கப்பா. சரி வா கூட்டதில பேசிக்கலாம்'' என நியாயம் பேசி முத்துசாமியின் கோபத்தை தணித்தார் அந்த மீசைக்காரர்.

கோபம் தணிந்த முத்துசாமி ‘‘கிழவி வாய வச்சுக்கிட்டு சும்மா இருந்தாத்தாதானே.''

அம்மாவின் மீது ஆவேசமானார்.

‘‘அட விடப்பா! அம்மாவ ஆஸ்பதிரிக்கிக் கூப்புட்டுப் போக வழியப்பாரு.

டேய் மாரிச்சாமி! வண்டியப்போடுரா! ஆச்சியை ஆஸ்பதிரிக்கிக் கூப்புட்டுப் போகலாம்.'' எனப் பெரியவர் முடித்ததும் நிலைமை சாகச நிலைக்குத் திரும்பியது. மாட்டு வண்டியும் தயாராகி வீட்டு வாசலுக்கு வந்தது. ஆச்சியைத் தூக்கி மாட்டு வண்டியில் ஏற்றினார்கள்.

அப்போது இன்னொருவர் ‘‘ஏம்பா முத்துசாமி இன்னொரு முக்கியமான விஷயம்பா! இந்தக் காயம் எப்படி ஏற்பட்டதுன்னு ஆஸ்பத்திரியில கேப்பாக. அப்ப சண்ட அது இதுன்னு உளறிக்கொட்டியிராத. அம்மா வீட்ல மாவாட்டிட்டு ஆட்டுக்கல்ல வெளிய எடுத்துக் கழுவும் போது அந்தக் கல்லு தவறி காலுல விழுந்து காயமாயிருச்சின்னு உண்மைய மாத்திச்சொல்லு. புரிஞ்சதா.

முத்துசாமியும் தலையை ஆட்டினார். வண்டியும் கிளம்ப ஆரம்பித்தது, மாரிசாமி, ‘‘ட்டர ....தே ..தே'' என வண்டியில் பூட்டிய மாட்டை புறப்பட ஆணையிட்டார். வண்டி மெல்ல நகர்ந்தது.

திடீரென ஒரு முரட்டுக்குரல். ''நிப்பாட்ரா வண்டிய'' என வண்டியை வழி மறித்து நிறுத்திய வேகத்தில் நேரா ராசாவிடம் போனார். யாரும் எதிர்பாராத

திருப்பமாக ராசாவை சட்டையைப் பிடித்து அப்படியே அலாக்காத் தூக்கினார்

**- தொடரும் -**

அர்ஜுன் இப்போது வருகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றவன் இன்னும் வரவில்லை. இப்போது நேரம் என்ன இருக்கும் என்று திரும்பி மதுரை பழங்காநத்தம் பஸ் ஸ்டாப்பில் உள்ள கடிகாரத்தைக் கவனித்த போது விடிகாலை 4.30 மணி என்றது. சாயங்காலம் 5 மணிக்கு அர்ஜுனோடு அவளும் பஸ் ஸ்டாப்பிற்கு வந்ததும் இருவரும் சர்பத் குடித்தனர்.

நான் போய் பெரியார் பஸ் ஸ்டாண்ட் போவதற்கு ஆட்டோ கொண்டு வருகிறேன் என்றான் அர்ஜுன்.

ஆட்டோ எதற்கு பஸ்ஸிலே போய் விடலாமே என்றாள் பத்மினி.

என் மகாராணியை வீணாக இந்த பஸ்ஸில் நெரிசலில் இடிபட விடுவேனா? என்று சிரித்து சொல்லிக் கொண்டே போனவன் திரும்பவேயில்லை.

இப்போது வந்து விடுவான் என்று நினைத்து இதில் அமர்ந்து தூங்கி போயிருக்கிறேன். இன்னும் வர வில்லை. என் நகைகளை கழற்றி பணம் பண்ணியதில் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்ட போது கூட அர்ஜுன் என்னை இப்படி ஏமாற்றி விட்டு போவான் என்று எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வது?

# இது ஒரு முடிவுரையல்ல... ஒரு முகவுரை

**- இராஜகை நிலவன் -**



பாம்பன் குளத்திலிருந்து நாகர்கோவில் பஸ்ஸில் டிக்கட் எடுக்க கூட பணம் இல்லாமல் வந்தவனிடம் பர்ஸை கொடுத்தேன், எவ்வளவு நம்பிக்கை வைத்து அவனோடு புறப்பட்டேன். நாகர்கோவிலில் புறப்பட்டு திருநெல்வேலி வந்து லாட்ஜில் ஒரு நாள் முழுவதும் நாம் தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறோமே என்று ஆசை காட்டி என்னை சக்கையாய் பிழிந்து விட்டு அடுத்த நாள் என் நகைகளை சுழற்றி மார்வாடி கடையில் வைத்து பணம் வாங்கிக் கொண்டு மதுரை வந்து இங்கிருந்து சென்னை போய் வாழ்க்கை நடத்தலாம் என்று ஆசை காட்டி என்னை அழைத்து வந்த அர்ஜுனை நான் இந்த அளவிற்கு நம்பியது எவ்வளவு பெரிய பேரிடியாக விழுந்து விட்டது. என் எதிர்காலம் எனக்குள்ளே இருட்டாக தெரிகிறது. என்ன செய்வது எழுந்து மெதுவாக டீக்கடை வந்த போது எதிரில் இரண்டு இளைஞர்கள் அவளைப் பார்த்து சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கையில் ஐந்து காசு கூட இல்லாமல் பத்மினி தவித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு முதல் முறையில் தனித்து விடப்பட்டது. உறைக்க ஆரம்பித்தது.

வீட்டிலே மாமா வீட்டிற்கு போய் விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பினேன். மாமா வீட்டிற்கு போயிருந்தால் வீட்டிலிருந்து யாராவது நான் எங்கே போனேன் என்று தேட ஆரம்பித்து விடுவார்கள் என எண்ணிய போது குபுக்கென்று கண்ணீர் வர ஆரம்பித்தது.

என்ன செய்யப் போகிறோம் என்று புரியாமல் அவள் தவித்துக் கொண்டிருந்த போது நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு போகும் பஸ்ஸில் வந்த டிரைவர் முருகன் அவளைப் பார்த்ததும் 'ஏய் பத்மினி. என்ன இந்த நேரத்தில் இங்கு நின்று கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டார்.

அவருக்கும் பாம்பன் குளம்தான் சொந்த ஊர். பத்மினியின் வீட்டிற்கு மூன்றாவது வீட்டில் தங்கியிருக்கிறார்.

'அது வந்து... வந்து...' என்று சொல்ல முடியாமல் தத்தளித்தவள் கண்டிப்பாக என்னைப் பற்றி இவருக்கு எதுவும் தெரிய வாய்ப்பில்லை என்று உணர்ந்த பிறகு, 'இங்கே மாமா வீட்டிற்கு வந்தேன். வீட்டிற்கு கிளம்பி வரும்போது ஆட்டோவில் என் பர்ஸை விட்டு விட்டேன். அதுதான் திரும்ப மாமா வீட்டிற்கு போவோமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்' என்றாள், தன் துக்கத்தை மறைத்துக் கொண்டு.

'இனி எதற்கு மாமா வீட்டிற்கு திரும்ப போக வேண்டும். இந்தா நூறு ரூபாய் வைத்துக் கொள். வீட்டில் வந்து வாங்கிக் கொள்கிறேன். அதோ பார் நாகர்கோவில் பஸ் நிற்கிறது. வேகமாக கிளம்பு' என்றார் முருகன்.

அழுகை பீறிட்டு வந்ததை அடக்கிக் கொண்டு வேகமாக கிளம்பினாள் பத்மினி. வீட்டில் பூகம்பம் வந்து முடிந்திருந்தது. அவள் மாமா வீட்டிற்கு போகவில்லை என்று தெரிந்ததும் அர்ஜுனையும் ஊரில் காணவில்லை என்று தெரிந்ததும், யாருக்கும் தெரியாமல் பத்மினியைத் தேட ஆரம்பித்ததில் பிரச்சனை ஆரம்பித்து அவளைக் கண்டதும் வீட்டிலுள்ள அனைத்து அங்கத்தினரும் நகை எங்கே? என்றும் எங்கே போயிருந்தாய் என்றும் கேள்விகளால் துளைத்து விட அப்பா மட்டும் கோபத்தால் பெல்ட்டைக் கழற்றி அவளை அடித்துத் தள்ளிவிட்டு ஆசைப் படுகிறேன் என்று சொல்லியிருந்தால் கூட உனக்கு அவனை திருமணம் செய்து வைத்திருப்பேனே பத்மினி. இப்படி ஒன்றுமில்லாமல் ஆகி வந்து நிற்கிறாயே என்று அழுதவாறு பெல்ட்டை தூர எறிந்து விட்டுப் போக பத்மினி ஒரு வாரம் கழித்து தன்னுடைய பழைய புத்தகங்களை ஒதுக்கிய போது கீழே விழுந்த அந்தக் கடிதத்தைப் பார்த்தாள்.

குமரேசன் அடுத்த தெருவில் வசிக்கும் தன் கல்லூரியில் படிக்கும். மாணவன் எழுதிய காதல் கடிதம். விரித்து வாசித்துப் பார்த்தாள்.

'நான் உறவினன் என்றாலும் தூரத்திலிருந்து உன்னைத் தரிசிக்கும் ஒரு ஏழை' என்று எத்தனையோ விதமாக எந்த விதத்திலும் அகம் பாவம் தொனிக்காமல் அழகாக தன் மனதை தெரிவித்திருந்தான்.

அவளுக்குச் சிரிப்பு வந்தது. 'நான் கொண்ட காதல் என் நகையோடு கற்பையும் சூறையாடிக் கொண்டு போனது. நீ என்னை ஒரு தலையாய் காதலித்து தேவதையாய் தரிசித்திருக்கிறாய்' என்று எண்ணியவாறு கடிதத்தை கிழிக்க முற்பட்ட போது வாசலில் நிழலாட, எட்டிப் பார்த்தான் குமரேசன்.

'வா…குமரேசா அப்பா, அம்மா எல்லோரும் தோட்டத்திற்கு போயிருக்காங்க' என்றாள்.

'நான் உன்னைத் தான் பார்க்க வந்தேன்'

'என்ன விஷயம்?

'உன் கையிலிருக்கும் கடித விஷயமாகத்தான்' என்று குமரேசன் சொன்னதும் கையிலிருந்த கடிதத்தை மறைத்தாள்.

'என்ன எதிர்பார்க்கிறாய்?'

'உன் பதிலைத்தான் பத்மினி'

'என்னை பற்றி உனக்கு என்ன தெரியும் குமரேசா?'

'அரசல் புரசலாக உன் அம்மா மூலம் எனக்கும் காதில் விழுந்தது.'

'நான் ஏற்கனவே ஒருவனைக் காதலித்தவள் என்பது..'

'தெரியும். அவனோடு ஓடிப் போய் நகைகளை இழந்துவிட்டு திரும்பவும் வீடு வந்ததும் தெரியும்'.

'என்னையே இழந்து விட்டு நான் வந்து நிற்பதை கண்டிப்பாக நீ தெரிந்திருக்க முடியாது குமரேசா'

'ஒரு பெண்ணைப் பற்றி அரசல் புரசலாக ஏதாவது கேள்விப் படும் போது ஒரு ஆண்மனம் முதலில் அவள் கற்பைப் பற்றிதான் கேள்வி எழுப்பும் பத்மினி. உன் தந்தையிடம் நீ சொல்லி அழும்போது நான் வாசல் வரை வந்து நின்று கேட்டு விட்டு உன்னைச் சந்திக்கும் மனநிலையில் அப்போது இல்லாமல் திரும்பி போனவன் நான்'.

'இனி இவ்வுலக வாழ்க்கைக்கு உபயோகமில்லாதவள் இந்தப் பத்மினி. என் வாழ்க்கையின் முடிவுவரை ஏற்கனவே எழுதப்பட்டு விட்டது'.

'அங்கே தான் நீ தப்புப் பண்ணுகிறாய் பத்மினி. வாழ்க்கையில் தவறு செய்தவர்கள் எல்லாம் தற்கொலை செய்து கொள்ள நினைத்தால் உலகமே சுடுகாடாகிப் போய்விடும்'.

'நான் உனக்கு லாயக்கில்லாதவள்'

'அப்படி ஏன் உன்னையே தாழ்த்திக் கொள்கிறாய். செய்த தப்பை மறந்து விட்டு கனவாக உதறி எறிந்து விட்டு வா. இனி நம் வாழ்க்கையின் முகவுரையை எழுத ஆரம்பிக்கலாம் பத்மினி'.

'குமரேசன் உண்மையாகவா சொல்கிறாய்' என்றாள் பத்மினி கண்களில் பொங்கிய ஆனந்தக் கண்ணீரோடு…



– ருக்மணி வெங்கட்ராமன் –

## சிறுகதை

# அந்த ஒரு நாள்..!

“வாங்க..! சரவணன் வாங்க வாம்மா.! தங்கச்சி. ரொம்ப நாளாச்சு பார்த்து.” என்று வரவேற்றார் மாதவன்.

“என் கூட வேலை பார்க்கும் ராஜுவின் பையனுக்கு பழனியில் கல்யாணம். போகிற வழியில் உன்னைப் பார்த்து விட்டு பஸ்ஸில் போகலாம் என்பது என் திட்டம் சரி...மாதவா..! நீ எப்படி இருக்கிற? பிசினஸ் எப்படிப் போகுது?”

“நல்லா போகுது. ஒரு மாதத்திற்கு கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் இலாபம் வருது. குளிச்சுட்டு ரெடியாகி டிரைவரை அழைச்சிட்டு கல்யாணத்துக்கு போயிட்டு வா” என்றவர், டிரைவர் மணியை அழைத்து **“**இவர் என்னுடைய நண்பன். அவர்களோடு பழனி வரை போயிட்டு வா”என்றார்.

“வேண்டாம் பா... நாங்க பஸ்ஸில் போகிறோம்.”

“டிரைவர் ரொம்ப நல்ல பையன். நம்ம வீட்டு மாடியில் தங்கி இருக்கிறான்.”

“எந்த ஊர்?”

“இந்த ஊர் தான். ரொம்ப கஷ்ட குடும்பம். நம்ம கடை பக்கத்தில உள்ள டீ கடையில வேலை செஞ்சுக்கிட்டு இருந்தான். தினமும் டீ கொண்டு வருவான். அப்ப ஒரு நாள் கடையில் இருக்கும் போது எனக்கு நெஞ்சு வலி. இந்த பையன் சட்டுனு என்னை தூக்கி காரில் உட்கார வச்சுட்டு சரியான நேரத்தில் மருத்துவ மனையில் சேர்த்தான். அதில் இருந்து அவனைக் கார் ஓட்ட டிரைவராக வச்சு இருக்கன்.”

இருவர் குடும்பமும் சேர்ந்து வீடே களைகட்டியது. இருவரின் மனைவிகளும் பேசி, சிரித்து மகிழ்ந்தனர்.

சரவணன் குடும்பம் திருமணத்திற்கு மதியம் காரில் புறப்பட்டனர்.

மாலை ஆறு மணிக்கு திருமண மண்டபத்திற்கு வந்தாயிற்று.

டிரைவர் மணி கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்தான்.

மறுநாள் காலை முகூர்த்தம் முடிந்து பழனி மலை முருகனைத் தரிசனம் செய்தனர்.

மாலை 5 மணிக்கு சரவணன் திருச்சிக்கு கிளம்பினார்.

ஒரு ஏழு மணி இருக்கும். கார் சட்டென்று நின்றது. பதட்டத்துடன் “என்ன மணி என்ன ஆச்சு?”

“காரில் ஏதோ கோளாறு. நீங்க உள்ளேயே இருங்க. நான் பார்க்கிறேன்” என்றான்.

“என்னங்க. இருட்டா இருக்கு. இரண்டு பக்கமும் காடு. நம்ப அசந்து தூங்கிட்டோம். இது எந்த இடம்?”என்று பயத்துடன் கூறினார் மனைவி.

“நாமும் இறங்கலாம்”

“கதவை திறக்க முடியவில்லையே”

காரின் பின்புறம் வைத்து இருந்தப் பெட்டியை மணி எடுத்துக் கொண்டு இருந்தான்.

அதே நேரம் சைரன் ஒலிக்க, போலீஸ் ஜீப் அவன் அருகில் வந்தது.

டிரைவர் சுதாரித்துக் கொண்டு காட்டுக்குள் ஓட முற்பட்டான்.

போலீசார் அவனைத் துரத்திக் கொண்டு ஓடினர்.

அவர்கள் மைக்கில் ஏதோ சொல்லிக் கொண்டே ஓடினார்கள். அவன் துப்பாக்கியால் போலீசாரை நோக்கிச் சுட்டான்.

பயத்தில் உறைந்து விட்டனர்.

“நாள் முழுவதும் ஒரு திருடனோட இருந்து இருக்கிறோம் .நினைச்சாலே குலை நடுங்குது.” என்று சரவணன்

பயத்துடன் கூறினார்.

சிறிது நேரத்தில் மூச்சு விட முடியாமல் சரவணனும் அவர் மனைவியும் மயங்கி விட்டார்கள்.

கண் விழித்துப் பார்த்த போது அரசு மருத்துவ மனையில்.

**“**என்ன ஆச்சு?” என்று அருகில் இருந்த நண்பனிடம் சரவணன் கேட்டார்.

“கடையில் வரும் பணத்தை தினமும் வங்கியில் மணி தான் பேங்க்ல செலுத்துவான். ரசீதை மொத்தமா பைல் செய்து கணக்காளரிடம் கொடுத்து விடுவான். ஒரு நண்பருக்கு கடன் கொடுத்து இருந்தேன். அவர் அதைத் திருப்பிக் கொடுத்து விட்டார். அந்தப் பணத்தையும் அவனிடம் கொடுத்து வங்கியில் போடச் சொன்னேன். கிட்டத்தட்ட ஐம்பது இலட்சம் ரூபாய்.

நேற்று மதியம் மூன்று மணிக்கு வங்கி மேலாளர் “ஒரு வாரமா பணம் செலுத்தலை.. என்ன ஆச்சு?“ என்று கேட்டதும் அவனுக்குப் போன் செய்தேன். அவன் போன் எடுக்கவில்லை.

உன்னை ஏதாவது செஞ்சா என்ன செய்வது என்று காவல் நிலையத்தில்

மனு கொடுத்தேன் . அவன் போட்டோ கேட்டனர்”.

போட்டோவைப் பார்த்து விட்டு “இவன் நாங்க தேடிட்டு இருக்கிற கொலைகாரன். அவன் பெயர் முரளி.” என்று கூறியதும் அதிர்ச்சியாக இருந்தது.

“உன்னுடன் அனுப்பி உள்ள விபரத்தை சொன்னதும் உன் நெம்பரை டிரேஸ் செய்யும் போது அது அசையாமல் இருந்தது. சந்தேகம் ஏற்பட்டதால் அந்த பகுதி காவல் நிலையத்தில் லொகேஷன் ஷேர் செய்தோம். அவர்களும் விரைந்து அங்குச் சென்றனர்.

போலீஸ் காரர்கள் துரத்த அவன் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே ஓடினான்.

சப் இன்ஸ்பெக்டர் ஆ.்.ப் போலீஸ் சுட உத்தரவு இட்டார்.

அவனது காலை குறி பார்த்து சுட்டனர் . அடிபட்டு கீழே விழுந்தான். உடனே அவனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.”

அந்த வழக்கு நீதி மன்றத்திற்கு விசாரணைக்கு வந்தது.

அவன் மேல் பல வழக்குகள். ஒவ்வொன்றும் வெவ்வேறு மாநிலங்களில்.

“இவன் தொடர் கொலைகாரன். நல்லவன் போல் நடந்து மற்றவர்களை நம்ப வைப்பதில் கில்லாடி.” என்று அவனைப் பற்றிக் காவல் அதிகாரி கூறினார்.

மாதவனை அழைத்து விசாரித்தனர். “அவனுடைய ஆதார், லைசன்ஸ் எல்லாவற்றையும் வாங்கி சரி பார்த்து விட்டு தான் வேலைக்குச் சேர்த்தேன். எல்லாம் டூப்ளிகேட் போல. ஆதார் சைட்டில் செக் செய்யவில்லை. ஒரு வருஷமா அவ்வளவு நல்லவனா இருந்தான்.”என்று கூறினார்.

சரவணனை அழைத்து விசாரித்தனர். ” ஒரு நாள் முழுவதும் அவனோடு இருந்து இருக்கிறீர்கள். உங்களுக்கு சந்தேகம் வரவில்லை யா?”என்று கேட்டனர்.

“சந்தேகம் வர மாதிரி அவன் நடத்தை இல்லையே... ரொம்ப பவ்யமாக நடந்து கொண்டான்.”

முரளியிடம் விசாரணை தொடர்ந்தது. தன்னைப் பற்றி கூறினான்.

“ஒரு மாநிலத்தில் என் கை வரிசையைக் காட்டினால் திரும்ப அங்கு போக மாட்டேன். இரண்டு நாட்களுக்கு முன்பே பணத்துடன் ஓட திட்டமிட்டேன். அவர் நண்பர் வந்ததும் நகையும் கிடைக்கும் என்று காத்திருந்தது தப்பாகி விட்டது.

ஒவ்வொரு இடத்திலும் பணம் எடுத்துக் கொண்டதும் அவர்களைக் கொலை செய்து விடுவேன்.”

“இந்த வீட்டில் மாதவன் சார் ரொம்ப நல்லவர். பலருக்கு உதவி செய்கிறார். அதனால் அவரை விட்டு விட்டேன். அவர் நண்பர் மாட்டினார். என் திட்டப் படி நகைகளை எடுத்துக் கொண்டு கார் கதவுகளை மூடி விட்டு அங்கிருந்து நகைகளுடன் தப்பிப்பது. என் போதாத காலம் பிடிபட்டு விட்டேன்”என்று தவறை ஒத்துக் கொண்டான்.

இறுதியில் நீதிபதி அவனுக்கு “ஆயுள் தண்டனை“ விதித்து தீர்ப்பு அளித்தார்.

அவனிடம் இருந்து கைப்பற்றிய பணத்தை மாதவனிடமும் , நகைகளை சரவணனிடமும் ஒப்படைத்தனர் .

”இது அனைத்தும் கவரிங் நகைகள்.”என்றார்.

அதை காதில் வாங்கிய திருடனுக்கு அவர்கள் மேல் கோபம் வந்தது. வந்து என்ன செய்ய?

சரவணன் எல்லோரிடமும் “கொலைகாரன் உடன் ஒரு நாள்“ என்ற இந்தக் கதையை சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

# கேளும்... கேளும்... கேட்டுப்பாரும்...

'தீரா' பதில்கள்

**கேள்வி: நாங்கள் எழுதும் கவிதைகள் குறித்து தாங்கள் ஏதும் கருத்துகள் சொல்வதில்லை**

**.- கவிஞர் பஞ்சநாதன் சின்னா -**

நற்றமிழ் வணக்கம் கவிஞரே! நீங்கள் எழுதும் கவிதைகள் சிறப்பாகத்தானே இருக்கிறது. இதில் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது கவிஞரே!. ஏன் யாராவது குறை கூறிவிட்டார்களா? அல்லது தங்களுக்கு ஏதும் சந்தேகம் வந்துவிட்டதோ. சந்தேகமே வேண்டாம். கவிதையாகத்தான் உங்களால் கவிதை எழுதப்படுகிறது

**கேள்வி: கவிதை சிறப்பாக இருந்திட ஆலோசனைகள், வழிமுறைகள் கூறுங்கள்**

**- மங்கையர்க்கரசி -**

நற்றமிழ் வணக்கம் கவிஞரே! ஆழமான கருத்துகளை குறைந்த எண்ணிக்கையிலான சொற்களில் கவிநடை கலந்து சுருக்கமாக எழுதுங்கள், நீங்கள் எதை எழுதினாலும் அது கவிதையாகும் புதுக்கவிதை. மூன்று வரிகளில், ஏழு (2, 3, 2) சொற்களில், நிகழ் காலத்தில் கற்பனை கலக்காது உண்மையை எழுதுங்கள் ஐக்கூ. மரபுக்கு யாப்பிலக்கணம் படித்தபின் மரபு விதிமுறைகளை பின்பற்றி எழுதுங்கள் மரபு.

**கேள்வி 13 : பெருகிவரும் முகநூல் தளங்கள் வளர்ப்பது ஒற்றுமையா? வேற்றுமையா?**

**- ஸ்ரீராமன் -**

நற்றமிழ் வணக்கம் கவிஞரே! அநேகமான குழுமங்களில் அவர்களது நிர்வாத்துக்குள்ளேயே ஒற்றுமையில்லையாம், எப்படி அவர்களால் ஒற்று மையை வளர்க்க முடியும். அதை சரி செய்வதற்கே அவர்களுக்கு காலம் போதாது ஆகையால் நிட்சயமாக அவர்க ளால் வேற்றுமையை வளர்க்க முடியாது... ஹ... ஹ.... ஹ... இவர்கள் கவிஞர்களையும், பெருவாரியான விருதுக ளுக்கு சொந்தக்காரர்களையும்தானே உருவாக்குவதாக நான் அறிந்திருக்கிறேன். மேலதிகமாக தெரிந்துகொள்ள ஆசியர் தலையங்கம் பாருங்கள்.

**கேள்வி: போட்டிக் கவிதைகள் மற்றும் குழும உறுப்பினர்கள் பதிவிடும் கவிதைகளில் சிறப்பானதும், சமூக சிந்தனையுடன்கூடியதுமான கவிதைகளைத் தேர்ந்தெடுத்து ஒரு தொகுப்பு நூலாக வெளியிட வளரும் இளம் கவிஞர்களுக்கு சிறந்த ஊக்கமாகவும், சிறப்பு அங்கீகாரமும் கிடைக்கப்பெறும். இது குறித்த தங்களின் மேலான கருத்தை அறிய ஆவலாக உள்ளேன்.**

**- அனுராதா சௌரிராஜன் - சென்னை**

நற்றமிழ் வணக்கம் கவிஞரே! நீங்கள்கூட மிக குறுகிய காலத்தில்தானே நூல்களை வெளியிட்டு, விருதுகள் வென்று பிரபல்யமானீர்கள். அந்த இரகசியத்தை வளரும் இளம் கவிஞர்களுக்கு எடுத்துக்கூறுங்கள் அவர்களே அந்த வழி யைப் பின்பற்றி வெளியிட்டுக்கொள்வார்கள். வெளியீட்டிற்கு நாங்கள் பணம் பெறும் வித்தை இன்னமும் நமக்கு புரியவில்லை. சொந்தமாக அச்சகம் ஆரம்பித்ததும் அந்தப் பணியையும் சோர்த்தே செய்கிறேன் கவிஞரே.

**கேள்வி 15 : இளைய படைப்பாளிகள் மூத்த படைப்பாளிகளை முந்திக்கொள்ள வாசிப்புத்தேவை. வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கத் தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?**

**- காசி ஜீவலிங்கம் - யாழ்ப்பாணம், இலங்கை.**

நற்றமிழ் வணக்கம் கவிஞரே!. நல்ல கேள்வி. இளைய படைப்பாளிகள் மூத்த படைப்பாளிகளை முந்திக்கொள்ள அவசியமே இல்லை சிறந்த அங்கீகாரத்துக்கான படைப்புகளை வெளியிட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டால் அதுவே போதுமானது. எனது கருத்தில் படைப்புலகத்தில் யாரும் யாரையும் முந்திக்கொள்ள முடியாது. ஒவ்வொருவருடைய படைப்பும் வெவ்வேறு விதத்தில் தனித் தன்மை வாய்ந்ததே. வாசிப்பு இளையவர்களுக்கு மட்டுமல்ல மூத்தவர்களுக்கும் அவசியமானதே. வயது அடிப்படையில் வாசிப்புக்கான போட்டிகளை பரவலாக தொடர்ந்து அனைத்துப் பிரதேசங்களிலும் நடாத்த வேண்டும். அதற்கு சிறந்த பரிசுகளை அறிவிக்க வேண்டும்.

**கேள்வி 16 : நான் சிறப்பாக எழுதுகிறேனா இல்லையா எனத் தெரியவில்லை. ஆனால் நல்ல விமர்சனம் தருகிறார்கள் நன்று, அருமை என. புத்தகத்தில் தொடர் கதை எழுத விருப்பம் உள்ளது ஆனால் எப்படி எழுதுகி றேன் என்று நானே பரிசோதனை செய்துகொண்டு இருக்கிறேன். இதற்கு பதில் தேடுகிறேன் உங்க பதில் தேவை.**

**ஜெயலட்சுமி குருசாமி - இராஜபாளையம் சென்னை.**

நற்றமிழ் வணக்கம் கவிஞரே. சிறந்த கருத்து. உங்கள் ஆக்கங்களுக்கு நன்று, சிறப்பு என மட்டும் குறிப்பிடுபவர் சிறந்த ஆய்வாளராக இருக்க முடியாது. தங்கள் படைப்பில் செய்ய வேண்டிய மாற்றங்கள், திருத்தங்கள், புதுமைகள் பற்றியும் குறிப்பிட வேண்டும் அவர்தான் சிறந்த ஆய்வாளர். நீங்கள் பார்த்ததை பார்த்தவாறு சொல்கின்ற எழுத்தை மட்டும் கடைப்பிடிக்கிறீர்கள். இதனோடு திருப்பங்கள், எதிர் பாராத மாற்றங்கள், வாசகர் எதிர் பார்ப்பை தூண்டும் நுட்பங்கள் போன்றவற்றை உங்கள் எழுத்துகளில் கவனத்தில் கொள்ளுங்கள். உங்களால் முடியும், விரும்பினால் வெளியீட்டுக்கு முன்னர் நம்பிக்கையான வேறு எழுத்தாளரிடம் கருத்தறிந்து பின்னர் வெளியிடுங்கள்.

# எங்கள் படைப்புகளை கொண்டாடுவோம்




ஈழத்துத் திரைப்பட வரலாற்றில் எப்போதுமில்லாத வகையில் அண்மைக் காலங்களில் அடுத்தடுத்து பல திரைப்படங்கள் வெளிவருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. திரைத்துறை சார்பான பரிபூரணமான அறிவோ அனுபவங்களோ போதுமானதாக இல்லாவிடினும் இருக்கக்கூடிய அனுபவங்களையும் அறிவையும், தேடிக்கற்கும் நல்ல நடைமுறையையும் மற்றைய திரைத்துறை சார் அனுபவங்களையும் தேடி அறிந்து தம் வசப்படுத்தி பலர் இந்தத் துறைக்குள் தம்மை ஈடுபடுத்தி தங்கள் திறமை-களை வெளிக்கொணர முயல்வது வரவேற்கத் தக்கதோடு மகிழ்ச்சியளிப்பதாகவும் அமைகின்றது. அது ஈழத்தின் திரைத்துறை வளர்ச்சிக்கு நல்லதொரு எதிர்காலத்தை அமைப்பதாகவே அமையும்.

எங்கள் படைப்புகளை நாம் கொண்டாட வேண்டியது மிக மிக அவசியமானது. என்ற அடிப்படையில் ‘இரவி’ சஞ்சிகையும் ஈழத்துத் திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், தொழில் நுட்ப வல்லுனர்கள் மற்றும் நடிகர்கள் அனைவருடனும் கைகோர்க்கும் நல்ல நோக்கத்தை வெளிப்படுத்தும் பொருட்டும் அவர்களை ஊக்கப்படுத்தும்பொருட்டும் ஈழத்துப் படைப்புகள் சார்பான பல்வேறு ஆக்கங்களை எமது சஞ்சிகையில் நாம் தொடர்ச்சியாக சஞ்சிகை ஆரம்பித்திலிருந்து வெளியீடு செய்து வருகிறோம். அந்த அடிப்படையில் இந்த இதழிலிருந்து எங்கட படைப்புகளை கொண்டாடுவோம் என்ற தலைப்பின் கீழ் தற்போது வெளிவரும் புதிய படைப்புகள் பற்றி சுருக்கமாக வெளிப்படுத்தும் இந்த பக்கம் அதற்கென உருவாக்கப்படுகிறது.




## ‘கூத்தாடி’

வெளியீடு: அசொன்வே பிக்சர்ஸ்

தயாரிப்பு: செல்வின் தாஸ்

இயக்குனர்: கவாஸ்கர் காளியப்பன்

இசையமைப்பாளர்: பிரதாப் கண்ணன்

திரைக்கதை வசனம்: கவாஸ்கர் காளியப்பன்



இந்தப்பக்கத்தில் இம்முறை இடம் பிடிக்கும் நம்மட படைப்பு ‘கூத்தாடி’. இந்த வருடத்தின் தொடக்கத்திலேயே எங்கட திரைப்படைப்பில் ஒன்றாகிய இந்த ‘கூத்தாடி’ என்ற திரைப்படம் 2026 மாசி மாதம் 01ஆம் திகதி விசேட காட்சியாக மட்டக்களப்பு செல்லம் திரையரங்கில் காண்பிக்கப்பட்டது. விசேட அழைப்பாளர்களுக்கும், ஊடகவியலாளர் களுக்கும் மற்றும் திரைக்கலைஞர்களுக்குமென காண்பிக்கப்பட்ட இந்த விசேட காட்சியில் பலர் கலந்துகொண்டு திரைப்படத்தைக் கண்டு இரசித்தமை குறிப்பிடத்தக்கது. மங்கல விளக்கேற்றல் மற்றும் விசேட மதிப்பளிப்பு நிகழ்வுகளோடு திரைப்படம் சார் சுருக்க அறிமுகத்தோடு திரைப்படம் திரையிடப்பட்டது.



திரைப்படத்தைத் தொடர்ந்து திரைப்படத்தில் அங்கம் வகித்த நடிகர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் அனைவரும் பார்வையாளர்களை சந்தித்ததோடு தங்களை அறிமுகம் செய்துகொண்டு ‘கூத்தாடி’ திரைப்படம் சார்பான பார்வையாளர்களின் கருத்துகளையும், பின்னூட்டல்களையும், சுருக்க விமர்சனங்களையும் கேட்டுத்தெரிந்துகொண்டனர். பர்வையாளர்களின் கருத்துக்களும் ஆர்வ வெளிப்பாடும் பொதுக்காட்சியை விரைவில் திரையரங்குகளில் வெளியிடுங்கள் என்ற அறைகூவலை விடுப்பதுபோன்று அமைந்திருக்கின்றது என்ற கருத்தை படத்தின் உருவாக்கக் குழுவினர் வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. திரையரங்குகளில் பொதுக்காட்சிகளை வெளியிடும் நாளை **‘எங்கள் படைப்புகளை கொண்டாடுவேம்’** என்ற தொனியோடு காத்திருக்கிறோம்.



சித்திரை மாதம். வானம் வெளுத்து இருந்தது. காற்றும் பலமாக வீசியது. காலநிலை அடிக்கடி மாறிய வண்ணம் உள்ளது. லதா படுக்கையை விட்டு எழுந்தாள். காலைக் கடன்களை முடித்துவிட்டு சுவாமி தரிசனம் செய்தாள். லதா இறைபக்தி உடையவள். வாசலில் அழகான கலர் கோலம் போட்டு சமயலறைக்குச் சென்றவள் அடுப்பை பற்ற வைப்பதற்கு அரும்பாடுபட்டாள்.

தான் பணி புரியும் அலுவலகத்திற்குச் செல்லத் தயராகி, அலுவலகப் பையைத் தூக்கிக் கொண்டு, தனது அறையில் இருந்த சுகந்தன் "லதா, உந்துருளிச் சாவியை எடுத்துக் கொண்டு வாங்க!" என்று அன்பாகக் கட்டளையிட்டான்.

லதா சமையலறையில், உணவுப் பொட்டலத்தில் மதிய உணவை எடுத்துக் கொண்டிருந்தாள். "கொஞ்சம் இருங்கோ சுகந்தன் எடுத்து தருகிறேன்" என்று சொல்லிக் கொண்டு, சுகந்தனது அறைக்கு வந்து, மேசையில் இருக்கின்ற உந்துருளிச் சாவியை எடுத்துக் கொடுத்தாள். சுகந்தனிடம் வந்து, "வருகின்ற வாரம் புத்தாண்டுக் கொண்டாட்டம் வருகிறது. அதற்கு குழந்தைகள் இருவருக்கும் புதிய ஆடை எடுக்க வேண்டும்" என்று கூறியபடி உணவுப் பொட்டலத்தையும் சாவியையும் அவனிடம் நீட்டினாள்.

அவற்றை வாங்கிக் கொண்டு, அவளைப் பார்த்துப் புன்னகைத்தவாறு "சனிக்கிழமை எடுப்போம்" என்று கூறியவாறு புறப்பட்டான் சுகந்தன்.

"சரி சுகந்தன்" என்று முறுவலித்தாள் லதா.

வீட்டுக்குள் சென்று சமையலறையில் இருந்த, பாத்திரங்களை தூய்மைப்படுத்தினாள் லதா. பின்பு படுக்கை அறைக்குள் வேகமாக நுழைந்தாள். கட்டிலில் பஞ்சு மெத்தையில், முயல் குட்டியைப் போல, படுத்துக் கிடந்த தனது குழந்தைகளை எழுப்பினாள்.

"குட்டிகளே எழும்புங்க!"

குழந்தைகள், நித்திரை மயக்கத்தில் லதாவைப் பார்த்தன.

# புத்தாண்டுக் கொண்டாட்டம்



- ஜெனனி. மோ -

"அம்மா அம்மா அப்பா வந்து விட்டார்" என்று கத்தினான் சிறுவன் அபி. சுகந்தன் வீட்டிற்குள் நுழைந்தார் .

"வாங்க, இவ்வளவு தாமதம் ஏன் ?" என்றாள் லதா .

"நண்பன் சுதனின் மகளது முதலாவது பிறந்த தினம். அலுவலக ஊழியர்கள் எல்லோரும் சென்றோம். அதுதான் கொஞ்சம் நேரமாகிவிட்டது." என்று கூறியபடி தனது அறைக்குச் சென்றான்.

சில மணித்துளிகளின் பின்பு

"லதா, லதா" என்று மகிழ்ச்சியுடன் அழைத்தபடி சமையலறைக்குள் நுழைந்தான் சுகந்தன் .

"என்னங்க ,ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள்"

"ஆமாம் லதா , நாங்கள் நாளை குழந்தைகளுக்கு புத்தாடை எடுக்க போவோம்"

"அப்படியா சந்தோசம். உங்களுக்கு வேலை இல்லையா நாளை?"

"விடுமுறை கேட்டேன். கிடைத்துள்ளது"

"நான் ரொம்ப சந்தோசமாக இருக்கிறேன்." என்றாள்.

மறுநாள் காலை புத்தாடை எடுக்கச் சென்றனர். தெருக்களிலும், வீடுகளிலும், புடைவையகங்களிலும் எங்கெங்கும் புத்தாண்டை எதிர்நோக்கும் மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்தது. லதா புத்தாண்டுக்கான இனிப்பு வகைகளை செய்வதில் முனைப்போடு ஈடுபட்டிருந்தாள்.

மறுநாள் காலை குளித்துவிட்டு, புத்தாடைகள் அணிந்து மகிழ்ச்சியோடு புத்தாண்டைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

புத்தாண்டு வந்து விட்டால் வீடே விழாக்கோலம் பூண்டு விடும். இன்னும் சிலமணி நேரங்களில் பிறக்கப் போகும் புத்தாண்டைக் கொண்டாடுவதற்காக சுகந்தனும் லதாவும் தங்களை ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தனர்.

வீட்டு வாசலில் கலர் கோலங்கள் போட்டு சூரிய உதயத்திற்கு முன்பே மண் பானையில் பொங்கினாள். சுவாமிக்கு படைத்து விட்டு, இலை போட்டு சர்க்கரைப் பொங்கலை உண்டனர்.

“புது வருடம் பிறக்க இன்னும் பத்து நிமிடங்கள் கூட இல்லை..? பட்டாசுகளை எடுங்கள். வெடிக்க வைத்து பிள்ளைகளுக்கு காட்டுவம்..”என்றாள் லதா.


சுகந்தனும் பட்டாசுகளுடன் தயாரானான்.

சக்கர வானம் வெடித்து குழந்தைகளுக்கு மகிழ்வூட்டினான். குழந்தைகளும் சிரித்து மகிழ்ந்தனர். பட்சணங்கள், பட்டாசுகள் என்று புத்தாண்டு களைகட்டிய நேரம்.

“இன்றைக்கு எங்கே போறது”

“உங்களை நான் ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்லவுள்ளேன். தயாராகுங்கள்.” என்றான்.

முகம் முழுதும் பரந்த




மகிழ்ச்சியோடு, புறப்பட தயாரனார்கள்.

“முச்சக்கர வண்டி ஒன்று வந்து நின்றது. அதில் நால்வரும் ஏறிச் சென்றனர்.”

முதலில் விநாயகரை வழிபட்டுவிட்டு பின்பு முச்சக்கர வண்டியில் ஏறி புறப்பட்டனர்.

முச்சக்கர வண்டி மேடு பள்ளம் நிறைந்த பாதையூடாக சென்றது. முப்பதுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் அடைக்கலம் தேடிய அன்னை இல்ல வாசலில் நின்றது. நால்வரும் இறங்கிச் சென்றனர்.

வறண்டுபோன நம்பிக்கைகளை சுமந்த அந்த சிறுவர்கள் புத்தாடை, பட்டாசுடன் வரும் இவர்களைப் பார்த்து புதுமலர்ச்சியுடன் புன்னகைத்தனர்.

சுகந்தனும், லதாவும் தம் குழந்தைகளோடு அந்த அன்னை இல்லத்தில் புத்தாண்டன்று சிறுவர்களுக்கு புத்தாடை, பட்டாசு, பட்சணம் கொடுத்து தங்கள் மகிழ்ச்சியை கொண்டாடினர்.

“என்ன சந்தோசம்தானே?” என்று முகமலர்ச்சியோடு கேட்டான் சுகந்தன். அதற்கு லதா

“மிக்க சந்தோசம். இந்த புத்தாண்டு பண்டிகையை நான் மறக்கவே மாட்டேனு சொல்லி புன்னகைத்தாள்”.

**- முற்றும் -**

உங்கள் படைப்புகளுக்கான விமர்சனம் எமது சஞ்சிகையில் வெளிவரவேண்டும் என விரும்புவோர்

உங்கள் படைப்பின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள். முன்னுரிமை அடிப்படையில் நூல்களுக்கான ஆய்வுரைகள் 'இரவி" சஞ்சிகையில வெளியிடப்படும். நூல்களை அனுப்ப iravi.magazine@gmail.com என்ற எமது

மின் அஞ்சல் முகவரியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.




# சிலம்பம் போட்டி
# 69 பதக்கங்களை வென்ற இலங்கை அணி

உலக வெற்றிக்கேடயத்துக்கான சிலம்பம் பாரம்பரிய விளையாட்டு கலைப்போட்டி 2026. 69 பதக்கங்களை வென்ற இலங்கை அணி

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் சிலம்பம் சுற்றும் விளையாட்டும் ஒன்று. முன்னைய காலத்தில் இது அநேகமான நிகழ்வுகளில் ஒரு பிரதானமான போட்டி நிகழ்வாக இடம்பெறுவது வழக்கம். கால மாற்றத்தோடு தமிழர் கலை சார்ந்த இந்த விளையாட்டு மெல்ல மெல்ல அருகத் தொடங்கியது. இதனை மீண்டும் உயிர் பெறச் செய்வதற்கான முயற்சியில் சிலம்பம் ஆர்வலர்கள் பலர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். இந்தியாவில் குறிப்பாக தமிழர் பிரதேசங்களில் பல இடங்களில் இன்றும் இந்தச் சிலம்பக் கலை நிகழ்வு பெயர்பெற்று விளங்குகிறது.

சிலம்பாட்டக் கலையை நிலைபேறுடையதாகச் செய்யும்பொருட்டு சிலம்பக்கலையில் ஈடுபடும் கலைலஞர்களுக்கிடையிலான உலகளாவிய போட்டி ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றுவருகிறது. ,J சிலம்பக்கலைக்கான உலக வெற்றிக்கேடயத்துக்கான நிகழ்வாகவே இடம்பெற்றுவருகிறது. இந்த வருடம் இடம்பெறும் சிலம்பக்கலைப்போட்டி நிகழ்வு 2வது உலகக்கோப்பை நிகழ்வாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது உலகக் கோப்பைக்கான சிலம்பக்கலைப் போட்டி நிகழ்வானது 2026 மாசி மாதம் 13, 14 மற்றும் 15ஆம் திகதிகளில் இந்தியா தமிழ் நாட்டின் ஒசூரிலுள்ள அதியமான் விளையாட்டரங்கில் இடம்பெற்றுள்ளது. இந்தப் பாரம்பரிய சிலம்பம் கலைவிழாவில் 10ற்கும் அதிகமான நாடுகள் பங்குபற்றியிருந்தன.

இந்தப்போட்டியில் நமது (இலங்கை) நாட்டின் மலையகத்தைச் சேர்ந்த வீரர்களும் பங்கு பற்றியிருந்ததோடு அந்த வீரர்கள் இலங்கைக்காக 29 தங்கப்பதக்கங்களை சுவீகரித்து உலகக்கோப்பைப் போட்டியில் 2வது இடத்தைக் கைப்பற்றியுள்ளார்கள். 1வது இடத்தை இந்திய வீரர்களின் அணி கைப்பற்றிக்கொண்டது. இலங்கை வீரர்கள் தங்கப்பதக்கங்களோடு 16 வெள்ளிப் பதக்கங்களையும், 24 வெண்கலப் பதக்கங்களையும், பெற்று மொத்தமாக 69 பதக்கங்களை இலங்கை மண்ணுக்காகப் பெற்றுக்கொடுத்துள்ளனர். இது இலங்கை மண்ணுக்கு பெருமைசேர்க்கும் ஒரு நிகழ்வாக கொண்டாடப்படவேண்டியது.

இந்த வெற்றி எதிர்காலத்தில் இலங்கையை சிலம்பக்கலை செயற்பாட்டில் அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் ஒரு வெற்றியாக கருதுவதோடு மேலும் பலரை சிலம்பக் கலையில் ஈடுபடுத்தும் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் அமையும் பங்குபற்றிய அனைத்து வீரர்களுக்கும், இந்த வீரர்களை பயிற்றுவித்த அனைத்துப் பயிற்றுவிப்பாளர்களுக்கும், இலங்கை அணியை தலைமையேற்று வழிநடாத்திய ஆசான் திரு. ரா. திவாகரன் அவர்களுக்கும், ஏனைய அனைத்து ஒழுங்கமைப்பாளர்களுக்கும் 'இரவி' குழுமம் உளம் நிறைந்த வாழ்த்தையும் பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கிறது.

இந்த சிலம்பம் உலகக்கோப்பைக்கான போட்டியை உலக சிலம்ப சம்மேளனங்களின் ஒன்றியம் (வோல்ட் யூனியன் ஒப் சிலம்பம் பெடரேசன் - World Union of Silambam Federation) என்ற அமைப்பு ஒழுங்குபடுத்தி நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

# “எங்கள் கதைகள் உலக அரங்கில் அங்கீகரிக்கப்படுவது பெருமையாக உள்ளது“



இலங்கை வம்சாவழியாக அவஸ்திரேலியாவில் வாழ்ந்துவரும் சக்தி என அழைக்கப்படுகின்ற எஸ். சக்திதரன் சர்வதேசத்தில் புகழ் பெற்ற உயரிய விருதாகிய வின்டஹ்ம் கம்பெல் (Windham Campbell) என்ற விருதினை பெற்று இலக்கிய உலகிற்கு சர்வதேச அளவில் பெருமை சேர்த்துள்ளார். இந்த விரு-தானது மிகவும் இரகசியமான முறையில் படைப்புகள் ஆய்வு செய்யப்பட்டு தேர்வுக்குட்பட்டு வழங்கப்படும் விருதாகும். அதே வேளை இந்த விருது எழுத்தாளர்களுக்கு உலகளவில் சிறந்த அங்கீகாரத்தை வழங்கும் ஒரு விருதாக அங்கீகாரம் பெற்றது என்பது முக்கியமானதாகும்

1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து இடம் பெயர்ந்த இவரது குடும்பம் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. அங்கு அவர் தனது கலைப்படைப்புகளில் ஈடுபட்டு வந்தார். இவரது நாடக மாகிய கவுன்டிங் அன்ட் கிறாக்கிங் (Counting and Cracking) என்ற நாடகம் உலக அளவில் பெரும் வரவேற்பைப்பெற்றதோடு பிரபல்யம் பெற்று விளங்கிதும் குறிப்பிடத்தக்கது. இது புலம்பெயர் வாழ்வை மையப்படுத்தியதாக எழுதப்பட்ட நாடகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விருது வென்ற சக்தி தனது அடைவையிட்டு குறிப்பிடுகையில் **“எங்கள் கதைகள் உலக அரங்கில் அங்கீகரிக்கப்படுவது பெருமையாக உள்ளது.“** எனக் குறிப்பிடுகிறார்.

ஆசிய மக்களின் வாழ்வியலை மையப்படுத்தியதாக இவர் எழுதி வரும் பல படைப்புகள் அவுஸ்திரேலிய இலக்கியப்பரப்பில் அதிக செல்வாக்கைச் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இவர் அவுஸ்திரேலியாவின் விக்டோரியன் இலக்கிய விருதை ஏற்கனவே பெற்றமையோடு மேலும் பல விரு-துகளை ஏற்கனவே பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இவர் இலங்கையில் “த லாப் ஒப் லக்சுமி“ (The Laugh of Lakshmi) என்ற திரைப்படத்தைப் படமாக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணம் நல்லூர் அருகில் அமைந்துள்ள கைலாச பிள்ளையாரினதும் கைலைநாதரினதும் ஆலயங்கள். 70 வருடங்களுக்கு முன்னைய தோற்றம்

- நன்றி ஸபாஸ் -